# ஒரு துளி இரத்தம்

960

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

மூலம்: ஷேக்ஸ்பியர்...
தமிழ்: ஊடுருவி: நிலவொளி

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

கலை மன்றம்
சென்னை-1

Univ. Grants Commission.

வெளியீடு: 143
முதற் பதிப்பு நவம்பர் '54
உரிமை உடையது

விலை ரூ. 2—0—0

126969
O31:2J64
J4

விற்பனை நிலையம்:
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனு பஜார், சென்னை-1

# பதிப்புரை

உலக மகாகவி ஷேக்ஸ்பியர் தீட்டிய நாடகங்களில் வெனிஸ் வணிகன் **(MERCHANT OF VENICE)** என்ெறாரு நாடகம் உண்டென்பது அநேகர் அறிந்ததே. அந்நாடகப் பாத்திரங்களை மாற்றாது மூல ஆசிரியரின் வசனங்களைத் திரித்துச் சுருக்காது. விளக்கமாக, ஆனல் படிப்போர் நலம் நாடி, நாடக வடிவலன்றி, கதை வடிவில் "ஒரு துளி இரத்தம்" என்ற தலைப்பில், தமிழில் ஆசிரியர்கள் நிலவொளியும், ஊடுருவியும் சேர்ந் தாக்கிய இந்நூலை வெளியிடுகின்றோம்; தமிழ் மக்கள் அனைவரும் படித்தின்புறுவார்கள் என்ற நம்பிக்கையுடன்.

இங்ஙனம்

கலைமன்றத்தினர்.

## ஊடுருவியின் உன்னத நூல்கள்

| | |
|---|---|
| மதங்கள் | [இங்கர்சால்] |
| மூடநம்பிக்கை | ,, |
| அறியாமை | ,, |
| உண்மை | ,, |
| கோயில்கள் | ,, |
| கடவுள் | ,, |
| மக்கள் உரிமை | ,, |
| சீர்திருத்தம் | ,, |
| நான் ஏன் நாத்திகன் | ,, |
| அரசாங்கம் | [லெனின்] |
| தொழிலாளர் | [மாஜினி] |
| கலிங்கப்போர் | |
| ரோமியோ ஜூலியத் | |
| லைலா-மஜ்னு | |
| வீரமங்கை ஜோன் | |
| நெப்போலியன் | |
| தா நா | [எமிலிஜோலா] |
| உலகைத் திருத்திய உத்தமர்கள் | |
| ஒளி விளக்குகள் | |
| மாஜி கடவுள்கள் | |
| சீனத்துச் சிங்கம் | |
| ரஸ்புடீன் | |
| ஆகஸ்டு ஆறு | |

# 1. பெருந்துயரிலும் பெருந்தன்மை

"நான் வருந்துகின்றேன்; ஆனல், சலாரினே, உண்மையில் அதன் காரணம் எனக்கே தெரியாது"

"அண்டோனியோ, நீர் வருத்தமாகக் காணப்படுவது எமக்குப் பெரும் வேதனை அளிக்கின்றது"

"சலாரினே, நான் வருந்துவதால் எனக்குத்தான் பெரும் வேதனை ஏற்பட்டுள்ளது. ஆனல், என்னுடைய அகத்தினுள்ளே ஏற்பட்டுள்ள வருத்தம் குறிப்பாகவே என் முகத்தில் தெரிகிறது. அத்தோற்றமே உன்னையும் சோலானியோவையும் வேதனையில் வதைப்பதாக்க கூறுகின்ருய்!"

"ஆம், அண்டோனியோ அத்தகைய வருத்தம் உன் உள்ளத்துள் ஏன் ஏற்பட்டது என்று உன்னல் கூற முடியாதா?" என் வினவினன் சோலானியோ.

"நண்பர்களே, எனக்கு ஏற்பட்டுள்ள வேதனை எதனுல் ஏற்பட்டுள்ளது? எப்படி ஏற்பட்டுள்ளது? ஏன் ஏற்பட்டுள்ளது? எதனுல் ஆனது? எங்கிருந்து உண்டாவது? எப்படி அதை நானே உணர்ந்துள்ளேன்? என்ற கேள்விகளுக்கு உண்மையில் எனக்கு விடையளிக்கத் தெரியவில்லை. இக் கேள்விகளுக்கான விடைகளை நான் அறிய இன்னும் சிந்தனையி லாழ்ந்துள்ளேன்" என்ருன் அண்டோனியோ.

வெனிஸ்நகர பெருவீதி ஒன்றில், அரசகுடும்ப உறவினர்கட்குச் சரிநிகர் செல்வமும், சிறப்பும் படைத்த பெருவணிகன் அண்டோனியோவும், அவனின் அன்பு

UNIVERSITY MADURAI

மிக்க நண்பர்களான சலாரினே, சோலானியோவும், நடந்துகொண் டிருந்தார்கள். அண்டோனியோ பல கப்பல் களில் பொருள்களை ஏற்றியனுப்பி, வேற்று நாடுகளில் வாணிபம் செய்து பொருள் திரட்டி, அளவிடற்கரிய செல்வம் குவித்திருந்தான். அவன் கிருத்துவ மார்க்கத் தினன், இல்லை என்று இரப்போர்க்குத் தன்னிடம் உள் ளதை, இல்லை என்று கூறாது ஈயும் குணம் படைத்திருந் தான். அவன் நண்பர்களில் யாரேனும் ஒருவர் அவனுட னேயே எப்போதும் இருப்பர். அண்டோனியோ தன் நண்பர்கள் மீது அளவிடற்கரிய அன்பு கொண்டிருந்தான். நண்பர்களுக்காக எதையும் துணிந்து செய்வான்.

நற்பெரும் குணம்படைத்த அண்டோனியோ, கப்பல் களில் பொருள்களை ஏற்றி வியாபாரத்திற்காக வெளிநாடுக ளுக்கு அனுப்பியிருந்தான். கப்பல்களில் பொருள்கள் ஏற்றி அனுப்புவதென்றால் மிக எளிதான காரியமன்று. கடலில் சரக்குகளுடன் செல்லும் கப்பல்கள் விரும்பிய கரை சேர்ந்து திரும்பும் என்பது நிச்சயமன்று. வழியில் கடற் கொள்ளைக்காரர்களாலும், கடும் புயலினாலும், பெரும் பாறைகளினாலும் ஏற்படும் எதிர்பாராத ஆபத்துகளி லிருந்து தப்பினால்தான், கப்பல்கள் கடலைக் கடந்து, கரை சேர்ந்து, வாணிபம் நிகழ்த்தி, பொருள் திரட்டித் திரும்ப முடியும். இந் நிலைமையில் சரக்குகளை ஏற்றி வெளி நாடுக ளுக்கு அனுப்பியிருக்கும் கப்பல்களின் மீது சிந்தனை செல்லும்போது அண்டோனியோவுக்குச் சித்தம் கலங்கி, முகத்தில் வருத்தக்குறி தோன்றுவது இயற்கையே! அதனால், அண்டோனியோவின் நண்பர்கள் சலாரினோவும், சோலானியோவும் அண்டோனியோவின் வருத்தத்திற்குக் காரணம் வினவ முற்பட்டனர். ஆனால், அண்டோனியோ

"என் மனதில் குடிகொண்டிருக்கும் வருத்தம் என்னையே நான் புரிந்துகொள்ள முடியாத ஒரு மதியிலியாக்குகின்றது. அதனால், அவ் வருத்தத்திற்குக் காரணம் என்னால் கூறமுடியவில்லை" என்றான்.

அண்டோனியோவின் வார்த்தையைக் கேட்ட சலாரினோ, அவன் சூழ்நிலையை மனதிலெண்ணி, "அண்டோனியோ, உன் எண்ணம் கடல்மீது செல்லுகின்றது. உன் கப்பல்கள் கண்காட்சிப் பொருள்கள் போல் கம்பீரமாகக் கடலில் மிதந்து செல்லுகின்றன. அவற்றின் அருகில் செல்லும் சிறு கப்பல்களோ உன் பெரும் கப்பல்களின் அசைவினால் ஏற்படுகின்ற அலைகளில் அகப்பட்டு அலைந்து செல்வது, கரையில் புகழ்பெற்ற மனிதர்கள் முன் சாதாரண குடிமக்கள் தாழ்ந்து வணங்குவது போன்று காணப்படுகின்றது. அத்தகுச் சிறப்பு பெற்றிருக்கும் உன் வாணிபக் கப்பல்களைப் பற்றித்தான் நீ எண்ணி வருந்துகின்றாய் என்று நினைக்கின்றேன்." என்றான்.

"இல்லை, சலாரினோ. என் எண்ணம் கடல்மீது செல்லவில்லை." என்று பதிலளித்தான் அண்டோனியோ.

"உன்னைப்போன்று பெரும் வியாபாரக் கப்பல்களை ஆபத்துமிக்க கடல்மீது செல்ல விட்டிருப்பின், நான் அவற்றைப்பற்றியே எண்ணிக் கொண்டிருப்பேன். அது மட்டுமன்று, அண்டோனியோ, ஒரு புல்லைப் பிடுங்கி, அதன் இலையைக் காற்றுவெளியில் நிறுத்தி, என் கப்பல்கள் கடலில் செல்வதற்குச் சாதகமான திசையில் காற்று வீசுகின்றதா என்று கவனித்துக் கொண்டும், தேசப்படத்தைப் பிரித்துவைத்து, எங்கெங்குத் துறைமுகங்களும், கப்பற்துறை வளைவுகளும், கடல் வழிகளும் காணப்படுகின்

றன என்று எப்போதும் பார்த்துக் கொண்டிருப்பேன். என் வாணிபப் பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கக் கூடிய இடைஞ்சல்கள் ஒவ்வொன்றையும் நான் அறிந்து அஞ்சுகின்றபோது உண்மையில் எனக்கு வருத்தம் ஏற் படும்” என்ருன் சோலானியோ.

“ஆனல், எனக்கு அத்தகைய வருத்தம் தற்போது எழவில்லை, சோலானியோ” என்று மொழிந்தான், சோர் வுற்ற முகத்துடன், அண்டோனியோ.

அண்டோனியோ, உன்போன்று என் கப்பல் கடலி லிருந்தால் நான் குடிக்க வைக்கப்படும் குழம்பின் (சூப்) சூடு என் மூச்சின் விளைவால் ஏற்பட்ட காற்றினல் ஆறிடும்போதுகூட கடலும், கடலில் செல்லும் என் கப்பலும், பெரும் காற்றும் என் நினைவிற்கு வந்து என்னை நடுக்கத்திற்கல்லவோ உள்ளாக்கும். நாழிதோறும் கடலி லுள்ள ஆழமற்ற திடர்களிலும், மணற் படுகைகளிலும் என் கப்பல் எங்குச் சொருகி, பாய்மரம் முறிந்து மூழ்கி விடுகின்றதோஎன்றல்லவோ எண்ணி அஞ்சிக்கொண்டிருப் பேன். அதுமட்டுமா! கோவிலுக்குச் சென்று அங்குள்ள கற் கட்டடத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதை ஒழித்து, கடலில் செல்லும் என் கப்பல் மீது உராய்ந்து, வாசனைத் திரவியங்களெல்லாம் கடலில் சிதற, பட்டுத் துணிகளெல் லாம் அலைகளுக்கு ஆடைகளாகக் கூடிய அளவிற்கு நாசம் விளைவிக்கின்ற பெரும் பாறைகளையன்றோ எண்ணிக் கொண்டிருப்பேன்! இப்படிப் பெருத்த செல்வத்திற்கு அதிபதியாக இருக்கின்ற நான், மற்ருெரு சமயம் எதிர் பாராதபடி கடலில் ஏற்படுகின்ற தொல்லையால் ஏதுமற்ற வறியவனுகக்கூடிய நிலையை எண்ணி, அஞ்சி, வருந்துவேன். அண்டோனியோ நீ எனக்குச் சொல்லாவிடினும் நான்

அறிவேன்; நீ உன் வியாபாரத்தைப் பற்றிச் சிந்தித்து வருந்துகின்றாய்!" என்றான் சலாரினோ.

அண்டோனியோ, சலாரினோவின் பேச்சை மறுத்து, "நான் வியாபாரத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை. நான் அதைப்பற்றி எப்படிச் சிந்திக்கமுடியும்? என்னுடைய வாணிபச் சரக்குகள் ஒரே ஒரு கப்பலிலா உள்ளன! அல்லது ஒரே ஓர் இடத்திற்குத்தானா என் சரக்குக்கள் செல்லுகின்றன! இஃதன்றி, என் சொத்தும் கடனும் இந்தாண்டு ஏற்படப் போகின்ற இலாப நஷ்டத்தை எதிர் பார்த்தா அமைந்துள்ளன? என்னுடைய பொருள்கள் பல கப்பல்களில் பல்வேறு இடங்களுக்குச் செல்லுகின்றன. அதனால், எனக்கு வியாபாரத்தைப் பற்றிக் கவலை கிடையாது" என்றான்.

"அப்படியாயின், காதல் விஷயத்திலோ!" என்று ஏளனமாகக் கேட்டான் சலாரினோ.

சலாரினோவின் வார்த்தையைக் கேட்ட அண்டோனியோ "சீச்சீ! என்ன உளறுகிறாய்!" என்று அன்பால் கடிந்துகொண்டான்.

"காதலன்றெனில், பின் என்ன? நீ மகிழ்ச்சியாகக் காணப்படாதக் காரணத்தாலன்றோ நீ துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றாய் என்றுகூறுகின்றோம். அதை மறுத்துரைத்துச், சிரித்து விளையாடி, மகிழ்ச்சியாக இருப்பதாக நீ எளிதில் கூறமுடியுமன்றோ! அண்டோனியோ, விண்ணுலகத்திற்குச் செல்லும் வழியிலுள்ள பூவுலக வாயிலைக் காவல் புரிய இரு தலை **ஜானஸ்** தேவதை ஏற்பட்ட காலத்திலிருந்து இயற்கை இருவித, அபூர்வ குணம் படைத்த, மனிதர்களை உண்டாக்கியுள்ளது. ஊது வாத்தியக்காரர்களைக் கண்டு கிளிகள் சிரிப்பதுபோன்று, மனிதருள் ஒருசாரார் எப்

போதும் உரக்கச் சிரிக்கின்றார்கள். அறிவு முதிர்ந்த, பைலோஸ் நாட்டு மன்னன் **நெஸ்டார்** கூட உணர்ந்து சிரிக்கக்கூடிய ஒரு கேலிப்பேச்சை, மனிதரில் மற்றொரு சாரார், கேளாக் காதினராய், உணரா உள்ளத்தினராய், சிறிது புன்னகை கூட புரியாதிருப்பர்" என்று, நண்பர்களின் கேலிப் பேச்சைக் கேட்டுக்கூட அண்டோனியோ புன்னகை புரியாது, மகிழ்ந்து குலவாது துக்கத்தில் ஆழ்ந்திருப்பதை வெறுத்துக் கூறினான் சலாரினோ.

சலாரினோவும், சோலானியோவும் அண்டோனியோவுடன் உரையாடிக் கொண்டே வீதியில் நடந்து கொண்டிருந்தபோது பஸ்ஸானியோ, லோரென்ஸோ, கிரேஷியானோ என்ற மூன்று நண்பர்கள் எதிரே வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்ட சோலானியோ, "அண்டோனியோ, இதோ, உன் உறவினன், மதிப்புக்குரிய பஸ்ஸானியோ, இரண்டு நண்பர்களான கிரேஷியானோ, லோரென்ஸோவுடன் வருகிறான். உன்னிடமிருந்து நாங்கள் உத்தரவு பெற்றுக்கொள்கின்றோம். உன்னை எங்களிலும் மேன்மையான நண்பர்களிடம் ஒப்படைத்துச் செல்கின்றோம்" என்று கூறி விடைபெற்றான்.

பஸ்ஸானியோவுடன் மற்றவரும் அண்டோனியோவிடம் வந்தடைந்தனர். அப்போது சலாரினோ, "அண்டோனியோ, இந்த மேன்மை தங்கிய, உனக்கு மிகப் பொருத்தமான நண்பர்கள் இங்கு வராதிருந்தால், நான் உன் அருகிலேயே இருந்து உன் துன்பப் பொலிவு அழிந்திட மகிழ்ச்சி ஊட்டிக்கொண்டிருந்திருப்பேன். இப்போது நான் இங்கு இருக்க வேண்டிய அவசியமில்லையாதலால், எனக்குப் போக விடையளிக்கவும்" என்றான்.

நண்பர்கள் விடை கேட்பதை உணர்ந்த அண்டோனியோ, "நீங்களும், என் வரையில் மிகப் பொருத்தமான நண்பர்களே. நீங்கள் வேறு ஏதோ அலுவலின் காரணமாகஎன்னைப்பிரிய வேண்டியிருக்கிறதுபோலும். அதற்குப் பஸ்ஸானியோவின் வருகை துணை நிற்கின்றது! அப்படித் தானே, நண்பர்களே!" என வினவுவது போன்று சலாரினேவும் சோலானியோவும் போக விடையளித்தான்.

"காலை வந்தனம், நண்பர்களே" என்று வணக்கம் செலுத்திவிட்டுப் போகப் புறப்பட்டான் சலாரினே. அப்போது அருகிலிருந்த பஸ்ஸானியோ, "நன் மதிப்புக்குரிய பெரு வணிகர்களே, உம்மோடு நாங்கள் எப்போது ஆனந்தமாகப் பேசிக்களிப்பது? உங்கள் இருவரையும் நாங்கள் சந்திப்பதே அபூர்வமாக உள்ளதே. நீங்கள் அவசியம் இவ்விடம் விட்டுச் செல்லவேண்டுமா?" என வினவினன்.

"மற்றொரு சமயம் சௌகரியமாகச் சந்தித்துப் பேசுவோம். அப்போது எவ்வேலையின் காரணமாகவும் நாம் நீங்காதிருப்போம். நாங்கள் வருகிறோம்" என்று சலாரினே விடை பகர்ந்துவிட்டு, சோலானியோவுடன் நகர்ந்தான்.

அப்போது லோரென்ஸோவும் பஸ்ஸானியோவை நோக்கி, "அன்புமிக்க பஸ்ஸானியோ, நீரும் அண்டோனியோவைச் சந்தித்துவிட்டீர். நானும் கிரேஷியானேவும் விடை பெற்றுக்கொள்கின்றோம், பகலுணவிற்கு நாம் முன்னமே தீர்மானித்த இடத்திற்கு, நீர் தவறாமல் வந்துவிட வேண்டுகின்றேன்" என்றான்.

"தவறாமல் வருகிறேன்" என்றான் பஸ்ஸானியோ. அவன் அருகிலிருந்து கிரேஷியானே அண்டோனியோவை நோக்கி, "பெருவணிகரே, நீர் மகிழ்ச்சியாகக் காணப்பட

வில்லையே! உலகில் மனிதர்கள் என்ன சொல்கின்றார்கள்; என்ன செய்கின்றார்கள் என்பதைப்பற்றிச் சிந்திப்பதிலேயே நீர் ஈடுபட்டுள்ளீர். உலகம் எதில் கவனமுடனிருக்க முடியுமோ அதில் சிரத்தையற்றிருந்து, தேவைப்படாத விவகாரத்தில் தலையிட்டு உழைப்பைப் பாழ்படுத்திக் கொள்கின்றது. அண்டோனியோ, உண்மையாகக் கூறுகின்றேன்: நீர் யாரும் நம்பமுடியாத அளவிற்குத் தோற்றத்தில் மாறிவிட்டிருக்கின்றீர்" என்று வருத்தத்துடன் கூறினான்.

"கிரேஷியானோ, உலகத்தை நான் ஒரு நாடக அரங்காக மதிக்கின்றேன். அந்த அரங்கில் ஒவ்வொரு மனிதனும் அவனவன் பாத்திரத்தை நடிக்கிறான். எனக்குக் கிடைத்துள்ள பங்கு, சோகம்! அதனால் நான் சோகமாக நடிக்கின்றேன்" என்று விடையளித்தான் அண்டோனியோ.

"அண்டோனியோ, உனக்காக நான் ஒரு விகட கவியாக மாறுகின்றேன்; திரையை அளிக்கின்ற முதுமை என்னை அடைவதானாலும், மகிழ்ச்சியோடு வேடிக்கையோடும் அதை வரவேற்பேன். பெருமூச்சுகள் விளைவால் இருதயம் குளிர்வதைக் காட்டிலும், திராட்சை இரசத்தால் கல்லீரல் எரியுறுவதே நன்று. இளமைத் துடிப்புகள் நிறைந்த ஒரு மனிதன், வெண் கல்லில் செதுக்கிய அவன் மூதாதையர் உருவத்தைப்போன்று பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டியதேன்? இத்தகைய சோக மௌனத்தை நான் வெறுக்கின்றேன். எப்போதும் கடுகடுப்பாகவும், சோம்பலாகவுமிருந்தால் மஞ்சள்காமாலை நோய்க்கல்லவோ ஆளாகவேண்டி நேரிடும்? அண்டோனியோ, நான் உன்னை நேசிக்கின்றேன்; உன்மீது அன்பு பாராட்டுகின்

றேன். அந்த அன்பு உன்னிடம் என்னைப் பேசவைக்கின்றது. அண்டோனியோ, பாலே ஏடு மறைப்பதுபோன்று, அசையா நீர் நிலையை நுரை மறைப்பதுபோன்று, மனிதரில் சிலர், தம்மைப் பார்க்கின்றவர்கள் தாம் சிந்தனையாளர்களாவும், அறிவுடையவர்களாகவும், ஆழ்ந்த எண்ணமுடையவர்களாகவும் மதிக்கப்படவேண்டும் என்ற காரணத்தால் தம்முள் நிறைந்துள்ள வருத்த சிந்தனையை மறைக்க மௌனமுற்றிருக்கின்றார்கள்; அவர்களின் உள்ளத்துள் புதைந்துள்ள வருத்தத்தை அறியாதவர்கள், 'இவர்கள் மௌனம் நீங்கி வாய் திறந்து பேசினால், தேவ வார்த்தையை மறுத்துரைக்க முடியாதது போன்று நம்மால் இவர்கள் பேச்சுக்கும் மறுப்புரைக்கமுடியாது' என்று சொல்லிக்கொள்வர். என் அன்புமிக்க அண்டோனியோ, இத்தகைய மௌனவாதிகள் பிறரால் அறியாமல் மதிக்கப்படுகின்றவர்களே ஒழிய உண்மையில் அவர்கள் வாய் திறந்து பேசினால், அவர்களை அறிவாளிகள் என்று கூறியவர்களை முட்டாள்கள் என்று கூறவேண்டிய அவசியம் ஏற்படும். உள்ளத்திலே உள்ளதை மறைத்து மௌனம் சாதிக்கின்றவர்கள், அறிவுடையவர்கள் போன்று பாசாங்கு புரிகின்றார்களே ஒழிய, உண்மையில் அறிவாளிகளல்லர். இவற்றைப்பற்றி நான் உனக்கு மற்றொரு சமயம் விரிவாகச் சொல்லுகின்றேன். ஆதலால், அண்டோனியோ, நீ உன் உள்ளத்துள் நிறைந்திருக்கும் துன்பத்தை மறைக்க மௌனமுற்றிருந்து, மற்றவர்கள், இரையை நாடி கொக்கியில் சிக்கும் மீன்போல், உன்னையும் உன் மௌனத்தால் ஆழ்ந்த சிந்தையுடைய அறிஞர் என்று எண்ணி ஏமாந்து விடாதபடி பார்த்துக்கொள். நான் வருகிறேன்" என்று கிரேஷியானோ கூறிவிட்டு, லோரென்சோவை நோக்கி, "புறப்படு" என்றான்.

கிரேஷியானே தன் சோக மௌனத்தைக் கண்டு விகட கவிபோன்று உரையாடல் நிகழ்த்தியதை அண்டோனியோ எண்ணி, மலைத்து நின்றபோது லோரென்ஸோ, "நண்பர்களே, நான் உங்களை நீங்குகின்றேன். நாம் மீண்டும் பகலுணவுபோது சந்திப்போம். கிரேஷியானே என்னை எப்போதும் பேசவிடாத காரணத்தால் பேசாது பாசாங்கு புரியும் மௌன அறிஞர்களில் நானும் ஒருவனே" என்று கேலியாகக் கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டான்.

"அப்படியாயின் என்னுடனிருந்து நான் சொல்வது போன்று நடந்தால் இன்னும் இரண்டு வருடங்களில் உன்னுடைய நாவின் ஓசையை நீ கேட்காதபடி செய்து விடுவேன்" என்றான் கேலியாக, கிரேஷியானே, லோரென்ஸோவை நோக்கி.

கிரேஷியானேவின் வார்த்தையைக் கேட்ட அண்டோனியோ, "கிரேஷியானே, இனி நான்மௌனம் நீங்கிப் பேசுகின்றேன்" என்றான்.

"அண்டோனியோ, அசை போடும் எருதுவினிடத்திலும், விலை போகாத மங்கையினிடத்திலும்தான், மௌனம் குடி கொள்ளத் தக்கது. நீ உன் நா திறந்து பேச முயற்சிப்பது கண்டு மகிழ்ச்சி—நன்றி" என்று கூறிவிட்டு, கிரேஷியானே, லோரென்சோவுடன், அவ்விடம் விட்டு அகன்றான்.

அண்டோனியோவும், பஸ்ஸானியோவும் வீதியில் தொடர்ந்து நடந்தார்கள். "கிரேஷியானே, அர்த்தமற்ற வார்த்தைகளைக் கொட்டுகின்றான்" என்றான் அண்டோனியோ. "ஆம், ஏதுமற்ற பொருளைப் பற்றி,இந்த வெனிஸ்

நகரில் உள்ள எல்லா மனிதர்களைக் காட்டிலும், கிரேஷி யானே அதிகமாகப் பேசுகின்றான். உமி நிறைந்த இரண்டு அளக்கும் பறைகளில் கோதுமை உள்ளதென்று நாளெல் லாம் தேடி, இரண்டு கோதுமை மணிகளை இரண்டு பறைகளில் கிடைத்ததனால் அதனால் எடுத்துக் கொண்ட செயல் வீண் முயற்சியானதென்று அறிவது போன்றதே, கிரேஷியானேவின் வார்த்தைகளின் உண் மையை ஆராயப் புகுவது" என்று கூறினான், பஸ்ஸா னியோ.

பஸ்ஸானியோவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே நடந்த அண்டோனியோ திடீரென்று நின்று, "பஸ்ஸானியோ, நீயாரோ ஒரு பெண்மீது இரகசியக் காதல் கொண்டிருப்பதாகவும், அந்தப் பெண் யார் என்பதை இன்று கூறுவதாகவும் சொன்னாயே! அந்தப் பெண் யார்? நீ வாக்களித்தபடி இன்று அவசியம், அதைத் தெரிவிக்க வேண்டும்" என்றான்.

அண்டோனியோவின் கேள்வியைக் கேட்ட பஸ்ஸா னியோ, "அண்டோனியோ, என்னுடைய சக்திக்கு மீறிய அளவில் ஆடம்பரவாழ்க்கைக்காகைப்பொருள்அனைத்தும் என்னால் வீணாக்கப் பட்டது நீ அறிந்ததே. அத்தகைய ஆடம்பர வாழ்க்கையில் இப்போதும் நான் வாழ வில்லையே என்பதற்காக வருந்த வில்லை. ஆனால், என்னுடைய இளமையின் காரணத்தால் அளவு மீறி ஊதாரித்தனமாகச் செலவு செய்து, நான் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பெருங் கடனிலிருந்து விடுபட வேண்டுமென்பதே, எனக் குத் தற்சமயமுள்ள கவலைகளில் முதன்மையானதாகும், அண்டோனியோ, நீ என்னிடம் கொண்டுள்ள அன்புக் காகவும், எனக்கு ஈந்துள்ள பணத்திற்காகவும், நான்

உனக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றேன். நீ என் மீது செலுத்துகின்ற உண்மை அன்பின் காரணமாக. நான் பட்ட கடனைத் தீர்க்க எண்ணியுள்ள வழிவகைகளை, உன்னிடம் கூறுகின்றேன்" என்று தயங்கிய உள்ளத்தோடு கூறினன்.

பஸ்ஸானியோவின் சோர்வு கலந்த நம்பிக்கை மொழிகளைக் கேட்ட அண்டோனியோ, "நண்பனே, நீ உன் கடனைத் தீர்க்க எண்ணியுள்ள வழிவகைகளைத் தயங்காமல் தெரிவி. உன் முடிவு மேன்மையானதாயின், என்னுடைய உடல், பொருள் இரண்டும் உனக்கு எப்போதும் துணை நிற்கின்றன என்று நம்பி யிரு" என்று கூறினன்.

"என் பள்ளிப் பருவத்திலே, நான் வில்லில் அம் பேற்றி எறிவேன். அந்த அம்பு சென்ற இடம் தெரியாது திகைக்கும்போது காணமற்போன அதே அம்பின் கனம், நீளம் அகல முடைய மற்ரோர் அம்பை அதே வேகத்தில், அதே திசையில், நாணிலேற்றி எறிவேன். அப்போது முன்சென்ற அம்பினிடத்திற்கே இரண்டாம் அம்பும் செல்லுமாதலால் ஒரே சமயத்தில் இரண்டு அம்புகளையும் கண்டு, கொணர்ந்து விடுவேன். கபடமற்ற என இளமையிலே எழுந்த இத்தகைய எண்ணத்தை நான் இப்போதும் வலியுறுத்திக் கொள்ள ஆசைப் படுகின்றேன். அண்டோனி, உன்னிடத்தில் கடன் வாங்கியபொருள்களனைத்தும்இளமையின் ஆடம்பரத்திலே கருத்தற்று செலவழித்துவிட்டு, இப்போது அவற்றைத் திருப்பித் தர முடியாத கடனாளியாக இருக்கிறேன். நண்பனே, நீ விரும்பி முன்போல் மற்ரோர் அம்பையும் எனக்காக எய்திடுவாயானல், நான் அதைக் கவனத்தோடு கண்காணித்திருந்து இரண்டு அம்புகளையும், அல்லது எனக்காகத் துணிந்து எய்கினற இரண்

டாம் அம்பையேனும் திருப்பிக் கொணர்ந்து சேர்த்து விடுகிறேன்" என்று தன் எண்ணத்தை மறைமுகமாகத் தெரிவித்தான் பஸ்ஸானியோ.

பஸ்ஸானியோவின் வார்த்தைகளினுள் நிறைந்திருந்த பொருளை அண்டோனியோவால் எளிதில் அறிந்துகொள்ள முடியவில்லை. அதனால், பஸ்ஸானியோவை நோக்கி, "நண்பனே, நீ என்னை நன்ருகப் புரிந்திருந்தும், காலத்தை வீணுக்குகின்ருய். என் அன்பைப் பற்றி வளைத்துப் பேசி எனக்குப் புரியாத கேள்விகளைக் கேட்டு என் செயலில் நீ சந்தேகம் கொள்வது, நான் அளித்த செல்வத்தை நீ வீண் செலவு செய்ததைவிட பெரிய தவறன்ருே! ஆகையால் என்னல் செய்ய முடிந்தது ஏதேனுமிருந்தால் உடனே விளக்கமாகச் சொல், பஸ்ஸானியோ. அதற்காக நான் தயாராக இருக்கிறேன்!" என்ருன், அண்டோனியோ.

பஸ்ஸானியோ, அண்டோனியோவின் நம்பிக்கை உரைகளைக் கேட்டவுடன் தன் மனதினிலுள் புதைந்திருந்த எண்ணத்தை வெளியிடலானன்: "நண்பனே, அழகு என்ற வார்த்தையே அழகு. அந்த வார்த்தையை விட மிக அழகான ஒரு நங்கை 'பெலமாண்ட்' நகரிலே வதிகின்ருள். அவள் நேர்மையானவள்; நிறைந்த செல்வமுடையவள்; நற்குணங்கள் பல பொருந்தியவள். அவளுடைய விழிகள் மொழிகளைப் பேசும் திறமையுடையன. அண்டோனியோ, அவள் பெயரைத்தான் நான் இன்று உனக்குக் கூறுகின்றேன். அவள்தான் **போர்ஷியா**. மாவீரன் ஜூலியஸ் சீசரைச் சதி செய்து கொன்ற 'புரூட்டஸ்' மனைவியும், கேடாவின் மகளுமான போர்ஷியாவைவிட நான் காதலிக்கின்ற போர்ஷியா, எந்த விதத்திலும் குறையாத நிறைவு உடை

யவள். என் போர்ஷியாவின் அழகையும், தகுதியையும் இந்தப் பரந்த உலகில் எங்கும் யாவரும் அறிவார்கள். இந்த உலகின் நாற்புறங்களிலிருந்தும் புகழ் வாய்ந்த பெரு வீரர்கள் அவளை மனைவியாக அடைவதற்காக,பெல்மாண்ட் வந்து சேர்கின்றார்கள். அண்டோனியோ, அவளுடைய பொன்னிற சுருண்ட கூந்தல் அவள் கழுத்து வளைவின் புறம் பொன்னிறத் தோலுடன் கூடிய ஆட்டு ரோமம் போன்று காட்சி அளிக்கின்றது. மாவீரன் ஜேசன் கோல் சோஸ் கடற்கரை அடைந்து பொன்னிறத் தோலுடன் கூடிய ஆட்டு உரோமத்தைக் கவர்ந்து செல்லப் புறப்பட்டது போன்று, சீமாட்டி போர்ஷியோவைக் கவர்ந்து செல்ல நவயுக ஜேசன்கள் 'பெல்மாண்ட்' நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பேரன்பு மிக்க அண்டோனியோ, அவர்களில் ஒருவனாக நான் பெல்மாண்ட் அடைவதற்குரிய தகுதி வாய்க்கப் பெற்றால், கன்னி போர்ஷியாவை அடைகின்ற நற்காலம் எனக்குத்தான் உள்ளது என்று என் அறிவு எனக்கு முன் கூட்டித் தெரிவிக்கின்றது."

பஸ்ஸானியோ, போர்ஷியாவின் செல்வத்திற்கு மாத்திரமன்றி உண்மையான அன்பிற்காகவும் அவளைக் காதலிக்கின்றான் என்று அண்டோனியோ புரிந்து கொண்டதுமன்றி, தன்னிடம் மீண்டும் கடன் வாங்கி, போர்ஷியாவை மணந்து அவள் மூலமாகக் கிடைச்கும் பணத்திலிருந்து தனக்குத் தரவேண்டிய எல்லாக் கடன் தொகையையும் திருப்பித்தர அவன் எண்ணியுள்ளான், என்பதையும் புரிந்து கொண்டான். எனினும், தன் உதவியற்ற நிலையை எண்ணி, "பஸ்ஸானியோ, என்னுடைய செல்வமனைத்தும் கடல் மீது செல்கின்ற கப்பல்களிலே நிறைந்துள்ள தென்

பது நீ அறிந்ததே. என்னிடத்திலே வேறு பணமுமில்லை; அடகு வைத்துக் கடன் கேட்க பொருளும் இல்லை என்பதும் நீ அறிந்ததே. ஆனாலும் நண்பனே மனம் தளராதே. கடலில் இருக்கின்ற என்னுடைய பொருள்கள் மீது கடன்கொடுக்க வெனிஸ்நகரிலே யாரேனும்இருக்கிறார்களா என்று விசாரித்துப் பார். உடனே போ! நீ அழகி போர்ஷியாவை மணக்கத் தகுதியுடைய முறையில்சந்திக்கும்அளவிற்குப்பணம் கொடுக்க யாரேனும்இருக்கின்றார்களாஎன்று நன்றாக விசாரித்துப் பார். என் பொருள்களையேனும், என்னையேனும் நம்பி கடன் கொடுக்க்க் கூடியவர்களை நானும் விசாரிக்கின்றேன்" என்று கூறி, பாஸ்ஸானியோவை அழைத்துக்கொண்டு நடந்தான் அண்டோனியோ.

# 2. போர்ஷியாவும் பொருந்தாக் காதலர்களும்

பெல்மாண்ட் நகரில் பெருமாளிகை யொன்றின் முற்றத்திலே அழகி போர்ஷியா தன் அந்தரங்கத் தோழி நெரிஸ்ஸாவுடன் நின்றிருந்தாள். அவள் உள்ளம் ஏதோ குழப்பக் குட்டையில் மிதப்பது போன்று முகத் தோற்றத்தில் தெரிந்தது. அவள் வாழ்க்கையை வெறுத்து நோக்குகின்றவள் போன்று காணப்பட்டாள். அவள் பக்கத்தி லிருந்த நெரிஸ்ஸா, சீமாட்டி போர்ஷியாவின் மனக் குழப்பத்திற்குக் காரணம் புரியாது நின்றிருந்தாள். அச் சமயம் போர்ஷியா, "நெரிஸ்ஸா, உண்மையில் இவ்வுலக வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது" என்று மனத் தடுமாற்றத்துடன் கூறினாள்.

போர்ஷியாவின் உரையைக் கேட்ட நெரிஸ்ஸா, "அன்புக்குரிய ஆரணங்கே, உனக்கு நற்பேறு இருக்கின்ற அளவிற்குத் துன்பமுமிருந்தால், உன் உள்ளத்தில் கலக்கமும், குழப்பமும், இவ்வுலகத்தின் மீது வெறுப்பும் ஏற்படக் காரண மிருக்காது. சீமாட்டி, அமித உணவை உண்கின்றவன் நோயினால் வருந்துகின்றான்; ஏதுமில்லாதவன் பசிக் கொடுமையால் வருந்துகின்றான். இதற்கு இடை நிலையாக மித உணவு உட்கொள்கின்றவன், துன்பமின்றி இன்ப மனுபவிக்கின்றான். அதுபோன்று, அளவுமீறிய செல்வமேனும், அளவுமீறிய ஏழ்மையேனும் காணப்படாத இடத்தில் இகழ்ச்சி யற்ற மகிழ்ச்சி காணப்படும். பெரு நிதியுடையோர் விரைவில் உடல் தளர்ந்து, முதுமையுடன் நரையும் திரையும் பெற்று இறக்கின்றனர். தேவையான

அளவிற்கு மிதமான செல்வமுடையோர், வாழ்க்கையில் இன்பமும், உடலில் ஆரோக்கியமும் காண்கின்றனர்" என்று கூறினள்.

"நெரிஸ்ஸா, சுருக்கச் சொல்லி விளங்க வைக்கும் திறமை உன்னிடம் குடிக் கொண்டுள்ளது!" என்று போர்ஷியா நெரிஸ்ஸாவைப் புகழ்ந்தாள்.

"ஆரணங்கே, எதையும் யாரும் சொல்வது எளிது; ஆனல், அதன்படி நடப்பதுதான் மிகவும் சிறந்தது" என்ருள் நெரிஸ்ஸா.

"நெரிஸ்ஸா, நல்லது எது, கெட்டது எது என்று எளிதில் அறிந்து கொள்வது போன்று வாழ்க்கையில் பகுத்துணர்ந்து நடப்பதும் எளிதாயின், இன்பத்தின் உச்சியை அனைவரும் எளிதில் அடைந்துவிடலாம். அதாவது, தொழுகைக்கு என மக்கள் கூடுகின்ற சிறு தனி இடங்களெல்லாம் பெருங் கோவில்களாகவும், மண் குடிசைகளெல்லாம் பெருமாளிகைகளாகவும் மாறுமளவிற்கு இன்பம் உலகில் நிலவிட வேண்டுமாயின், அனைவரும் தம் வாழ்க்கையில் சொல்வது போன்று நல்வழியில் நடக்க ஆரம்பிக்க வேண்டும். தோழி, நான் இருபது பேர்களுக்கு நல்லவை யாவை என்று எளிதில் உபதேசிக்க முடியும். ஆனல், நான் சொன்ன நல்ல மார்க்கத்தின்படி, அந்த இருபது பேரில் நானும் ஒருத்தியாய் நடப்பது அவ்வளவு எளிதன்றன்ரே! உபதேசிக்கின்றபடி, நடப்பவன்தான் உண்மையில் நல்ல தர்மோபதேசிகன். அறிவு உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கின்றது. முயல் வலையைத் தாண்டுவதுபோல் அமைதியான நிலையில் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டை, இளமைத் துடிப்பினல் ஏற்படுகின்ற உணர்ச்சி வேகம், மிக எளிதில் மீறிவிடுகின்றது. அதே

வலைக்கு முயல் போலன்றி முடவன் பணிந்து விடுகின்றான். அந்த முடவனைப் போன்ருகிவிடுகின்றது, அமைதியான நிலையில் ஏற்படுத்துகின்ற அறிவுபதேசக் கட்டுப்பாடும்! ஆனல், இத்தகைய நீதி, நான் என்னுடைய கணவனைத் தேர்ந்தெடுக்க உதவி புரிய முடியாது. நான் விரும்புகின்ற மனிதனை தேர்ந்தெடுக்கவோ, நான் விரும்பாத மனிதனை என் கணவனுக ஏற்றுக்கொள்ள மறுக்கவோ என்னல் முடியாது. வாழ்கின்ற மகளின் ஆசை இறந்த தந்தையின் கட்டளையிலே அடங்கியுள்ளது. நெரிஸ்ஸா, நான் விரும்புகின்றவரைத் தேர்ந்தெடுக்கவும், விரும்பாதவரைத் தள்ளவும் எனக்கு உரிமை இல்லாதது பெரும் கொடுமையன்ருே!" என்று மிகவும் வருத்தத்துடன் கூறினுள் போர்ஷியா.

போர்ஷியாவின் உள்ளத்தினுள் குடிக்கொண்டிருந்த மணவாழ்க்கை வருத்தத்தையும், தந்தையைப் பற்றிய வெறுப்பையும் உணர்ந்த நெரிஸ்ஸா அவளைத் தேற்றக் கருதி, "உன் தந்தை நேர்மையானவர். நேர்மையான மனிதர்கள் இறக்கும் தறுவாயில் திண்ணமாகக் கூடிய நற் கருத்துக்களை உடையவர்களாக இருப்பார்கள். ஆதலால், உன் தந்தையால் உன் தலைவிதி பொன், வெள்ளி, ஈய பெட்டிகளொன்றில் நிர்ணயிக்கப் பட்டிருப்பதும் நன்மையின் பொருட்டே. இந்த மூன்று பெட்டிகளிலிருந்து, உன் தந்தையின் உள் நோக்கத்தின்படி, ஒன்றைத் தேர்ந்தெடுக்கின்றவன், உன்னைத் தேர்ந்து மணக்கக் கூடிய திறமையும் தகுதியும் வாய்ந்தவனுகவே தானிருப்பானே யன்றி மற்றெவரும் சரியான பெட்டியைத் தேர்ந்தெடுக்க மாட்டார்" எனக் கூறி, பின்பு "இது நிற்கட்டும். கன்னியர்த் திலகமே, உன்னை மணக்க இதுவரை நாடி வந்த அரசிளஞர்களைப்

பற்றி உன் கருத்தென்ன?" என்று நினைவை வேறு வழியில் திருப்ப, வினவினள்.

"நெரிஸ்ஸா, அவர்களின் பெயர்களை வரிசையாகச் சொல். நீர் ஒவ்வொருவர் பெயரையும் கூறும்போது நான் என் உள்ளத்தின் போக்குப்படி அவர்களை வர்ணிக்கின்றேன்" என்றாள். போர்ஷியா.

அதன்படியே நெரிஸ்ஸா **நெப்போலிட்டன்** அரசிளங் குமாரனைப்பற்றி முதன் முதலாகக் கேட்டாள்.

"அவன் ஒரு முரட்டு இளைஞன்; அவனுடைய குதிரையைப்பற்றியே எப்போதும் பேசுகின்றான். அக் குதிரைக்கு அவனே லாடம் கட்டுவானாம். அதையும் ஒரு திறமையாகக் கருதி அவனுடைய புகழேணிக்கு பயன்படும் என்றெண்ணி என்னிடம் கூறினான்" என்று சிரிப்பொலிக்கச் சொன்னாள், போர்ஷியா.

"**பெலட்டைன்** பிரபுவைப் பற்றி உம் கருத்தென்ன?" என்றாள் நெரிஸ்ஸா.

"அவர் முகத்தில் எப்போதும் கோபக்குறி தாண்டவமாடுகின்றது. கேலியான கதைகளைக் கேட்கும் போது கூட அவர் புன் சிரிப்பைக் காட்டுவதில்லை. அவருடைய இளமையில் நிறைந்துள்ள அளவு மீறிய துக்கத்தின் காரணமாக, அவர் வயதேறிய பின்பு 'எராக்லிட்டஸ்' போன்று உள்ள மொடிந்து வருந்தும் ஒரு தத்துவ வாதியாக மாறி விடுவார் என்று அஞ்சுகின்றேன். நெரிஸ்ஸா நெப்போலிட்டன் அரசிளங்குமரனை யாகிலும், பேலட்டைன் பிரபுவை யாகிலும் நான் மணப்பதைக் காட்டிலும் பற்கள் தெரிய இளிக்கின்ற ஓர் எலும்புக்கூட்டை மணப்பதே சிறப்புடையதாகும்! கடவுள் என்னை இந்த மனிதர்களிட மிருந்தும் காப்பாற்றினர்!" என்றாள போர்ஷியா.

"பிரஞ்சு நாட்டுப் பிரபு **மான்ஷியர்-லி-பான்** என்பவரைப் பற்றி என்ன சொல்கின்றாய்?" என வினவினாள் நெரிஸ்ஸா.

"கடவுள் அவரைப் படைத்ததால், அவரை மனிதராக மதிப்போம். ஒருவரை இன்னொருவர் கேலி செய்வது உண்மையில் பாவச் செயல்தான். எனினும் நீ கேட்டவரைப் பற்றி நான் கூற வேண்டுமே! மான்ஷியர்-லி-பான் நெப் போலிட்டனை விட தன் குதிரை யோடு அதிகத் தொடர்பும், பேலட்டைனை விட சுடு மூஞ்சுத்தனமும் கொண்டுள்ளார். பல மனிதர்களிடம் குடிக்கொண்டிருக்கின்ற குறைகள் அத்தனையும் இவரிடம் குடிகொண்டிருக்கின்றன. பாடும் பறவையைக் கண்டால் ஆடும் மனிதராக மாறுகின்றார். அவரால் ஒரு விநாடிக். கூட அமைதியாக இருக்க முடியவில்லை. அவரை நான் மணந்தால் நான் இருபது கணவர்களை மணந்ததாகப் பொருள்! அவ்வளவு பேர் தீயக் குணங்களும் அவரிடம் நிறைந்துள்ளன. அவர் என்னை குறை கூறினாலும், நான் அவரை மன்னிக்க முடியும் ஆனால், அவருடைய அர்த்த மற்ற காதலுக்கு என்னால் உதவி புரிய முடியாது!" எனப்பதிலளித்தாள் போர்ஷியா.

"அப்படியாயின், இங்கிலாந்திலிருந்து வந்த இளஞ் சீமான் **ஃபால்கான் பிரிஜ்** என்பவரைப் பற்றி என்ன கூறுகின்றாய்?" என வினவினாள், நெரிஸ்ஸா.

"நான அவரைப் பற்றி என்ன கூற முடியும்! அவர் என்னைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. நான் அவரைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. லத்தீன, பிரஞ்சு, இத்தாலி ஆகிய மொழிகளில் ஒன்றேனும் அவர் அறிந்தில்லை. எனக்கு ஆங்கிலத்தில் போதிய அளவு ஞானமில்லை என்பதை நீ நன்கு அறிவாய். அவர் அழகன் தான். எனினும், அவர்க்கு என் மொழி தெரியாது, எனக்கு அவர் மொழி

தெரியாது, ஊமை போல் அமர்ந்திருந்த அவரோடு நான் எப்படிப் பேசமுடியும்? எங்கள் நிலைமை மிக பரிதாபகரமாக இருந்தது! அவருடைய மார்புச் சட்டை இத்தாலி நாட்டு முறையிலும், காற்சட்டை பிரான்ஸ் நாட்டு முறையிலும், தலைக்குல்லாய் ஜெர்மனி நாட்டு முறையிலும் அமைந்திருந்தது. அவருடைய நடையுடை பாவனைகள் எந் நாட்டு நடையுடை பாவனைகளையும் கலந்தவையாயிருந்தன" என்றாள் போர்ஷியா.

"அவர் அருகிலிருந்த ஸ்காட்லாந்து பிரபுவைப்பற்றி நீ என்ன எண்ணுகிறாய்?" என வினவினாள், நெரிஸ்ஸா.

"ஸ்காட்லாந்து பிரபு இங்கிலாந்து பிரபு விடமிருந்து கடன் வாங்கியுள்ளார் போலும்! அக்கடனுக்காக, பிரஞ்சு நாட்டுப் பிரபு ஸ்காட்லாந்து பிரபுக்குப் பொறுப்பாக இருப்பதாக ஒப்பியுள்ளார் என்றும் நினைக்கின்றேன்" என்று ஆங்கிலேயர்களுக்கும் ஸ்காட்லாந்தியர்களுக்கும் அடிக்கடி நிகழ்கின்ற போரைப் பற்றியும், அப்போரில், ஆங்கிலேயர் மீது வெறுப்புக் கொண்ட பிரஞ்சு மக்கள் ஸ்காட்லாந்து மக்களுக்கு உதவிபுரிவதையும் மறைமுகமாகக்கேலி செய்யும் முகத்தான் கூறினாள், போர்ஷியா.

"ஜர்மானிய இறை மகன் ஸாக்ஸனியினுடைய மருமகனைப்பற்றி உன் அபிப்ராயம் என்ன?" எனக்கேட்டாள் தோழி நெரிஸ்ஸா.

"அவர், குடி வெறியற்ற காலை நேரத்தில் முரடராகவும், குடித்த பிறகு, பிற்பகலில் மிகவும் துன்மார்க்கராகவும் காணப்பட்டார். சாதாரணமாக குணத்தில் சிறிது குறைந்திருக்கும் நேரத்தில் தான், அவர் உயர்ந்த பண்பு படைத்தவராகக் காணப்படுவார். கொடூரக் குணம் படைத்த போது அவரைப் பார்த்தால் மிருகச் சுபாவத்தில்

சிறிதுதான் குறைந்திருப்பவராகக் காணப்படுவார். என் துர்க்காலம் அவரை அடைய நேரிடினும், நான் அவரை விட்டு விலகத்தான் உபாயம் காண்பேன்" என்ருள், போர்ஷியா.

"ஆரணங்கே, நீ நினைப்பது போன்று, அந்த ஜர்மானியர் சரியான பெட்டியைத் தேர்ந்த பின்பு, உபாயத்தால் புறக்கணிக்க முற்படின், நீ உன் தந்தையின் கட்டளையை மீறியவளாவாயன்றே!" எனக்கேட்டாள் நெரிஸ்ஸா.

"அவனை நான் மணக்க விரும்பாத காரணத்தால், தயவு செய்து, என் படம் இருக்கும் பெட்டிக்கு எதிர் மாருன, அதாவது தவருன பெட்டியின் மீது ஒரு பெரும் கண்ணுடிக்குவளை நிறைய திராட்சை இரசத்தை நிரப்பிவை. அந்த ஜர்மானியன் என்னைத் தேர்ந் தெடுக்க முற்படின், மது இருக்கும் பெட்டியையே அவசியம் தேர்ந் தெடுப்பான். அதனுல் நான் தப்பித்துக் கொள்வேன். நெரிஸ்ஸா, என்னைப் பார்த்துத் திரும்பிச் சென்றவர்களில் இந்த ஜர்மானியக் குடிக்காரன் மீண்டும் வந்து தேர்வுக்குத் தயாராஞல், நான் அவனை விலக்க எத்தகைய உபாயத்தையும் கையாளத் தயார்" என்று திட்டவட்டமாகக் கூறிஞள்.

"பெருஞ்சீமாட்டி, இதுவரையில் உன்னை மணக்க வந்தவர்கள், உன் தந்தையின் நிபந்தனையைக் கேட்டவுடன் வெளியேறி விட்ட காரணத்தால், இனி நீ இத்தகைய குடிக்காரர்களையும், அழகுக் கேடர்களையும் மணக்க விருக்கும் அச்சத்திலிருந்து விலகி யிரு" என்று நெரிஸ்ஸா, போர்ஷியாவுக்குத் தைரிய மூட்டிஞள்.

"நெரிஸ்ஸா, நான் என் தந்தையின் கட்டளையின் படியே கணவனைத் தேர்ந் தெடுப்பேன்; இல்லையேல், கிரேக்க நாட்டுக் கற்புத் தெய்வம் 'டையானு' போன்று கன்

னியாகவே, தீர்க்கத் தரிசினியான பெருமாது 'சிபில்லா' போன்று வயதேறி வாழ்வேன். இதுவரை வந்த காதலர்கள் என்னை என் தந்தையின் கட்டளையைக் கேட்டுத் திரும்பி விட்டதற்காக நான் ஆண்டவனுக்கு நன்றி செலுத்து கின்றேன்" என்று தந்தையின் கட்டளையின் படியே மணம் புரிந்து கொள்ள, தான் எண்ணியுள்ளதைத் தெரிவித்தாள், போர்ஷியா.

அப்போது, நெரிஸ்ஸா, "உன் தந்தையின் காலத்திலே, மான்ட்பெர்ராட்டிலிருந்து வந்த மார்க்விஸ் பிரபுவோடு பாண்டித்தியம் மிக்க வெனிஸ் நகர போர் வீரன் ஒருவர் வந்தது உனக்கு நினைவிருக்கின்றதா?" என வினவினாள்.

"ஆம், ஆம், எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. அவர் பஸ்ஸானியோ என்று அழைக்கப் பட்டார்" என்று போர்ஷியா மகிழ்ச்சியுடன் விடையளித்தாள்.

"ஆரணங்கே, இதுவரை நான் கண்ட மனிதரில், ஒரு பேரழகி விரும்பி மணக்கக் கூடிய தகுதி அவர் ஒருவர்க்கே உண்டு" என்றாள் நெரிஸ்ஸா.

"ஆம், நெரிஸ்ஸா, அவர் உன் புகழ்ச்சிக்குத் தகுதி வாய்ந்தவரே!" என்று உள்ள உவகையுடன் கூறினாள் போர்ஷியா. அச்சமயம், அந்த முற்றத்தினுள்ளே ஒரு சேவகன் நுழைந்து "சீமாட்டி, உன்னை நாடி வந்தவர்கள் திரும்பிப் போக, உன் உத்தரவு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் மோராக்கோ நாட்டு இளங்கோமகன் இன்றிரவு இங்கு வருவதைத் தெரிவிக்கும் தாகச் செய்திகொண்டு வந்துள்ளான் ஒருவன்" என்று கூறி பணிந்து நின்றான்.

பணியாள் வார்த்தைகளைக் கேட்ட போர்ஷியா அவனை முன்னே போகப் பணித்துவிட்டு, தோழியை நோக்கி, "நெரிஸ்ஸா செல்பவரை நன் மனத்தோடு அனுப்புவது போன்று, நம்மை நாடி வருவோரை நன் மனதுடன் வரவேற்போம். பணியாள் கூறியபடி வரவிருக்கும் மனிதர் தோற்றத்தில் கொடூரமாகவும், ஒழுக்கத்தில் புனிதமாகவுமிருந்தால், என்னை மனைவியாக அடைவதைவிட எனக்குப் பாவ விடுதலை அளித்துவிட்டுச் செல்வார். ஒருவரை வெளியே அனுப்பி நாம் மூடும் கதவை இன்னொருவர் உடனே தட்டுகின்றார். சரி, வா, போவோம்" என்று நெரிஸ்ஸாவுடன் முற்றத்தைவிட்டு வெளியேறினாள்.

# 3. கடும் பகைவனிடத்திலே கடன்

"மூன்றுயிரம் பொன் நாணயங்களா தேவை?"

"ஆமாம், ஐயா, அந்தப் பணம் முழுவதையும் மூன்று மாதங்களுக்குள் திருப்பித் தந்துவிடுகிறேன்"

"மூன்று மாதங்களிலா? உண்மையாகவா?"

"ஆமாம். உண்மையாக மூன்று மாதங்களில் மூன்றுயிரம் பொன் நாணயங்களையும் திருப்பித் தந்துவிடுகிறேன். அந்தப் பணத்திற்காக என் நண்பன் அண்டோனியோ பொறுப்பாளி"

"அண்டோனியோவா! அவரா உன் கடனுக்குப் பொறுப்பாளியாக நிற்கப் போகிறுர்! நல்லது."

"அப்படியாயின் நீர் எனக்கு உதவி செய்ய முடியுமா? நான் கேட்ட கடனை உன்னுல் எனக்குக் கொடுக்க முடியுமா? உன்னுடைய பதிலை எனக்குத் தெரிவி"

"மூன்றுயிரம் பொன் நாணயங்கள்! மூன்று மாதத் தவணை! அண்டோனியோ பொறுப்பு!"

"ஆமாம். உன் பதிலென்ன?"

போர்ஷியாவை மணக்க பஸ்ஸானியோ பணம் தேடி அலைந்தான். வெனிஸ் நகரில் ஷைலக் என்ற யூதன் ஒருவன் வட்டிக்குக் கடன் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் கடும் வட்டி வாங்குவது வழக்கம். அவனிடம்தான் பஸ்ஸானியோ கடன் கேட்டான். மூன்றுயிரம் நாணயங்களை மூன்று மாதங்களுள் திருப்பித் தருவதாகக் கூறி

கடன் கேட்டான் பஸ்ஸானியோ. ஷைலக்கோ பஸ்ஸானியோவின் பேச்சைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தான். அச்சமயம் பஸ்ஸானியோ, கடனுக்கு பெருவணிகன் அண்டோனியோ பொறுப்பாயிருப்பார் என்றும் உறுதியளித்தான். எனினும் ஷைலக் உடனே பதில் கூறி விடவில்லை. அதனுல்தான் ஷைலக்கை நோக்கி, "உன் பதிலென்ன?" எனக் கேட்டான் பஸ்ஸானியோ. அப்போதுதான் ஷைலக், "அண்டோனியோ மிக நல்ல மனிதர்தான்" என்று அவரைச் சந்தேகிப்பது போன்று குரல் தாழ்த்திப் பேசினுன். அதை அறிந்த பஸ்ஸானியோ, "அப்படியெனில், அவர்க்கு மாருக யாரேனும் நிந்தை உண்டாக்கி யுள்ளனரோ!" என வினவினுன் பஸ்ஸானியோ.

"இல்லை, இல்லை. அண்டோனியோ நல்ல மனிதர் என்று நான் சொன்னது, நீ கேட்கின்ற கடனுக்குப் பொறுப்பாக நிற்க அவரே போதும் என்ற பொருளைக் குறிக்கவே யன்றி வேறு தவறு கற்பிக்கவல்ல. எனினும் அவருடைய செல்வமெல்லாம் கடல் மீதல்லவோ இருக்கின்றது! அதனுல், அவற்றைப் பொறுப்புக்கு ஏற்றுக் கொள்ள முடியுமா? அவருடைய கப்பல்களில் ஒன்று ட்ரிபோலிஸ்க்கும், வேருென்று இந்திய தீவுகளுக்கும், மற்ருென்று மெக்ஸிக்கோவுக்கும் இன்னென்று இங்கிலாந்துக்குமாக சென்று கொண்டிருக்கின்றனஎன்பதையும் நான் நன்கு அறிவேன். ஆனுலும், கப்பல்கள் பலகைகளினுல் செய்யப்பட்டவைதானே! மாலுமிகள் நம்மைபோன்று மரணத்திற்கு ஏதுவான மனிதர்கள்தானே! நிலத்திலுள்ளது போன்று கடலிலும் திருடர்கள் இல்லையா! அவர்கள்தானே கடற் கொள்ளைக்காரர்கள்! கடலில் வீசுகின்ற பெரும்புயல் எச்சமயத்திலும், எக்கப்பலையும், எத்திசையிலும் தவருக

மாறிச் செல்ல செய்து பெரும் பாறைகளின் மீது மோத விடுமல்லவா! எனினும், நீ குறிப்பிட்ட அண்டோனி யோவே உன் கடனுக்குப் பொறுப்பாக இருந்தால் போதும்! மூன்றுயிரம் நாணயங்கள்தானே! சரி. அவரை எனக்கு வாக்குறுதிச் சீட்டு தரச்சொல்" என்று ஷைலக் கூறினன்.

பஸ்ஸானியோவும், "அண்டோனியோ வாக்குறுதிச் சீட்டு அவசியம் எழுதித் தருவார்" என்று ஷைலக்குக்கு உறுதியளித்தான்.

"எனினும், அண்டோனியோவையே நான், கடன் சம் பந்தமாக நேரில் சந்தித்துப் பேச ஆசைப்படுகின்றேன். அவரை நான் எங்கே சந்திக்க முடியும்?" எனக் கேட்டான் ஷைலக்.

"நீர் எம்மோடு உணவு அருந்த வர முடியுமானல், அண்டோனியோவைச் சந்திக்கலாம்" என விடை அளித்த துடன் ஷைலக்கை உணவருந்தவும் அழைத்தான் பஸ்ஸா னியோ.

"இயேசு பைசாசத்தை பன்றிக் கூட்டத்தில் செலுத்தி பன்றிகளையே அசுத்தப்படுத்தி விட்டதனுல், யூதனுகியநான் பன்றி இறைச்சியை உண்ணுவது கிடையாது. நான் உங்க ளோடுஇருப்பேன்; பேசுவேன்; நடப்பேன்; வியாபாரம்செய் வேன். ஆனுல், கிருத்துவர்களாகிய உங்களோடு யூதனுகிய நான் இருந்து உண்ணவோ குடிக்கவோ முடியாது" என்று ஷைலக் கூறிக் கொண்டிருக்கும்போது யாரோ வரும் காலடி சத்தம் கேட்டான். உடனே "யாரது?" என வின வினன். ஆனுல், பஸ்ஸானியோ, "பெருவணிகன் அண் டோனியோ வருகிறுர்" என்றுன்.

அதைக் கேட்டவுடன் ஷைலக் தனியே தனக்குத் தானே "அண்டோனியோ வந்து விட்டான். அவன் கிருத் துவன் என்ற காரணத்தால் மட்டும் நான் அவனை வெறுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், அவன் வட்டியின்றி கடன் கொடுத்து, வெனிஸ் நகரில் என் தொழிலுக்கே பங்கம் விளைத்துள்ளான். மேலும், யூதர்களைக் கண்டால் பழிப்பதே தொழிலாகக் கொண்டுவிட்டான். ரியால்டோ சந்தையில் அநேக வியாபாரிகள் முன்னே நான் அதிக வட்டி வாங்குவதாக என்னைப் பழித்து நிந்தித்தான். இன்றோ என்னிடம் நண்பனுக்காகக் கடன் கேட்க வந்துள் ளான். இந்தச் சமயத்தை நழுவவிடாது பயன்படுத்தி இவனை என் சூழ்ச்சியில் சிக்கவைத்தால்தான் வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடியும்! பழிக்குப்பழி வாங்க முடியும்! நான் இவனை இச்சமயம் மன்னித்து விடுவேனாயின் என் இனத்தவரின் தீராத பழிக்கு ஆளாவேன்!" என்று எண்ணி, உறுதி யெடுத்துக் கொண்டிருந்தபோது பஸ்ஸா னியோ அழைக்கவே அவன் பக்கம் திரும்பி, "என்னிடத் தில் எவ்வளவு பணம் இருக்கின்றது என்பதை நினைவுபடுத் திக் கொண்டிருந்தேன். என்னால் நீ கேட்கின்ற அவ்வளவு பணத்தையும் உடனே கொடுக்க முடியாது. ஆனாலும், என் இனத்தவனான "ட்யூபால்" என்னும் செல்வந்தனிடத்தி லிருந்து மீதி பணத்தையும் வாங்கித் தருகிறேன். அதனால் சமாதானமாயிரு. எவ்வளவு மாதங்களில் திருப்பித் தருவ தாய் சொன்னாய்?" என்று கேட்டுக்கொண்டே அண்டோ னியோ நின்றிருந்த திக்கைப் பார்த்து, "ஓ! அண்டோ னியோ, நீ நின்று கொண்டா இருக்கிறாய். அமர். ஆண்ட வன் உனக்கு ஆனந்தத்தை அளிப்பாராக" என்று அப் போதுதான் அண்டோனியோவைப் பார்த்தது போன்று நடித்து வரவேற்றான்.

அண்டோனியோ, "ஷைலக், வட்டிக்கு கடன் கொடுப்பதும் கிடையாது; கடன் வாங்குவதும் கிடையாது. எனினும், என் நண்பனின் முக்கிய அவசரத்திற்கு நான் உதவ வேண்டிய கடமையிருப்பதால் என்னுடைய விரதத்தையும் மீறி உன்னிடம் கடன் வாங்க வேண்டிய நிலைமையுள்ளேன். அதனால், உனக்கு எவ்வளவு வட்டி தேவை?" என வினவினான்.

"உமக்கு வேண்டியது மூன்றுயிரம் பொன் நாணயங்கள்தானே" எனக் கேட்டான் ஷைலக்.

"ஆமாம். அதை நான் மூன்று மாதங்களில் திருப்பித் தந்துவிடுகிறேன்" என்றான் அண்டோனியோ.

மூன்று மாதங்கள்தான்! மூன்று மாதங்கள் என்று தான் முன்னமே சொன்னாய்! உன் வாக்குறுதிச் சீட்டு...... அ, அ, அதைப்பற்றியும் கவனிப்போம்" என்று மனங் குழப்பிப் பேசுகின்றவன் போல நடித்து எதையோ மீண்டும் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டவன் போல், "நீ வட்டிக்குக் கடன் கொடுப்பதுமில்லை; வாங்குவதுமில்லை என்று சொன்னதுபோல் எனக்குத் தோன்றுகிறது" என சந்தேக வினவெழுப்பினான்.

"ஆம், அப்படியேதான்" என்று பதிலளித்தான் அண்டோனியோ.

ஷைலக், யாக்கோபு அவனுடைய தாயின் சூழ்ச்சியால், ஆப்ரகாமின் சொத்திற்கு மூன்றும் வாரிசாக மாறிய நிகழ்ச்சியைச் சொன்னான். அப்போது அண்டோனியோ, "யாக்கோபுவைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமென்ன? அவன் வட்டியா வாங்கினான்?" எனக் கேட்டான்.

அதற்கு ஷைலக், இல்லை, இல்லை நீ சொல்வது போன்று நேரடியாக வட்டி வாங்கவில்லை. எனினும், அண்டோனியோ, யாக்கோபு என்ன செய்தான் என்று சிந்தித்துப்பார். லாபானும் யாக்கோபும் ஏற்படுத்திக் கொண்ட உடன் படிக்கையின்படி யாகோபு இரேகைகள் படிந்த பலவண்ண ஆட்டுக்குட்டிகளையே மேய்ப்புக் கூலி யாகக் கொள்ளவேண்டும். ஆனால், லாபான் இரேகைகள் படிந்த ஆடுகளை அவன் மகனுக்கும், இரேகைகள் இல்லாத ஆடுகளை யாக்கோபுக்கும் மேய்க்கக் கொடுத்தான். யாக்கோபு அறிவின் முதிர்ச்சியால், கோல்களின் மீது வரிகளையும், வண்ணங்களையும் தீட்டி கருக்கொள்ளக் கூடிய கொழுத்த பெண் ஆடுகளின் முன்னே நிறுத்தினான். அதன் பயனால், யாக்கோபுவின் ஆடுகள் இரேகைகள் படிந்த பல நிற குட்டிகளையே ஈன்றன. அக் குட்டிகளெல்லாம் யாக்கோபுக்கு உரியதாயின. இப்படித் திருட்டுத்தன மில்லாமல் அறிவால் சேர்க்கின்ற பொருள்களை ஆண்டவனே அனுமதித்துள்ளாரே!" என்றான்.

"யாக்கோபு செய்தது மிகத் துணிகரமானச் செயல். அதுவும் அவன் சக்திக்கு மீறிய, ஆண்டவனுடைய ஆசீர் வாதத்தில் அடங்கிய செயல்! ஆனால், வட்டி சேர்ப்பது மனிதனுடைய செயலன்றோ! ஆண்டவனுடைய அருள் பெற்ற யாக்கோபுவின் செயலால், நீ உன்னுடைய மனித அறிவால் நீ சேர்க்கின்ற வட்டியும் நியாயமானதே என்று எப்படிக் கூறமுடியும்? ஷைலக், உன்னுடைய பொன் வெள்ளி நாயணங்கள் ஆடுகளா?" எனக் கடுப்புடன் வின வினான் அண்டோனியோ.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்னால் முடிந்த வரை என் பொன் வெள்ளி நாணயங்களை நான் வளர்க் கின்றேன்." என்றான் ஷைலக்.

ஷைலக்கின் வார்த்தையைக் கேட்ட அண்டோனியோ வெகுண்டு பஸ்ஸானியோவை நோக்கி, "பஸ்ஸானியோ இந்தத் துன்மார்க்க மனிதன் சுயநலத்திற்காக வேதநூலைத் துணைக்கழைக்கின்றான், பார்! பாவாத்மாக்கள் தேவ சாட்சிகளைத் துணைக்கழைப்பது, உள்ளத்திலே கொடுமையும், உதட்டிலே புன்னகையும் கொண்டவர்களைப் போன்றதாகும். அதுமட்டுமல்ல, உள்ளே மாசுகொண்டதாயினும், கண்களைக் கவர்கின்ற நிறமிக்க ஆப்பிள்பழங்களைப் போன்றதாகும்! ஓ, எத்தகைய பொய்மைமிக்க வெளித்தோற்றம் காணப்படுகின்றது!" என்று மனவேதனையுடன் கூறினான்.

அண்டோனியோவின் வார்த்தையைக் கேட்ட ஷைலக், "சரி, அண்டோனியோ, நீ கேட்பது மூன்றாயிரம் நாணயங்கள்! மூன்று மாதத் தவணை! இவ்வளவுதானே! சரி. வட்டி விதமென்ன?" என்றான்.

"ஷைலக், அதை நீயே தீர்மானிக்கலாம்" என விடையளித்தான், அண்டோனியோ.

அண்டோனியோவின் வார்த்தையைக் கேட்ட ஷைலக், தன்னைப் பொதுவிடத்திலே சந்தித்து பணம் கேட்கும் கிருத்துவ பெருவணிகன் அண்டோனியோ, ரியால்டோவில் அடிக்கடி பல வணிகர்கள் முன்னே தன்னைக் கேவலமாகப் பேசினதை நினைவில்கொண்டு ஆத்திரமடைந்து, "அண்டோனியோ, நான் கொடுக்கின்ற அசலுக்காகவும், வட்டிக்காகவும் என்னைப் பலமுறை ரியால்டோவில் பல வணிகர்கள் முன்னே நீ அடிக்கடி இகழ்ந்து பேசியுள்ளாய்! அப்போதெல்லாம் நான் பொறுத்துக் கொண்டிருந்தேன்! நான் மட்டுமல்ல; எங்கள் யூத மரபே பொறுமையை அணிகலனாகக் கொண்ட மரபு! பெருவணிகனே, என்னை எத்தனை முறைநாத்திகன் என்றும், கொலைக்கஞ்சாக்

குக்கல் என்றும் இகழ்ந்து கூறி, என் மேற்சட்டை மீது காரி உமிழ்ந்தாய்! இவ்வளவு அட்டூழியங்களேயும் நீ செய்ததற்குக் காரணம் நான் என் சொந்த வழிகளேப் பின்பற்றக் கூடாதென்பதற்காக வன்ருே! நீ என்னே முன்பு பார்க்க நேரிட்டபோதெல்லாம் வெறுப்புடன் சென்று விடுவாய். இன்று உதவிவேண்டி என்னிடம் வந்து, 'ஷைலக், இன்று எனக்குப் பண உதவிசெய்' என்று கெஞ்சுகின்றீர்! யார்மீது எச்சில்துப்பி, யாரைத், தெரியாது வீட்டு வாயற்படி ஏறும் நாயை உதைத்துத் தள்ளுவது போன்று, நிந்தித்து உதைத்துத் தள்ளினயோ, அவனிடமே பணம்வேண்டி வந்துள்ளாய்! இவ்வளவு அநியாய நிகழ்ச்சிகளுக்குப் பின்பும், என்னிடம் எத்தகைய பதிலே நீ எதிர்பார்க்கின்ருய்? அண்டோனியோ, 'ஒரு நாயிடம் பணமிருக்குமா? ஒரு குக்கல் மூன்ருயிரம் நாணயங்களேக் கடனுகக் கொடுக்க முடியுமா?' என்று பதில் கூறச் சொல்லுகின்ருயா! அல்லது, அடிமை ஆண்டானிடம் அடங்கி வணங்கி நிற்பது போன்று, பணிந்து நீ என்மீது சென்ற புதன்கிழமை துப்பியதற்காகவும், வேருேர் நாள் என்னே நிந்தித்ததற்காகவும், மற்ருெர் நாள் என்னே நாய் என்று கேவலமாகக் கூப்பிட்டதற்காகவும் நான் மிகவும் மகிழ்கின்றேன். அதனுல் நீங்கள் கேட்டபணம், இதோ, பெற்றுக்கொள்' என்று பதிலளிக்கச் சொல்லுகின்ருயா?" என்று வெறுப்புடன் உணர்ச்சி வேகத்துடிப்பால் கூறினுன்.

ஷைலக் சமயமறிந்து தன் செயலேக் கூறி பயன்பெற நினேக்கின்ற நிலேமையை உணர்ந்த அண்டோனியோ, "ஷைலக், நான் முன்பு உன்னே துப்பியது போன்றும் மீண்டும் செய்வேன். அதில் சந்தேகமில்லே. நீ இப்போது கொடுக்கப் போகின்ற பணத்தை உன் நண்பனுக்குக்

கொடுக்கப் போவதாக எண்ணவேண்டாம். நண்பனுக்கு நண்பன் பணஉதவி புரியும் போது, உயிரற்ற காசு, காசை ஈன்றெடுத்திடக் காண்பானு? அதாவது வட்டி வாங்குவானு? அதனுல், நீ ஒரு விரோதிக்குக் கடன் கொடுப்பதாக எண்ணிக்கொள். அதனுல், கடன் பெறுகின்ற நான், குறித்த நாளில் அதைத் திருப்பித்தரத் தவறுவேனுகில் என்மீது வாக்குறுதிச் சீட்டுப்படியும், சட்டப்படியும், நீ நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்!'' என்ருன்.

அண்டோனியோவின் உறுதியான பேச்சைக்கேட்ட ஷைலக் அவனைச் சமாதானப் படுத்துவது போன்று, "அண்டோனியோ ஏன் இவ்வளவு கோபப்படுகிருய்! நான் உன்னேடு நட்புகொண்டு அன்பாயிருக்க வேண்டுமென்ற எண்ணமுடையவனுகத்தான் உள்ளேன். நீ என்னை அவமானப் படுத்தியதையெல்லாம் மறந்துவிடுகின்றேன். உன்னுடைய தற்போதைய தேவையைப் பூர்த்திசெய்கின்றேன். நான் கொடுக்கின்ற கடனுக்கு சிறு தொகைகூட நீ எனக்கு வட்டியாகக் கொடுக்கத் தேவையில்லை. என்னுடைய உண்மையான களங்கமற்ற அன்பை வெளிப்படுத்தவே நான் இப்படிச் செய்கின்றேன்." என்று கள்ளமனதுடன் கூறினுன்.

ஷைலக்கின் சூதுக்குணத்தை அறியாத அண்டோயோ, "நீ சொல்வது உண்மையாயின், உன் செயல் அன்புச் செயலே!" எனக் கூறினுன்.

தந்திரக் குணம் படைத்த ஷைலக், "அண்டோனியோ, நான் உண்மையில் அன்பினுல்தான் வட்டியன்றி கடன் அளிக்கிறேன். நீ என்னுடன் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு வந்து, வாக்குறுதிச் சீட்டில் உன் கையொப்ப

மிட்டுக்கொடு. விளையாட்டிற்காக ஒரு நிபந்தனை ஏற்படுத்துகின்றேன்: வாக்குறுதிச் சீட்டில் குறிப்பிட்ட தொகையை அதில் குறிப்பிட்டுள்ள இடத்தில், தேதியில் மீண்டும் திருப்பித் தரத் தவறின், அதற்காக, நான் உன்னுடைய உடம்பில் எனக்கு விருப்பமான இடத்திலிருந்து, ஓர் இராத்தல் சதை எடுத்துக்கொள்ள அனுமதி அளிப்பதாக அந்தக் கடன் வாக்குறுதிச் சீட்டில் குறிக்கவேண்டும்" என்றான்.

இதைக் கேட்ட அண்டோனியோ சிறிதும் தயக்கமின்றி, "சரியாகட்டும், நீ கூறுவதுபோன்றே வாக்குறுதிச் சீட்டில் குறித்துக் கையொப்பமிடுகின்றேன்" என்று பதிலளித்தான்.

ஆனால் அண்டோனியோ இத்தகைய ஆபத்தான செயலுக்குடன்படுவது பஸ்ஸானியோவுக்குப் பிடிக்கவில்லை. அதனால், "அண்டோனியோ, நீ எனக்காக இத்தகைய சூழ்ச்சிமிக்க ஆபத்தான நிபந்தனை உடைய வாக்குறுதிச் சீட்டில் கையொப்ப வேண்டாம்" என பஸ்ஸானியோ கூறினான்.

"பஸ்ஸானியோ, நீ ஏன் பயப்படுகின்றாய்? நான் மூன்று மாதத் தவணையில், வாங்கின்ற கடனைத் திருப்பித் தர இயலாவிடில்தானே, ஷைலக் என்னுடலிலிருந்து ஒரு ராத்தல் எடுத்துக்கொள்ளப்போகின்றார். என்னுடைய கப்பல்கள் இன்னும் இரண்டு மாதங்களில் நான் உனக்காக வாங்குகின்ற கடன் தொகையைக் காட்டிலும் ஒன்பது மடங்கு இலாபத்துடன் இங்குத் திரும்பிவிடும். அதனால் நீ சிறிதும் அஞ்சத் தேவையில்லை" என்று அண்டோனியோ பஸ்ஸானியோவைத் தேற்றினான்.

அண்டோனியோவுக்கும், பஸ்ஸானியோவுக்குமிடையில் நிகழ்ந்த உரையாடலைக் கவனித்த சூதுமதி படைத்த ஷைலக் கபடற்றவன்போல், "ஓ, ஆப்ரகாம்! மற்றவர்களின் எண்ணங்களைத் தவருகப்புரிந்துகொள்ளும் இந்தக் கிருத்துவர்களை என்னென்பது!" என்று ஆண்டவனிடத்தில் முறையிடுவதுபோன்று நடித்துப் பஸ்ஸானியோவை நோக்கி, "உன்னை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்: உன் நண்பன் குறித்த தவணையை மீறினுல், நான் ஏற்படுத்துகின்ற நிபந்தனையை செயலாற்றிக் காணப் போகும் பயனென்ன? மனித உடலிலிருந்து எடுக்கப்படும் ஓர் இராத்தல் சதை, ஆடு மாடுகளின் சதையைப்போன்று மதிப்புப் பெறுமா? அல்லது அதனுல்தான் நான் ஏதேனும் பயனடைய முடியுமா? உன் நண்பனின் அன்பைப் பெறவே நான் வட்டியின்றி கடன் கொடுத்து, வேடிக்கை விளையாட்டிற்காக இந்த நிபந்தனையை ஏற்படுத்துகின்றேன்! என் அன்பைப் புரிந்துகொண்டால் நல்லது! இல்லையேல், நாம் விடைபெற்றுக்கொள்வோம். ஆனுல், என்னைத் தவருகக் கருதவேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்" என்றுன்.

ஷைலக்கின் உரையாடலைக் கேட்ட அண்டோனியோ, "ஆம், ஷைலக், நான் கூறியபடியே, உறுதிச் சீட்டில் கையொப்பமிடுகின்றேன். அதில் சந்தேகம் வேண்டாம்" என்று சொன்னுன்.

"அப்படியாயின் உடனே பத்தரப் பதிவுச் செய்யும் அலுவலகத்திற்குச் செல். அங்கு நான் கூறியபடி ஒரு வாக்குறுதிச் சீட்டுத் தயார் செய். நான் இங்கிருந்து என் வீட்டிற்குச் சென்று நீ கேட்ட அளவு நாணயங்களை எடுத்துக்கொண்டு உன்னை வந்தடைகிறேன்" என்றுன் ஷைலக்.

"சரி உடனே புறப்படு" என்று அண்டோனியோ ஷைலக்கிற்கு விடையளித்தான். அவனும் பொதுவிடம் விட்டு வீடு நோககிச் சென்ருன். பின்பு பஸ்ஸானியோ விடம், "இந்த யூதன் விரைவில் கிருத்துவனுகிவிடுவான். இவனிடம் அன்பு வளர்கின்றது" என்ருன் அண்டோனியோ. ஆனல், பஸ்ஸானியோ சூதுமதியுடையவனின் வார்த்தைகளில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறினுன்.

பஸ்ஸானியோவின் கலக்கத்தை அறிந்த அண்டோனியோ, "பஸ்ஸானியோ, தற்சமயம் நீ ஏன் வீணுக மனதைக் குழப்பிக்கொள்கின்ருய்! என்னுடைய கப்பல்கள் தவணைக்கு ஒரு மாதத்திற்கு முன்பே கரை வந்துவிடும், அதனுல் கவலையற்று வா, போவோம்" என்று கூறி பஸ்ஸானியோவின் கையைப் பிடித்திழுத்துச் சென்ருன்.

# 4. வீரனும் வீண்பெருமையும்

“என் கறுநிற மேனியைக் கண்டு என்னைப் புறக் கணித்துவிடாதே! ஆரணங்கே, என் நாட்டில் சூரிய வெப் பம் அதிகம். ஆண்டானிடத்தில் வேலை செய்யும் அடிமை பெறுகின்ற மேலங்கியைப்போன்று, நானும், என் நாட்டின ரும் சூரியனிடமிருந்து இந்தக் கறுப்பு நிறத்தைப் பெறு கின்றோம். சூரியனுடைய ஒளி, பனிக்கட்டிகள் உருகவேண் டிய அளவுக்குக்கூட, பரவாத குளிர் நாட்டிலிருந்து ஒரு வெள்ளையனை இங்கு அழைத்துவரச் சொல். அவனையும் என்னையும் உன் காதலினால் எங்கள் தோளிலிருந்து சிறிது இரத்தமெடுக்கச் சொல்லிப்பார். அதில் யாருடைய இரத் தம் அதிக சிவப்புடையதாக உள்ளதென்று நீயே அறிந்து கொள்ளலாம். பெருங்குடி மங்கையே, என்னுடைய இந்தத் தோற்றத்தைக் கண்டு என் நாட்டுக் கன்னியர்கள் பெரிதும் உவகையடைகின்றார்கள்; வீரர்கள் அச்சமுறுகின்றார்கள். என் இதய ராணியே, உன் எண்ணத்தை என் பக்கம் திருப் பவன்றி, வேறு எதற்காகவும் என் இக் கறுப்பு நிறத்தை நான் இழக்கச் சம்மதிக்கமாட்டேன்” என்று **மோராக்கோ** நாட்டு அரசிளங்குமரன் கன்னி போர்ஷியாவிடம் பெருமை யுடன் கூறினான்.

ஆப்ரிக்காவின் வடக்கேயுள்ள மோராக்கோ நாட்டில் சூரிய வெப்பம் அதிகம். அதனால் மேனி கறுத்த, மோராக்கோ அரசிளங்குமரன் எக்காளம் முழங்க பீடு நடையுடன் போர்ஷியாவின் மாளிகை வாயிலுள் நுழைந்து அவள் காட்டிய ஆசனத்தில் அமர்ந்து, அவளின் அழ கைக் கண்டு, அவளைத் தன் இதயத்துக்கு அரசியாக்கிட எண்ணித் தன் பெருமையை விவரித்தான்.

மோராக்கோ அரசிளைஞனின் தற்பெருமைப் பேச்சையும், கருநிற மேனியையும், போர்ஷியா விரும்பவில்லை. எனினும் மிகவும் பொறுமையுடன், "மன்னனே, கண் தேர்ந்த கணவனைக் கன்னியர் கூடி மணம் கொள்வது போன்றதன்று என் திருமணம். நானாக யாரையும் கணவனாகத் தேர்ந்தெடுக்க முடியாது. என் தந்தையின் அறிவு மிக்க நிபந்தனைபின்படி யார் நடந்து வெற்றி பெறுகின்றாரோ, அவரே என்னை மாலையிட அருகதையுடைவராவார். என் தந்தையின் அத்தகைய கட்டளை மட்டும் எனக்கில்லாமலிருந்தால், புகழ்வாய்ந்த அரசிளஞ்செல்வரே, நீரும் மற்றவரைப்போன்று என் மனதை வென்று மாலையிடும் பணியில் ஈடுபட்டு வெற்றியடையலாம்" என்று கூறினான்.

"உனக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன். என்னை இப்போதே அந்தப் பெட்டிகள் இருக்குமிடம் அழைத்துச் செல். என் நற்பேற்றைத் தெரிந்துகொள்வோம். பேரழகி, பாரசீக நாட்டு ஷாவையும், சுல்தான் சுலேமானை மும்முறை போரில் தோற்கடித்த பாரசீக அரசிளங்குமரனையும், கொன்று எனக்கு வெற்றியைத் தேடித்தந்த இந்தப் பெரும் புகழ்வாய்ந்த என் வாளின்மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்: உன்னை அடைவதற்காக, எத்தகைய கொடூரக் கண்களையுடையவனையும் நான் தலைகுனியச் செய்வேன். இவ்வுலகில் எவ்வளவு உரம் பெற்ற உள்ளத்தினனாயினும், அவனை எளிதில் வென்றிடுவேன்; பெண்கரடிகளிடம் பால் உறிஞ்சும் குட்டிகளைப் பிடுங்கி எறிவேன்; பசிக்கு இரையைத் தேடி கர்ஜித்துத் திரியும் சிங்கத்திடமும் வேடிக்கை புரிவேன். ஆனால், தற்போது ஏற்பாடு செய்யப் பட்டுள்ள அதிர்ஷ்ட பரிட்சை மிகவும் பரிதாபகரமாக உள்ளதே! பலம் பொருந்திய **எர்குலிஸ்** அவனுடைய

அடிமையோடு சதுரங்கமாடின், இருவரில் யார் அதிக பலமுடையவர் என்று விளக்க முடியுமா? சதுரங்கக்காயை உருட்டுவதிலே எளியவன் கையும் உயருமன்றோ. அப்படித் தானே ஏர்குலிஸ் காலக் கேட்டால் அவனுடைய அடிமையால் வீழ்ச்சியடைந்தான். ஆகையால், காலக்கோளாறு என்னையும், உன் தந்தை ஏற்படுத்தியுள்ள அதிர்ஷ்ட விளையாட்டில் தோல்வியுறச் செய்து, பொருத்தமற்ற வேறொருவன் உன்னை அடையச் செய்து, அதனால், நான் மனமொடிந்து இறந்து விடும்படி செய்யுமோ என்று அஞ்சுகின்றேன்" என்று தன் பலத்தைச் சோதிக்கத் தக்கத் திட்டம் பெட்டித் தேர்வில் இல்லைஎன்பதை மோராக்கோ அரசிளங் குமரன் போர்ஷியாவிடம் சுட்டிக் கூறினான்.

"நீர் இரண்டில் ஒன்றையே செய்ய வேண்டும். பெட்டிகளின் தேர்விலே இறங்க வேண்டும். இல்லாவிடின், பேசாமலிருக்க வேண்டும். ஆனால், நீர் தவறான பெட்டியைத் தேர்ந்தெடுப்பின், அதன் பிறகு, திருமண விஷயமாக எந்தப் பெண்ணையும் சந்திப்பதில்லை என்று தேர்வில் இறங்கும் முன் உறுதி மொழி எடுக்க வேண்டும். ஆகையால் சிந்தித்துக் கூறும்" என்றாள் போர்ஷியா.

மோராக்கோ மன்னன் போர்ஷியாவின் நிபந்தனைக்குட்பட்டு தேர்வில் கலந்து கொள்ள உடன் பட்டான் அதைக் கண்ட போர்ஷியா, "அரசிளைஞரே, முதலில் நீர் கோயிலுக்குச் சென்று திரும்பி வந்து, உணவு முடித்துப் பின்புஉன்னுடைய துணிகரசசெயலிலிரங்கலாம்" என்றாள். அவனும், "என் நற்காலம் எனக்கு ஆசிர்வதிக்கட்டும்" என்று கூறி விடை பெற்றான். அவனைத் தொடர்ந்துபோர்ஷியோவும் வெளியேறினாள். அப்போது எக்காளவோசை விண்முட்ட எழுந்தது!

# 5. விகடமும் விளைவும்

பெரு வட்டிக்குக் கடன் கொடுத்துப் பொருளீட்டும் யூதன் ஷைலக் வீட்டின் வேலையாள் **லான்ஸ்லாட் கோபோ** என்பவன், ஷைலக்கின் தொந்தரவு பிடிக்காமல் அவன் வீட்டை விட்டு வெளியேறிவிட எண்ணினான். அந்தச் சிந்தனை அவன் ஒரு தெருவில் நின்று கொண்டிருந்த போது ஏற்பட்டது. அவனுடைய மனசாட்சி அவனைத் திருட்டுத் தனமாக ஷைலக் வீட்டை விட்டு ஓடாதே என்றது. ஆனால் அவனுடைய துர்புத்தி—சாத்தான்—அவனைவெளியேறிடத் தூண்டியது. அதைப் பற்றிச் சிந்தித்தவனாய், தனக்குத்தானே, "என்னை நோக்கி, 'ஓடு' என்று கட்டளையிடுகின்றது என்னுள்ளிருக்கும் சாத்தான். என் மனசாட்சி 'ஓடாதே' என்று புத்தி கூறுகின்றது. 'லான்ஸ்லாட் நீ மேன்மையான குணம் பொருந்திய பெற்றோரின் மகன். நீ அவர்கள் புகழுக்குக் களங்கம் விளைவிப்பது போன்று சாத்தானுக்கு கட்டுப் பட்டு உன் எஜமானனை விட்டு ஓடாதே' என்று அறிவுரை கூறுகின்றது, என் கடின மனசாட்சி. 'ஓடு. உடனே ஓடு' என்று கட்டளையிடுகின்றது என்னுள்ளிருக்கும் துன்மார்க்க ஆவி. நான் என் மனசாட்சிக்கு விரோதமானால் என்னுள்ளிருக்கும் சாத்தானுக்கு அடிமை பட்டவனாவேன். மனசாட்சிக்குப் பயந்து தங்கினால் முன் சாத்தானை விட கொடிய சாத்தானாகிய என் யூத எஜமானிடம் சிக்கி, வருந்தித் தவிக்க வேண்டும். ஆகவே, இருவிதத்திலும்நான்சாத்தானுக்கேஅடிமையாகின்றபடியால், இவ்விடம் ஓடுவதே நல்லது! இதோ புறப்பட்டு விட்டேன்" என்று கூறி ஓட எத்தனித்தான். அச்சமயம்

ஒரு வயதான கிழவர் ஒரு கூடையுடன் எதிரே வந்து, "இளைஞனே, ஷைலக் வீட்டிற்கு வழி எது?" என்று கேட்டு நின்றார். அவரைக் கண்டதும் லான்ஸ்லாட், தனக்குத்தானே, "இவர் என் தந்தையன்றோ இந்த நேரத்தில் இங்கு வந்து விட்டாரே இவரோ முழுக் குருடாக உள்ளார். இவர் என்னைத் தெரிந்து கொள்ள முடியாதாகையால் இவரைக் கேலி செய்து விளையாடலாம்" என்று ஷைலக் வீட்டிற்கு வழி கேட்ட கோபோவிடம் "பெரியவரே, இங்கிருந்து வலப் புறம் திரும்பிச் சென்று, அடுத்த சந்திப்பில் இடப்புறம் திரும்பி சென்று, அதற்கடுத்த வீதிச் சந்தியில் எங்கும் திரும்பாது நேரே ஷைலக் வீட்டிற்குச் செல்லவும்" என்று குழப்பம் மிகுந்த வார்த்தைகளைக் கூறினான்.

"மிகவும் கடின வழியன்றோ நீர் கூறுவது" என்று முதிய கோபோ சொல்லிவிட்டு, "தம்பி, அந்த யூத எஜமான் வீட்டில் லான்ஸ்லாட் என்ற பெயருடைய ஒருவன் வாழ்கின்றான். அவன் உயிருடன் இருக்கின்றானா?" என வினவினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட லான்ஸ்லாட் தன்னுள்ளேயே, "இப்போது என்னையே, என்னைப் பற்றிக் கேட்கவாரம்பித்து விட்டார். அதனால், இவரை இன்னும் கலங்க விட்டு வேடிக்கை பார்ப்போம்" என்று எண்ணி, "லான்ஸ்லாட்டையா கேட்கின்றீர், ஐயோ, அவரைப் பற்றிக் கேட்காதீர். பாவம்! அவர் இயற்கையின் முடிவுக்காளாகி விட்டார். அதாவது உங்கள் வழக்கப்படி அவர் பரலோகம் சென்று விட்டார்" என்று கூறினான்.

அதைக் கேட்ட லான்ஸ்லாட் தந்தை கோபோ, "ஆ கடவுளே! அந்தப் பையன்தானே என் முதுமை பருவத்

திற்கு ஆதாரவாக இருந்தான்" எனக் கலங்கி வருந்த ஆரம் பித்தார்.

அப்போது லான்ஸ்லாட், மேலும் தந்தையைஏமாற்ற விரும்பாது, "தந்தையே, நான் உன் வயதான காலத்திற்கு ஒரு தடியாகவா இருக்க விரும்புகின்றீர். என்னை நீர் தெரிந்து கொள்ள முடிய வில்லையா?" என்று உண் மையை கூறிட எண்ணி கேட்டான்.

"உன்னை எனக்குத் தெரிய வில்லை. என் மகன் லான்ஸ்லாட் உயிருடனிருக்கின்ருனு? அல்லது இறந்து விட்டானு? சீக்கிரம் சொல்" எனக் கேட்டான் கோபோ.

"தந்தையே, என்னை நீர் இன்னும் அறிந்து கொள்ள முடிய வில்லையா" என்ருன் லான்ஸ் லாட்.

"நான் குருடன். உன்னை எனக்குத் தெரிய வில்லை" என்ருன் கோபோ.

"உண்மையில் உனக்கு கண்கள் தெரியுமாயின் நான் யார் என்பதை இந்நேரம் அறிந்து கொண்டிருப்பீர். மகனை அறிந்து கொள்கின்றவன் அறிவுடைய தந்தையாவான். பெரியவரே நான் உன் மகனைப் பற்றிக் கூறுகின்றேன். நீர் முதலில் என்னை ஆசிர்வதியுங்கள்! கொலையை நெடுநாட்க ளுக்கு மறைத்து வைக்க முடியாது. உண்மை என்றேனும் ஒரு நாளைக்கு வெளிப்பட்டே தீரும்" என்று கூறி லான்ஸ் லாட் பணிந்தான்.

"நீ என் மகனல்ல. தயவு செய்து எழுந்திரு" என் ருன் கோபோ.

"நான் மேலும் முட்டாள்தன விளையாட்டில் உம்மை ஈடுபடுத்த விரும்ப விலலை. உன் சொந்த மகன், லான்ஸ்

லாட் நான்தான். அதனால் என்னை ஆசிர்வதியும்" என்று விளக்கிக் கூறினன் லான்ஸ்லாட்.

"நான் உன்னை என் மகன் என்று ஏற்றுக் கொள்ள மாட்டேன்" என்று தீர்மானமாகக் கூறினன் கோபோ.

"இல்லை. நான்தான்உன் மகன். உன்அருமை மனைவி மார்கேரியின் மகன் லான்ஸ்லாட் நான்தான்" என்று வலி யுறுத்திக் கூறினன் லான்ஸ்லாட்.

தன் மனைவியின் பெயரைக் கூறக்கேட்ட கோபோ, எதிரில் நிற்பவன் தன் மகன்தான் என்று முடிவெய்தி, "கடவுளுக்கு நன்றிசெலுத்துவோமாக.லான்ஸ்லாட் நீ என் சதையையும் இரத்தமும் கலந்த மகனே.அதில்நான்மேலும் சந்தேகிக்கவில்லை" என்றுதன்முகத்துக்குநேரேமுதுகுப்புற மாகப் பணிந்திருக்கும் லான்ஸ்லாட் தலைமயிரைத் தடவிப் பார்த்து, ஆ! எத்தகைய நீண்ட தாடி உனக்குள்ளது. நம் வீட்டுக்குதிரை வால் மயிரை விட நீண்டுள்ளதே என்று தவருகக் கருதிக் கூறிக்கொண்டே, "நீயும் உன் எசமான ரும் நலம்தானே. நான் உன் எசமானர்க்கு ஒரு பரிசு கொண்டு வந்துள்ளேன்" என்றான் கோபோ.

தான் விட்டோடக் கருதியுள்ள எஜமானர்க்குத் தன் தந்தை பரிசில் கொண்டு வந்ததை மனதில் எண்ணி "நல் லது. ஆனல், என்னைப் பொறுத்தவரையில் என் எஜமா னனை விட்டோட தீர்மானித்து விட்டேன். கொஞ்ச தூர மேனும் ஓடின பின்புதான் என் கால்கள் நிலைத்து நிற்கும் என் எஜமானன் ஒரு உலோபி. அவனுக்குப் பரிசிலா கொடுப்பது! ஒரு துண்டு, கயிறு கொடுத்துத் தூக்கில் சாகச் சொல்லி யல்லவோ பார்க்கவேண்டும். இதோ பாரும் என்னை. என் விலா எலும்புகளை உன் விரல்களால்

எண்ணக் கூடிய அளவில் நான் மெலிந்திட உணவு அளிக் காமல் என்னைக் கொடுமைப் படுத்தியுள்ளதை அறிந்து கொள்ளும். தந்தையே நீர் பரிசுடன் இங்கு வந்து விட்டீர். அதை நான் பஸ்ஸானியோவுக்கு அளிக்கக் கொடு. அவர் வேலையாட்களை நன் முறையில் நடத்துகின்றார். அவரிடம் நான் வேலைக்கு அமர்கிறேன். அப்படியின்றேல் நான் கட வுள் படைத்த நில முள்ளவரை ஓடிக் கொண்டே யிருக்கத் தீர்மானித்து விட்டேன். அதோ அவரும் வருகிறார்! எனக்கு நற்காலமே! பாஸ்ஸானியோ வருகிறார்! நான் அந்த யூதனிடம் மேலும் வேலை பார்த்தால் நானும் யூதனாகவே மாறிவிடுவேன்" என்று கூறினான்.

லான்ஸ்லாட் கூறியபடியே பஸ்ஸானியோ, தன வேலையாள் லியோனார்டோவுடனும், மற்றவர்களுடனும் வந்து கொண்டிருந்தான். அவன் அருகிலிருந்த ஒரு வேலை யாளிடம் சில கடிதங்களைக் கொடுத்து, "இந்தக்கடிதங்களைக் கொடுத்து விடு. சாப்பாடு ஐந்து மணிக்கெல்லாம் தயார் செய்து விடு. கிரேஷியானோவை உடனே என் இருப்பிடம் வரச் சொல்" என்று உத்தர வளித்து அவனை அனுப்பி விட்டு, லான்ஸ்லாட் அருகில் வந்தான்.

அப்போது லான்ஸ்லாட், "தந்தையே இவர்தான் நான் கூறியவர்" என்று பஸ்ஸானியோவை அறிமுகப் படுத்தினான்.

கோபோ, "கடவுள் உமக்கு அருள்வார்" என்று பஸ் ஸானியோவை ஆசிர்வதித்தான். பஸ்ஸானியோ அதற்கு நன்றி செலுத்தி விட்டுத் தன்னிடம் அவர்கள் என்ன எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் என்று வினவினான். கோபோவும், லான்ஸ்லாட்டும் வளைத்து, வளைத்துப் பேசிக் கொண்டிருந்தார்களே யன்றி அவர்களின் நோக்கத்

தைத் தெரிவிக்க வில்லை. அதைக்கேட்ட பஸ்ஸானியோ வெறுப்படைந்திடவே, லான்ஸ்லாட் தான் பஸ்ஸானியோ விடம் வேலைக்கமர்ந்திட எண்ணியுள்ளதைக் கூறினன்.

லான்ஸ்லாட் எண்ணத்தை அறிந்த பஸ்ஸானியோ, "நான் இன்று உன் எஜமானர் ஷைலக்கைப் பார்த்தேனே! அவர் உன்னைப் பற்றி யாதொன்றும் கூற வில்லையே, ஒரு பணக்கார யூதனை விட்டு, என் போன்ற எளியவரிடம் வேலைக்கமர்வது எந்த விதத்திலே முன்னேற்றமாகும்!" என வினவினன்.

"ஷைலக் பணத்தை விட ஆண்டவன் அருள் உம்மிடம் அதிகமுள்ளது. ஆதலால், அவரை விட நீரே உயர்ந்தவர்" என்றான் லான்ஸ்லாட்.

"சரி, அப்படியாயின், உன் பழைய எஜமானர்க்கு விபரம் தெரிவித்து விட்டு விடை பெற்றுக் கொண்டு வாரும்" என்று லான்ஸ்லாட்டிடமும், கோபோ விடமும் கூறி விட்டு, லியோனர்டோவிடம், "இவனுக்கு மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்த சட்டையளிக்க ஏற்பாடு செய்" என்று கட்டளை யிட்டான் பஸ்ஸானியோ.

லான்ஸ்லாட்டும் தந்தையை நோக்கி, "நாம் ஷைலக்கிடம் செல்வோம். என்னால் ஏதும் இயலாது என்று கூறு வீரே! இப்போது பார்த்தீரா, என் பேச்சுத் திறமை தான் எனக்கு வேலை வாங்கித் தந்தது என்பதை! பைபிள் புத்தகத்தின் மீது நீதி மன்றங்களில் ஆணையிடும் இந்த இத்தாலிய நாட்டு கைகள் எல்லாவற்றிலும் என் கையிலே தான் அதிர்ஷ்ட ரேகைகள் ஓடுகின்றன. அதிர்ஷ்ட தேவதை என் பக்க முள்ளாள். தந்தையே, நாம் அந்த யூதனிடமிருந்து விடைபெற்று வருவோம், வாரீர்" என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு நடந்தான்.

அவர்கள் சென்றபின்பு பஸ்ஸானியோ அருகிலிருந்த லியோனர்டோவை நோக்கி, "இந்தப் பொருள்களனைத்தையும் மிக ஒழுங்காகக் கட்டி வைத்து விட்டுத்திரும்பிவா. நான் இன்று என் நெருங்கிய நண்பர்களுடன் விருந்துண்ணப் போகிறேன். சீக்கிரம் செல்" என்று உத்தர விட்டான். லியோனர்டோவும் யாவற்றையும் ஒழுங்காக விரைவில் முடிப்பதாகக் கூறிச் சென்றான். அச்சமயம் கிரேஷியானோ அங்கு வந்து சேர்ந்தான். அவன் பஸ்ஸானியோவை நோக்கி, "நான் உன்னிடத்தில் ஒரு வேண்டுகோள் விடுகின்றேன். அதை நீ நிறை வேற்ற வேண்டும்" எனக்கூறினான்.

"சரி அதை நான் நிறைவேற்றி விட்டதாகவே எண்ணிக் கொள்" என்றான் பஸ்ஸானியோ.

"நானும் உன்னுடன் பெல்மாண்ட் நகர்க்கு வருகிறேன்" என்றான் கிரேஷியானோ.

"நீ ஏன் அங்கு வருகிறாய்? கிரேஷயானோ, நீ முரட்டுத்தனம் மிக்கவன். உன்னுடைய நடிவடிக்கைகளின் தன்மையை நானும், மற்ற நண்பர்களும் உணர்ந்துள்ளோம். ஆனால் உன் தன்மையறியாத இடத்தில் உன் நடத்தையை வெறுக்கத்தான் ஆட்கள் இருப்பார்கள். உன்னுடைய முரட்டு குணமெனும் உணர்ச்சியை அடக்க மெனும் நீர்த் துளிகளினால் அடக்கிக் கொள்ள நீ முயற்சிக்க வேண்டும். இல்லாவிடில், நான் செல்லுகின்ற இடத்தில், என்னையும் உன் நடத்தையால் தவறாகப் புரிந்து கொள்ள நிலைமை ஏற்பட்டு, என் நம்பிக்கைகள் யாவும் பாழாகும்" என்றான் பஸ்ஸானியோ.

பஸ்ஸானியோவின் அச்சத்தைக் கண்ட கிரேஷியானோ, "பஸ்ஸானியோ, என்னால் அடக்கமாக இருக்க

முடியாவிடில் என்னுடனேயே சட்டைப்பையில் பிரார்த்தனை புத்தகங்களை வைத்து கொண்டு, உணவின் போது ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவது போன்று, எப்போதும், பக்திமானுகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். அதனுல், நான் மிகுந்த கவலையில் உள்ளவன் போன்ற நடத்தை யுடையவனுக இருப்பேன் என்று உறுதி மொழியளிக்கின்றேன். அப்படி நான் நடந்து கொள்ளாவிடில் என்னை இனி உன் நண்பனுக ஏற்றுக் கொள்ள வேண்டாம்" என்று தைரிய மூட்டினுன்.

"சரி, இனி உன் வார்த்தையைச் சோதிப்பேன்!" என்ருன் பஸ்ஸானியோ.

"ஆனுல், பஸ்ஸானியோ, நான் பெல்மாண்ட்டில் நெடுநாட்களுக்கு வாயடைந்து அடக்கமாக நடந்து கொள்ள வேண்டியிருப்பதால், இன்றிரவு உணவு போது மட்டும் நான் என் விருப்பம் போல் நடந்து கொள்ள அனுமதி யளித்து விடு" என்று கேட்டுக் கொண்டான் கிரேஷியானே.

"இன்றிரவு நீ மௌனம் சாதித்து அடக்கமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. நாமெல்லாம் நண்பர்கள்; களியாட்டத்தில் மூழ்கியிருக்க வேண்டியவர்கள். ஆதலால் நீ உன் விருப்பப்படி இன்றிரவு நண்பர்களோடு விளையாடலாம். எனக்கு வேறு வேலை உள்ளது. நான் இங்கிருந்து செல்கின்றேன்" என்று கூறினுன். கிரேஷியானேவும், "நானும் லோரன்சோவையும் மற்றவர்களையும் சந்திக்க வேண்டும். நாமெல்லோரும் இன்றிரவு உணவு போது மீண்டும் சந்திப் போம்" என்று கூறி விடை பெற்றுக் கொண்டான். பஸ்ஸானியோவும், கிரேஷியானேவும் பிரிந்து சென்ருர்கள்.

# 6. யூதன்மகளும் கிருத்துவனும்

வெனிஸ் நகரில் ஷைலக் வீட்டினுள் நுழைந்த லான்ஸ்லாட், தான் அவ்வீட்டு வேலையினின்று விலகி பஸ்ஸானியோவிடம் சென்று பணிபுரிய தீர்மானித்துள்ளதாக ஷைலக்கின் மகள ஜெஸ்ஸிக்காவிடம் கூறினன். அதைக் கேட்ட ஜெஸ்ஸிக்கா மிகவும் வருத்தத்துடன், "நரகம் போன்று இருக்கும் இந்த வீட்டில் நீ எனக்குப் பைசாம் போன்றிருந்து களிப்பூட்டிக் கொண்டிருந்தாய். என் தந்தையின் தொந்தரவால் நீ இவ்வீட்டு வேலையினின்று நீங்குவதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன். உன் விருப்பம் போன்று சென்றுவர, ஆனல் லான்ஸ்லாட், உனக்கு ஒரு பொன் நாணயம் தருகிறேன்; பெற்றுக்கொள். அத்துடன், இந்தக்கடிதத்தை நீபணியாற்றதேர்ந்துள்ளபுதிய எஜமானன் பஸ்ஸானியோவின் வீட்டில் இன்றிரவு உணவிற்கு வரும் லோரன்சோவிடம் சேர்த்துவிடு. இதை மிக இரகசியமாகச் செய்யவேண்டும். நாம் பேசுவது என் தந்தை அறியக் கூடாது. சென்று வா!" என்று கடிதத்தையும், நாணயத்தையும் கொடுத்து அனுப்பினள்.

கடிதத்தையும், இனமாகக் கிடைத்த நாணயத்தையும் பெற்றுக் கொண்ட லான்ஸ்லாட், "அம்மையே, உம்மைப் பிரிந்து போகின்றதால் எனக்கேற்பட்டுள்ள துக்கம் என் நெஞ்சை அடைக்கிறது. அதனல், பேச நாவெழவில்லை. அழகு மிக்க அன்புடைய யூத மகளே, என் கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீர் என்னுள்ளத் துள்ளிருக்கும் துக்கத்தை உமக்குத் தெரிவிக்கும். நான் கண்ணீர்த் துளிக்கு

அடிமையாகி, ஆண்மை இழக்கா முன்பு இங்கிருந்து நான் விடை பெற்றுச் செல்லுகின்றேன்" என்று கண்ணீருடன் கூறி நின்றான்.

ஜெஸ்ஸிக்கா, "சரி சென்றுவா, லான்ஸ்லாட்," என்று விடையளித்து அவனை அனுப்பினாள். லான்ஸ்லாட் வெளியே சென்ற பிறகு தனக்குத்தானே "ஐயோ, கொடுங் குணம் படைத்த என் யூதத் தந்தையின் மகளாக நான் பிறந்துள்ளதற்காக மிகவும் வெட்கப்படுகிறேன். நான் அவருடைய இரத்தத்திலிருந்து தோன்றியவளாயினும், நான் அவருடைய நடத்தையை வெறுக்கின்றேன். ஓ லோரன்சோ! நீர் ஏமாற்றாது எனக்களித்த வாக்குறுதிப் படி நடக்க முனைந்தால், நான் இந்தக் கொடுங் குட்டையி லிருந்து வெளியேறி, கிருத்துவளாகி, உன் அன்பு மனைவி யாகிவிடுவேன்!" என்று ஜெஸ்ஸிக்கா வருத்தத்துடன் கூறிக்கொண்டிருந்தாள்.

ஜெஸ்ஸிக்கா வீட்டைவிட்டு வெளியேறிய லான்ஸ் லாட், லோரன்சோவைத் தேடிக்கொண்டு வீதி வழியே நடந்தான். அந்த வீதியில் லோரன்சோவும், கிரேஷியானோ வும், சலாரினோவும், சோலானியோவும், இரவு நடக்கப் போகின்ற விருந்துபோது யாரும் அறியாமல் வெளியேறி மாறுவேடம் பூண்டு, வேடிக்கை நிகழ்த்துவது சம்பந்தமா கப் பேசிக் கொண்டு வந்தார்கள். தீவட்டி தூக்குவதற்கு ஆள் இல்லாத காரணத்தாலும், விருந்துண்ண இரண்டு மணி நேரமே பாக்கியிருந்ததால் வேடம் பூண போதிய நேரமின்மையால் கேளிக்கையைக் கைவிட எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் லான்ஸ்லாட் ஒரு கடிதத்துடன் லோரன் சோவை அடைந்தான். லோரன்சனோ, "நண்பனே,

லான்ஸ்லாட், என்ன செய்தி கொண்டு வந்துள்ளாய்?" என வினவினன். லான்ஸ்லாட் கையிலிருந்த கடிதத்தை லோரன்சோவிடம் கொடுத்து, "இதை நீர் பிரித்துப் பார்த்தால் மகிழ்வீர் என்று எண்ணுகின்றேன்" என்றான். லோரன்சோவும் கடிதத்தைப் பிரித்துப் பார்த்து, "இதை எழுதிய கையை நான் நன்குணர்வேன். இந்தக் கடிதத்தின் வெண்ணிறத்தைவிட இந்தக் கடிதத்தை எழுதிய கை மிகவும் அழகுடையது என்பதை நான் நன்றாக அறிந்துள்ளேன்" என்று மெல்லிய குரலில் கூறி மகிழ்ந்தான்.

அருகிலிருந்த கிரேஷியானோ, "காதற் செய்தியோ!" என வினவினன். கிரேஷியானோவுக்குப் பதிலளிக்காது லான்ஸ்லாட்டை நோக்கி, "நீ இப்போது எங்குப் போகின்றாய்?" என வினவினன் லோரன்சோ.

"என் பழையஎஜமானன், வீட்டுக்குச்சென்று, அவரை என் புதிய எஜமான் கிருத்துவர், பஸ்ஸானியோ; விருந்துண்ண அழைப்பதைத் தெரிவிக்க வேண்டும்" என விடையளித்தான் லான்ஸ்லாட்.

"அப்படியாயின், ஜெஸ்ஸிக்காவிடம், யாருமறியாமல் தனிமையில், நான் அவளை ஏமாற்றாது அவள் விருப்பப்படி இன்று நடப்பதாகக் கூறு" எனச் சொன்னான். லான்ஸ்லாட் விடைபெற்றான். பின்பு மற்றவர்களை நோக்கி, "நீங்கள் அனைவரும் இன்று இரவு மாறுவேட வேடிக்கைக்குத் தயாராகுங்கள். நான் தீவட்டித் தூக்கிக்கும் ஏற்பாடு செய்துவிட்டேன்" எனக் கூறினன் லோரன்சோ.

"சரி, நாங்கள் விடைபெற்றுக் கொள்கின்றோம்" என்றார்கள் சலாரினேவும், சோலானியோவும். "நீங்கள் என்னையும், கிரேஷியானேவையும் என் அறையில் சந்தியுங்

கள் என அவர்கட்கு விடையளித்து அனுப்பினான் லோரன்சோ. அவர்களும் சென்றார்கள்.

எல்லோரும் சென்ற பின்பு, கிரோஷியானோவும் லோரன்சோவும் வழி நடந்தார்கள். அப்போது கிரேஷியானோ, "நண்பனே, அழகி ஜெஸ்ஸிக்கா விடமிருந்து வந்த கடிதத்தில் என்ன எழுதியுள்ளது?" எனக் கேட்டான்.

"அதை நான் உன்னிடம் அவசியம் சொல்லத்தான் வேண்டும் நான் அவளை, எப்படி அவள் தந்தை வீட்டிலிருந்து, அழைத்துச் செல்வது என்ற விவரத்தையும், அவளிடம் எவ்வளவு நாணயங்களும், நகைகளுமுள்ளன என்பதையும் விளக்கமாக எழுதியுள்ளாள். நண்பனே, ஜெஸ்ஸிக்காவின் தந்தை ஒருவேளை பரலோகம் வர நேரிட்டால், அதற்குக் காரணம் நற்குணம் பொருந்திய ஜெஸ்ஸிக்கா அவனுக்கு மகளாகப் பிறந்ததாலாகும். அப்படியின்றி, ஜெஸ்ஸிக்கா நரகம் செல்ல நேரிட்டால், அதற்குக் காரணம், அவள், கொடிய தந்தைக்கு மகளாகப் பிறந்ததாகும். அருகில் வா, இதோ இந்தக் கடிதத்தைப் படித்துப் பார். கிரேஷியானோ அழகி ஜெஸ்ஸிக்கா எனக்குத் தீவட்டித் தூக்கியாக வேடம் பூணுவாள்" என்று கூறினான். கிரேஷியானோ கடிதத்தைப் படித்துக் கொண்டே லோரன்சோவுடன் வழி நடந்தான்.

# 7. ஆண் உடையில் பெண்

"நீ நினைக்கின்றாய் என்னைவிட நல்ல எஜமானனைத் தேர்ந்து வேலைக்கு அமர்ந்துவிட்டதாக! உன்னுடைய கண்கள் ஷைலக்கிற்கும் பஸ்ஸானியோவுக்குமுள்ள வித்தியாசத்தை வெகு சீக்கிரத்தில் காணும்!" என்று தன்னை விருந்துக்கு அழைக்க வந்த தன் முன்னாள் வேலையாள் லான்ஸ்லாட்டிடம் கூறினான் ஷைலக். பின்பு "ஜெஸ்ஸிக்கா!" என உரத்திக் கூப்பிட்டான். ஜெஸ்ஸிக்கா உடனே வரவில்லை. எதிரே நின்றிருந்த லான்ஸ்லாட்டை நோக்கி பொறுமையுடன், "நீ இங்கு அளவு மீறி உண்டது போன்று அங்குப் பஸ்ஸானியோவிடத்தில் உண்ணமுடியாது" என்று கூறினான். தன் மகளை மீண்டும் "ஜெஸ்ஸிக்கா!" என்று கூவி அழைத்தான். அவள் அப்போதும் வரவில்லை. மீண்டும் லான்ஸ்லாட்டை நோக்கி, "இங்குப் போன்று அங்கு உன்னால் குறட்டைவிட்டு நெடுநேரம் தூங்கவும், துணிகளை அடிக்கடி கிழிக்கவும் முடியாது" என்று பொச்சரிப்புடன் எச்சரித்துவிட்டு "ஜெஸ்ஸிக்கா! ஜெஸ்ஸிக்கா! உன்னை எவ்வளவு நேரம் கூப்பிடுவது!" என்று கத்தினான் ஷைலக்.

ஷைலக் கத்தி அழைத்தபோது லானஸ்லாட்டும் "ஜெஸ்ஸிக்கா!" என்று கூவி அழைத்தான். அதைக் கேட்ட ஷைலக் கோபமுடன் "உன்னை யார் கூப்பிடச் சொன்னது?" எனக்கேட்டான்.

அதற்கு லான்ஸ்லாட், "நான் உம்மிடம் வேலை செய்யும் போதுதான் நீர் உத்தரவளித்தா லொழிய எதையும் நானாகச் செய்யக்கூடாது!" எனக்கூறினான். அச்சமயம் ஜெஸ்ஸிக்கா அங்கு வந்தாள். அவளிடம் ஷைலக்

"நான் இரவு உணவிற்கு அழைக்கப்பட்டிருக்கின்றேன். ஜெஸ்ஸிக்கே, அங்குச் சாவிக்கொத்து இருக்கிறது" என்று கூறிக்கொண்டு தானே, "நான் ஏன் அங்கு போக வேண்டும். இந்தக் கிருத்துவர்கள் அன்பினால் என்னை அழைக்கவில்லை. என்னிடம் அன்புள்ளவர்கள் போன்று நடிக்கின்றார்கள். எனினும் வெறுப்புடனாகிலும், அந்த ஊதாரிக் கிருத்துவன் வீட்டிற்குச் சென்று விருந்துண்டு திரும்புவோம்" என்று சொல்லிக் கொண்டே ஜெஸ்ஸிக்காவை நோக்கி, "ஜெஸ்ஸிக்கா, என் மகளே, என் வீட்டைக் கவனமாகப் பார்த்துக்கொள். நேற்றிரவு நான் என் கனவில் பணப் பைகளைக் கண்டேன். அது மிகக் கெட்ட கனவு. அதனால், நான் இன்றிரவு விருந்துக்குப் போக விரும்பவில்லை" என்று தயக்கமுடன் கூறினான் ஷைலக்.

அருகிலிருந்த லான்ஸ்லாட், "என் எஜமானன் உம் வரவை விரைவில் எதிர்பார்க்கின்றார்" என்று கூறி விருந்துக்கு ஷைலக் செல்லவேண்டிய நிர்பந்தத்தை நினைவு படுத்தினான். அத்துடன், "அவர்கள் மாறுவேடக் களியாட்டமும் நிகழ்த்த எண்ணி உள்ளார்கள். நீர் அதையும் பார்க்க வேண்டுமென்று நான் கூறவில்லை. நீர் அதையும் பார்க்க நேரிட்டால், நிகழக் கூடாததொன்று நிகழப் போவதாகத்தான் எண்ணங் கொள்ளவேண்டும்" என்றான்.

லான்ஸ்லாட் மாறுவேடக் களியாட்டமும் உண்டு என்று கூறக்கேட்ட ஷைலக், மகளை நோக்கி, "ஜெஸ்ஸிக்கா, இன்று கிருத்துவர்கள் மாறுவேடம் பூண்டு களிக்கூத்தாடப் போகின்றார்களாம். வீட்டுக் கதவுகளை நன்றாகப் பூட்டிவை. வெறுக்கத் தக்க பேரிரச்சலை எழுப்பும் வாத்திய ஒலியைக் கேட்டவுடன், மேலேறி,

ஜன்னல் கதவுகளைத் திறந்து தெருவழியே தலையை நீட்டி, அந்த மாறுவேடக் கிருத்துவர்களைப் பாராதே! சலனமற்றிருக்கும் என் வீட்டினுள்ளே கிருத்துவர்களின் கூக்குரல் நுழையாதபடி, ஜன்னல் கதவுகளை நன்றாக மூடிவை. யாக்கோப்பின் கோல்மீது ஆணையாக நான் இன்றிரவு வெளியே போகாதிருப்பேன் என்று கூறமுடியும் ஆனால் பஸ்ஸானியோவின் விருந்துக்குப் போகவேண்டிய அவசியத்திலுள்ளேன்." என்று கூறி எச்சரித்துவிட்டு லான்ஸ்லாட்டை நோக்கி, "நான் வந்து கொண்டிருக்கிறேன் என்று நீ முன்னே சென்று அறிவி" என்று உத்தரவிட்டான் ஷைலக்.

"சரி, நான் அப்படியே போகின்றேன் 'ஐயா' என்று ஷைலக்கிடம் கூறிவிட்டு, ஜெஸ்ஸிக்காவைப் பார்த்து மிக மெல்லிய குரலில், ஷைலக் காதில் விழாதபடி, "ஆரணங்கே, இன்று உன் காதலனைக்காண ஜன்னல் வழியே பார்த்திடு" என்று கூறிவிட்டு வெளியேறினான்.

லான்ஸ்லாட் ஜெஸ்ஸிக்காவிடம் கூறியதைச் சரியாகக் கேட்கமுடியாத ஷைலக், மகளை நோக்கி; "அந்த முட்டாள் உன்னிடம் என்ன கூறினான்?" என வினவினான். அதற்கு அவள் "போய் வருகிறேன் என்றான் அதைத் தவிர்த்து அவன் வேறொன்றும் கூறவில்லை" என்று பதிலளித்துவிட்டாள்.

மகளின் பதிலைக் கேட்ட ஷைலக் "இந்த ஒட்டுச் சொக்காய்க்கார முட்டாள் லான்ஸ்லாட் மிக நல்லவன் தான். ஆனால், அவன் அமித உணவு விரும்பி; சோம்பேறி; காட்டுப் பூனையைவிட பகலெல்லாம் கூட அவன் தூங்குவான். தேன் சேர்ப்பது போன்று லாபகரமான என்

தொழிலுக்கு, சோம்பேறி தேனிக்கள் பொருத்தமற்றவை போன்று லான்ஸ்லாட்டும் பொருத்தமற்றவனே. அதனுல் தான் அவனைப் பிரித்தேன். அவனுடைய பிரிவினுல், என்னிடமிருந்து கடன் வாங்கிய ஊதாரி பஸ்ஸானியோ விடம் சென்று, அவன் பொருளெல்லாம் சுரையும்படி செய்ய வேலைக்கமர்ந்ததைக் கண்டு மகிழ்கிறேன். ஜெஸ்ஸிக்கா, உள்ளே போ. நான் ஒரு வேளை விரைவில் திரும்பி வந்தாலும் வருவேன். நான் சொன்னபடி கதவு களைத் தாளிட்டு உள்ளே இரு. சிரத்தையான கவனிப்பு காலக்கேட்டையும் தவிர்க்கும் என்ற பழமொழி விழிப் பான மனிதனுள்ளத்தில் எப்போதும மறையாதிருக்கும். ஆதலால் நீ மிக கவனமாக இரு" என்று கூறிவிட்டு, வெளியேறினுன்.

எச்சரிக்கை செய்துவிட்டு வெளியேறிய தந்தையை பின்னோக்கி "விடைபெற்றுக் கொள்கிறேன். என் திட்டம் நிறைவேறின் நான் உன்னையும்! நீ என்னையும் இழக்க நேரிடும்! அதனுல், விடைபெற்றுக் கொள்கிறேன்!" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு வீட்டினுள்ளே நுழைந் தாள் ஜெஸ்ஸிக்கா.

ஷைலக் விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்த அன் றிரவு குறிப்பிட்டபடி மாறுவேடம் பூண்டு, கிரேஷியானே வும், சலாரினேவும் ஷைலக் வீட்டுப் பெருவாயலினுள் நுழைந்தார்கள். அங்கு ஒரு சிறு கொட்டகையில் இரு வரும் தங்கினுர்கள்.

சலாரினேவை நோக்கி, "இதுதான் நம்மை லோரன்சோ தங்கியிருக்கச் சொன்ன கொட்டகை என்று நினைக்கின்றேன்" என்றுன். கிரேஷியானே.

1269
O311:) JAL
...RSITY EXTENSION LI...

"ஆமாம். இந்தக் கொட்டகைத்தான். ஆனல், லோரன்சோ, குறிப்பிட்ட நேரம் கடந்தும், வரக்காணுமே!" எனக் கூறினுன் சலாரினே.

"சாதாரணமாக காதலர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க குறித்த நேரத்திற்கு முன்னேயே கூடுவர். ஆனல் லோரன்சோ குறித்த நேரம் கடந்தும் இன்னும் இங்கு வராதது எனக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது" என்முன் கிரோஷியானே.

"வீனஸ் தெய்வம், பழைய காதலர்களின் உறவு நீடித்திருக்கச் செய்யச் செல்லும் வேகத்தைவிட பத்து மடங்கு அதிக வேகமாக, புதுக்காதலர்கள் கூடலை அங்கிகரிக்க, தன் புருக்களிழுக்கும் இரதத்தைச் செலுத்துவாள்" என்று சலாரினேவும், கிரேஸியானேவின் காதலர்களைப் பற்றிய எண்ணத்தை ஆமோதித்தான்.

"ஆம். அப்படித்தான். விருந்துண்டு எழுந்திருப்பவன், விருந்துக்கு முன்னிருந்த கடும்பசியை, விருந்துக்குப் பின் உணர்வதில்லை. சர்க்கஸ் விளையாட்டில் முதலில் இருந்த மனேவேகத்தை விளையாட்டு முடிவிலும் ஒரு குதிரை பெற்றிருப்பதில்லை. கைநிறைய, பைநிறைய, பொருள் கொண்டு பிரயாணம் செய்யப் புறப்பட்ட ஊதாரி இளைஞனைப் போன்று, கொடி பறக்க, இளங்காற்றை அணைத்து துறைமுகத்தை விட்டு கடலில் சென்ற கப்பல், பிரயாணத்தின் முடிவில், கைப்பொருள் இழந்து, உணவுக்கும் வழியின்றி, உடலிளைத்து, உருமாறித் திரும்பும் ஊதாரி இளைஞன் போன்று பெருங்காற்றில் கொடிகள் அறுந்து, பாய்மரம் கிழிந்துதானே கரைதிரும்புகின்றது! ஆகையால் சலாரினே, இன்பம் அனுபவிக்க பொருள் தேடி அலையும்போதிருக்

கும் உள்ள உவகையும், ஆவேச உணர்ச்சியும், சகிப்பின்மையும், தேடிய பொருள் கிடைத்து உண்மையில் இன்பம் தொடர்ந்து அனுபவிக்கும்போது இருக்கா. இதுதான் உலக இயல்பு" என்று லோரென்சோவிடம் காதலுக்குமுன் பிருந்த சிரத்தை காதல் கைகூடிய பிறகு இல்லாததை உவமைகளால் விளக்கினன், கிரேஷியானே.

கிரேஷியானேவின் விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த சலாரினே, லோரான்சோ வருவதைக் கண்டான். "இதோ லோரென்சோ வருகிறன். இனி நீ பேசாதே" என்று கிரேஷியானேவிடம் கூறினன்.

நண்பர்களை நெருங்கிய லோரென்சோ, "அன்புமிக்க நண்பர்களே, உங்களை நெடுநேரம் காக்க வைத்ததற்காக என்னைப் பொறுத்தருளுங்கள். என்னுடைய நிகழ்ச்சிகள் உங்களைக் காக்கவைத்தன. நீங்கள் உங்கள் மனைவிகளைத் திருடிச் செல்ல முற்படும்போது நான் உங்களுக்காக எவ்வளவு நேரமாயினும் காத்திருக்கிறேன், வாருங்கள். உள்ளே போவோம். இந்தத்தான யூத ஷைலக் குடியுள்ளார்" என்று கூறி, "உள்ளே யார்?" என்று உரத்திக் கூவினன்.

கூச்சலைக் கேட்ட ஆண் உடையிலிருந்த ஜெஸ்ஸிக்கா உள்ளே இருந்து, வெளியே தலையை நீட்டி, "யார் நீ? உன் குரலை நான் அறிவேனுயினும், என் உறுதிக்காக நீ யாரென்பதைச் சொல்" எனக் கேட்டாள்.

"நான்தான் லோரென்சோ! உன் காதலன்!" என்று மாறு வேடத்திலிருந்த லோரென்சோ கூறினன்.

அதைக் கேட்ட ஜெஸ்ஸிக்கா, "ஆம் லோரென்சோ தான்! நான் காதலிக்கும் லோரென்சோவேதான்! நான் உன்னுடையவள் என்று, லோரென்சோ, நீ ஒருவன்தான் அறிந்துள்ளாய்" என்ருள்.

"ஆம், கடவுளும், உன் ஆழ்ந்த உள்ளமும்தான் நீ என்னுடையவள் என்பதை அறிய முடியும்" என்று லோரென்சோவும் கூறினன்.

ஜெஸ்ஸிக்கா ஒரு பெட்டியை எடுத்து, "இதோ, இந்தப் பெட்டியைக் கீழே எறிகிறேன்; பிடித்துக்கொள். இந்தப் பெட்டியைச் சுமந்து செல்வது பயனுடையதாகும். எங்கும் இருள் சூழ்ந்திருப்பதால் நான் மிகவும் மகிழ்கிறேன். என்னை நீ பார்க்காதே; நான் பூண்டுள்ள வேடம் என்னை வெட்கப்படச் செய்கிறது. காதலுக்குக் கண் கிடையாது. அதனல் காதலர்கள் உணர்ச்சி வேகத்தில் இழைக்கின்ற தவறுகளை அறியமாட்டார்கள். அப்படி அவர்கள் ஒருவர்க்கொருவர் புரிகின்ற தவறுகளை உணர்வார்களேயாயின், மதனனும் ஆண் வேடத்தில் உள்ள என்னைக்காணின் வெட்கித் தலை குனிவான்" என்று கூறி பெட்டியைக் கீழே எறிந்தாள் லோரென்சோ. அதைப் பிடித்துக்கொண்டான்.

பெட்டியைப் பிடித்துக்கொண்ட லோரன்சோ, ஜெஸ்ஸிக்காவை நோக்கி, "சீக்கிரம் கீழே இறங்கி வா. நீ எனக்காகத் தீவட்டி பிடிக்கவேண்டும்" என்று கூறி அழைத்தான்.

"என்ன! நான் என் அவமானச் சின்னத்தை வெளிப்படையாகக் காட்ட, தீவட்டி பிடிக்கவேண்டுமா? நான் இருக்கின்ற நிலையே என் செயலையும் என்னையும் நன்கு விளக்குமே! மறைந்திருக்க வேண்டிய நான், மக்கள் முன்னே தீவட்டி பிடிக்கும் தொழிலை ஏற்க முடியுமா? என ஆச்சரியமும், அச்சமும், அவமானமும் ஒன்ருக கலந்த குரலில் வினவினள்.

"இப்போதுள்ள ஆண் வேடத்தில், நீ, உண்மையில் மறைந்துதான் உள்ளாய். சீக்கிரம் வா. இரகசியங்களுக்கு உறைவிடமான இரவு சீக்கிரம் கழிகின்றது அஃதன்றி, பஸ்ஸானியோவின் விருந்தில் நமக்காக எல்லோரும் காத்துக்கொண்டிருப்பார்கள்" என்று லோரென்சோ கூறி ஜெஸ்ஸிக்காவைத் துரிதப்படுத்தினன்.

"இதோ, வீட்டுக் கதவுகளைத் தாளிட்டுவிட்டு, இன்னும் அதிக பொன் நாணயங்களை எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு, ஜெஸ்ஸிக்கா கீழே இறங்கி மறைந்தாள்.

லோரென்சோவின் அருகிலிருந்த கிரேஷியானே, "உண்மையாகவே சொல்லுகின்றேன்: இவளிடத்தில் யூதனுக்குள்ள குணங்களில்லை" என்று ஜெஸ்ஸிக்காவைப் பற்றி லோரென்சோவிடம் கூறினன்.

லோரென்சோவும் "நான் அவளை முழு மனதோடு காதலிக்கிறேன். நான் எண்ணுவது சரியாயின் அவள் அறிவுடையவளே! என் கண்கள் பழுதடைந்திராவிடில் அவள் அழகியே! அவள்என் வார்த்தைப்படி நடக்கத் தயாராக இருப்பதிலிருந்து அவள் உண்மையுடையவள் எனகிறேன். அதனல், அறிவும், அழகும், உண்மையுமுடைய அவளை எப்போதும் என் மனதிலே இருக்கச் செய்யவேண்டும்" என்று கூறிக்கொண்டிருக்கும்போது ஜெஸ்ஸிக்கா வந்துவிட்டாள். அவளைக் கண்டதும், "நீ வந்துவிட்டாயா! சரி, எல்லோரும் புறப்படுங்கள். நம்முடைய விளையாட்டுத் தோழர்கள் நமக்காகக் காத்திருப்பார்கள்" என்று கூறி, லோரென்சோ, ஜெஸ்ஸிக்காவுடனும், மற்றவர்களும் புறப்பட்டான்.

வழியில் அண்டோனியோ இவர்களைச் சந்தித்தான். உடனே அவன், "யார் நீங்கள்? என வினவினான். கிரேஷியானோ "அண்டோனியோ!" என்று குரல் கொடுத்தான்.

கிரேஷியானோவை அறிந்து கொண்ட அண்டோனியோ, அவனை நோக்கி, சீச்சீ! மற்றவர்கள் எங்கே? இப்போது மணி ஒன்பதாகிறது. நம் நண்பர்கள் உனக்காகக் காத்திருந்தார்கள். இன்று மாறு வேடக் களியாட்டமில்லை. காற்றுச் சாதகமாக வீசுவதாக அறியவே, பஸ்ஸானியோ உடனே கப்பலேறப் போகிறான். உன்னைத்தேட இருபது ஆட்களை நாலு பக்கங்களிலும் அனுப்பினேன்" என்று கடிந்து கூறினான்.

அண்டோனியோவின் வார்த்தைகளைக் கேட்ட கிரேஷியானோ, "மகிழ்ச்சி, அண்டோனியோ எனக்கு விளக்கம் வேண்டாம். இதைவிட நானும் இன்றே வெனிஸ் நகரை விட்டுக் கப்பலில் செல்வதுதான் எனக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கும்" என்று கூறிவிட்டு மற்றவருடன் வழி நடந்தான்.

# 8. மண்டை ஓடு

பெல்மாண்ட் நகரில் போர்ஷியாவின் மாளிகையினுள்ளே எக்காளம் முழங்கியது. போர்ஷியாவும், மோராக்கோ அரசிளங்குமரனும் படைத் துணைவர்களுடன் ஒரு முற்றத்தினுள் நுழைந்தார்கள். அங்கு நின்றிருந்த பணிப் பெண்களிலொருத்தியை நோக்கி போர்ஷியா, "பெட்டிகள் உள்ள இடத்தின் திரையை நீக்கு. இந்த யுவ மன்னர் அவற்றைப் பார்வையிட வேண்டும்" என்று கூறி, கட்டளையிட்டாள். பெட்டிகள் வைக்கப்பட்டிருந்த அறையின் திரை நீக்கப்பட்டது. அப்போது மோராக்கோ இளவரசனை நோக்கி, "நீர் இப்போது உம்முடைய தேர்வை ஆரம்பிக்கலாம்" என்ருள்.

மோராக்கோ யுவ மன்னன். அந்தப் பெட்டிகளைப் பார்வையிட்டான். அவற்றில் முதல் பெட்டி பொன்னல் ஆக்கப்பட்டிருந்திருந்தது. அந்தப் பெட்டியின் மேலே, "என்னையார் தேர்ந்தெடுக்கின்றார்களோ, அவர்கள், அநேகமனிதர்கள்விரும்புவதை அடைவார்கள்" என்று எழுதியிருந்ததைக் கண்டான். அடுத்த பெட்டியை நோக்கினன். அது வெள்ளியால் செய்யப்பட்டிருந்தது. அதன் மேல், "என்னை யார் தேர்ந்தெடுக்கின்றார்களோ, அவர்கள், எந்தஅளவிற்குத்தகுதியோ அந்த அளவிற்குப் பெறுவார்கள்" என்று குறித்திருந்ததைக் கண்டான். கடைசியாக ஈயத்தாலான மூன்ரும் பெட்டியைப் பார்த்தான். அதன் மேல், "என்னை யார் தேர்ந்தெடுக்கிருர்களோ அவர்கள், உள்ளதை யெல்லாம் கொடுக்கத் துணிய வேண்டும்" என்று செதுக்கப் பட்டிருந்தது. இவற்றைப் படித்த மோராக்கோ இளவரசன் அருகிலிருந்த அழகி போர்ஷி

யாவை நோக்கி, "நான் தேர்ந்தெடுக்கும் பெட்டி சரியானது என்று எப்படி அறிவது?" என வினவினன்.

அதைக் கேட்ட போர்ஷியா, "அந்தப் பெட்டிகளிலொன்றில் என் சித்திரம் உள்ளது. இளவரசே, சித்திரமுள்ளபெட்டியை நீ தேர்ந்தெடுத்தால் நான் உன்னுடையவளாவேன்" எனப் பதிலளித்தாள்.

போர்ஷியாவின் பதிலைக் கேட்ட இளவரசன் "ஆண்டவனே, எனக்கு வழிகாட்டு" என்று பெருமூச்சு விட்டுக் கூறினன். பின்பு "நான் மீண்டும் இந்தப் பெட்டிகளைப் பார்க்க வேண்டும்" என்று சொல்லி கடைசியாகப் பார்த்த ஈயப் பெட்டியை முதலாவதாகப் பார்த்தான். அந்தப் பெட்டியின் மேல் எழுதியிருந்த வார்த்தையைப் படித்தான், "இந்தப் பெட்டி, என்னை யார் தேர்ந்தெடுக்கின்றனர்களோ அவர்கள், உள்ளதை யெல்லாம் கொடுக்கத் துணிய வேண்டும் என்றல்லவோ கூறுகின்றது! உள்ளதையெல்லாம் எதற்குக் கொடுக்க வேண்டும் இந்த ஈயத்திற்காகவா? இந்தப் பெட்டி என்னைப் பயமுறுத்துகின்றது. நற்பயனைப் பெறும் நம்பிக்கையில் மனிதர்கள் எதையும் துணிந்து செய்கின்றனர்கள். தோற்றத்திலகூட கேவலமாயிருக்கும் பொருள்களுக்காக பெருங் குடி மக்கள் எதையும் துணிந்து செய்ய மாட்டார்கள். ஆகையால் இந்த ஈயத்திற்காக நான் எதையும் கொடுக்கத் துணிய விருப்ப வில்லை" என்று கூறி, அடுத்து வெள்ளியாலான பெட்டி அருகில் சென்று நின்றன்.

"இந்தத் தூய்மையான பெட்டியின் மீது, 'என்னை யார் தேர்ந்தெடுக்கின்றனர்களோ, அவர்கள், எந்த அளவிற்குத தகுதியோ, அந்த அளவிற்குப் பெறுவார்கள்!" என்றல்லவோ எழுதப் பட்டிருக்கிறது. அவன் எந்த அளவுக்குத்

தகுதியுடையவனே, அந்த அளவுக்கு என்று கூறி அவ் வார்த்தையின் உட்பொருளைச் சிந்திக்கத் தொடங்கிய மோராக்கோ இளவரசன், அவனுடைய உள்ளத்தை நோக்கி, அவனே, "இங்கே நில். மோராக்கோ இளவரசனே, உன்னுடைய மதிப்பை—தகுதியைப் பாரபட்சமின்றி நிறுத்துப்பார். உன்னுடைய தகுதி மேம்படின், நீ அதிக தகுதியுடையவனுவாய். உன் நாட்டிலே உனக்குள்ள புகழும் பெருமையுமே உன் தகுதியாயின், அத் தகுதி, இந்தக் கன்னியைக் கைபிடிக்குமளவுடையதாகுமோ! அப்படி, நான் இந்தக்கன்னியை மணக்கத் தகுதியுடையவனு என்று எண்ணின், என் தகுதியை நானே குறைத்து மதிப்பிடுவதாகப் பொருளாகும்! நான் என் பிறப்பினுலும், செல்வத்தினுலும், கௌரவத்தினுலும், குணத்தினுலும், இந்தக் கன்னிக்குத் தகுதியுடையவனே. இவை அனைத்தையும் விட நான் அவளைக் காதலிக்கின்ற காரணத்தால் அவளை அடைய நான் தகுதியுடையவனே. ஆதலால், இந்தப் பெட்டியை நான் தேர்ந்தெடுத்தா லென்ன!" என்று கூறிக் கொண்டே பக்கத்திலிருந்த பொன்னலான பெட்டியின் மீது செதுக்கப் பட்டிருந்த எழுத்துக்களை உற்று நோக்கினன்.

"இந்த பொன் பெட்டியின் மீது என்னை யார் தேர்ந்தெடுத்தாலும் அவர்கள் அநேக மனிதர்கள் விரும்புவதை அடைவார்கள்" என்று எழுதப் பட்டிருக்கின்றது. "ஆம், இந்தப் பேரழகியை விரும்பி அநேக மனிதர்கள் உலகின் நான்கு மூலைகளிலுமிருந்தும் உயிருள்ள மனித இன தபசியைத் தரிசிக்க வரும் யாத்திரீகர்கள் போன்றல்லவோ வருகிருர்கள்! பாரசிகப் பாலே வனங்களும், அரேபிய பெருங் காடுகளும் போர்ஷியாவைப் பார்க்க வருகின்ற அரசிளங்

குமார்களின் நெடுவழிகளாக வன்றோ மாறியுள்ளன! இது மட்டுமா! பேரழகி போர்ஷியாவைக் காதலித்து அவளைக் காண வருகின்ற காதலர்கள் வான் முட்ட வீசும் அலைகடலையும் ஒரு ஓடையாகக் கருதியன்றோ விரைந்து வருகிறார்கள்! எப்படியாயினும் இந்த மூன்று பெட்டி .களிலொன்றில் போர்ஷியாவின் படடம் இருக்க வேண்டும். ஈயப் பெட்டியில் அப்படம் இருக்கக் கூடாதோ! சீச்சீ! எத்தகைய இழிவான எண்ணம்! ஈயம் போர்ஷியாவுக்குச் சவப் பெட்டியாகக்கூடத் தகுதியற்றது! அவள சித்திரம் வெள்ளியினாலான பெட்டியிலிருக்கும் என்று நினைப்பதும் உண்மையான பொன்னைப் பத்து மடங்கு குறைத்து மதிப்பிடுவதாகும். என்னே என் இழிவான எண்ணம்! பொன்பேழையிலன்றி வேறெதிலும் புகழ் வாய்ந்த வைரத்தை வைத்திருக்க மாட்டார்கள். இங்கிலாந்து நாட்டில், பொன் நாணயத்தில் ஒரு தேவதை பொறிக்கப் பட்டிருக்கிறது, ஆகையால் இந்தப் பொன் பேழையில் தான் போர்ஷியாவின் சித்திரமும் இருக்கக் கூடும்" என்று தனக்குத்தானே சிந்தித்ததன் விளைவாக முடிவு வெய்தி, போர்ஷியாவை நோக்கி, "சாவியைக் கொடு. நான் இந்தப் பேழையைத் திறந்து, என் பேற்றை அறிந்து கொள்கிறேன்!" என்றான்.

"அதோ, சாவி! அங்குள்ளது; எடுத்துக் கொள்! இளவரசே, நீர் தேர்ந்தெடுக்கின்ற பெட்டியில் என் உருவப்படம் இருப்பின் நான் உன்னுடையவளே!" என்றாள்.

இளவரசன் சாவியை எடுத்துப் பொன் பெட்டியைத் திறந்தான். உடனே அப்பெட்டியினுள்ளிருந்ததைப் பார்த்து அஞ்சி, "ஆ, இங்கு என்ன இருக்கின்றன! ஒரு இறந்தவர் மண்டையோடும், அதினுள்ளே ஒரு காகிதச் சுருளு

மன்றே இருக்கின்றன! இந்தக் காகிதச் சுருளில் ஏதோ எழுதப் பட்டிருக்கிறது. அதை நான் படிக்க வேண்டும்" என்று கூறி, படிக்கத் தொடங்கினன்: "மின்னுவதெல்லாம் பொன் அல்ல என்ற வாசகத்தை அடிக்கடி பிறர் சொல்ல கேட்டிருப்பாய். என் மேல் தோற்றத்தைக் கண்டு. அநேக மனிதர்கள் தம் உயிரையே இழந்திருக்கிறார்கள். சவக்குழி களின் மீது கட்டப்படுள்ள சமாதிகள் பிரகாசமாக இருந் தாலும், அதனடியிலே உள்ள குழியில் புழுக்கள் நிறைந்த பிண மன்றே இருக்கும்! நீ அச்ச மற்றிருப்பது போன்று அறிவுடையவனு யிருப்பின், உன் தோள்களிலே இளமை யும், அறிவிலே முதுமையுமுடை யவனுயின், உனக்கு இக் கடிதம் கிடைத்திருக்காது. உனக்கு விடையளிக்கிறேன். உன்னுடைய காதல் மடிந்தது!"

கடிதத்தைப் படித்த இளவரசன் மனமொடிந்து, "ஆம். என் காதல் மடிந்ததுதான். என் உழைப்பும், முயற்சி யும் வீணுயின. பொங்கியெழுந்த என் காதலுணர்வு கடும் ஏமாற்றத்தில் முடிவடைந்தது" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டு, போர்ஷியாவை நோக்கி, "போர்ஷியா, வேதனை உளளத்துடன், பிரிய மனமின்றி பிரிந்து போகிறேன்! காதலில் தோல்வி காண்கின்றவர்களனைவரும் இப்படித்தான் பிரிகின்றார்கள்!" என்று சொல்லி விட்டு அவனுடைய துணையாட்களுடன் வெளியேறினன். எக்காளம் முழங்கியது.

மோராக்கோ சென்றபின் போர்ஷியா, "தொல்லை யின்றி தொலைந்தான்! திரையை இழுங்கள், இவனைப்போன்ற கருமேனியுடையவர்கள் இவன் வழியிலேயே என்னைத் தேர்ந்தெடுக்கட்டும்" என்று கூறி, திரை மூடப்பட்டபின், தோழியருடன் வெளியேறினள்.

# 9. பிரியாப் பிரிவு

"பஸ்ஸானியோ கப்பல் புறப்பட்டதை நானே நேரில் கண்டேன். கிரோஷியானோ மட்டும்தான் பஸ்ஸானியோ வுடன் சென்றான். அந்தக்கப்பலில் லோரென்சோ இல்லை என்று நான் உறுதியாகச் சொல்கின்றேன்" என்று சலாரினோ சோலானியோவுடன், வெனிஸ் நகரத் தெருவொன் றில் பேசிக் கொண்டு வந்தான்.

"அந்தக் கொடும் யூதன், இறைமகனிடத்திலே சென்று உரத்தக் குரலில் முறையிட்டு அவருடன் பஸ்ஸா னியோவின் கப்பலைச் சோதிக்கச் சென்றான்" என்று சோலானியோ பேச்சைத் தொடர்ந்தான்.

"ஆமாம், வெனிஸ் இறைமகனும், ஷைலக்கும் கடற் கரைக்கு வந்தார்கள். ஆனால் அவர்கள் வருகைக்கு முன்பே கப்பல் புறப்பட்டு விட்டது. அப்போது அங்கிருந்த அண் டோனியோ, பஸ்ஸானியோவின் கப்பலில் லோரென் சோவும் ஜெஸ்ஸிக்காவும் ஏறிச் செல்ல வில்லை என்று உறுதியாகக் கூறினார். அந்தஇறைமகனுக்கு லோரென்சோ வும் அவன் காதலி ஜெஸ்ஸிக்காவும் ஓர் உல்லாச படகில் சென்றார்கள் என்ற செய்தியும் அங்குக் கிடைத்தது" என்று சலாரினோ லோரென்சோ ஜெஸ்ஸிக்காவின் ஓட்டத் திற்குப் பின் நிகழ்ந்ததைக் கூறினான்.

ஆனால் மகளும், பணமும் காணமற் போனதை அறிந்த ஷைலக், பித்தன் போன்று, அபூர்வ முறையில், ஆத்தரமடைந்து, அறிவு குழம்பி, "என் மகள்! என் பணம்! என் மகள் ஒரு கிருத்துவனோடு ஓடி விட்டாள்! ஐயோ!

என் மகளும் பணமும் போச்சே! ஓ நீதியே! சட்டமே! என் மகளும் பணமும் பறிபோனதை அறிந்து மௌன முற்று இருக்கின்றாயே! எனக்கு நீதி வழங்க மாட்டாயோ! என் மகள் என்னிடமிருந்து இரண்டு பைப் பொன் நாணயங்களைத் திருடிக் கொண்டு ஓடி விட்டாளே! நகைகளையும் இரண்டு விலையுயர்ந்த வைரக் கற்களையும் திருடிக் கொண்டு ஒரு கிருத்துவன் பின்னால் ஓடி விட்டாளே! நீதியே! நேர்மையே! என் மகளைக் கண்டு பிடித்து உதவு! அவளிடம் என் பணமும் நகைகளுமிருக்கின்றனவே!' என்று வீதியெல்லாம் கத்திக் கொண்டே சென்றான்" என்று சோலானியோ ஷைலக்கின் அளவு மீறிய கோபாவேசத்தையும், பணப் பைத்தியத்தையும் விளக்கினான்.

"அப்படி அவன் வீதியெல்லாம் கத்திக் கொண்டு போன போது சிறுவர்களெல்லாம் அவனைத் தொடர்ந்து அவன் வார்த்தைகளையே திரும்பத் திரும்பக் கூறி அவனை ஏளனமன்றோ செய்தார்கள்!" என்று சோலானியோவைத் தொடர்ந்து சலாரினோ கூறினான்.

"சலாரினோ, பணத்தால் ஷைலக் குணம் இப்போது மாறியுள்ளது இச்சமயத்தில் அண்டானியோ, வாக்குத் தந்தது போன்றுகடனைத் தவணைக்குள் திருப்பித் தந்துவிட முயற்சிக்க வேண்டும். இல்லையேல் கொடுங் குணங்கொண்ட ஷைலக் அண்டோனியோவை இலேசில் விடமாட்டான்" என்று சோலானியோ கவலையுடன் கூறினான்.

"ஆமாம். நீ சொல்வது உண்மைதான். நேற்றுக் கூட ஒரு பிரஞ்சு நாட்டு வியாபாரியோடு பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் விலையுயர்ந்த பொருள்கள் ஏற்றிச் சென்ற ஒரு வெனிஸ் கப்பல இங்கிலீஷ் கால்வாயில் சேதமடைந்தாகக் கூறினார். வெனிஸ் கப்பல்என்றவுடனே

எனக்கு அண்டோனியோவின் பல கப்பல்களின் மீதுதான் கவனம் சென்றது. நான் சேதமடைந்த வெனிஸ் கப்பல் அண்டோனியோவுடையதாக இருக்கக் கூடாதென்று விரும்புகின்றேன்" என்ருன் சாலாரினே.

"சலாரினே, அண்டானியோவிடம்இந்தச்செய்தியை திடீரென்று கூறிவிடாதே. அது அதிர்ச்சியை உண்டாக்கும். ஆகையால் மிகவும் நிதானமாக இந்தச் செய்தியை அண்டோனியோவுக்குத் தெரிவி" என்று சோலானியோ எச்சரித்தான்.

அருளுள்ளம் படைத்த மனிதன் பூமி நோக நடக்க மாட்டான். நான் அண்டோனியோவும், பஸ்ஸானியோவும் பிரியாமற் பிரிந்த காட்சியைக் கண்டேன், "என்னுல் கூடுமானவரை விரைவில் திரும்பி வர முயற்சிக்கின்றேன்" என்று அண்டோனியோவிடம் பஸ்ஸானியோ கூறிய போது, 'எனக்காக நீ உன் வேலைகளை பூரணமாக நிறைவேற்றத் தவற வேண்டாம். தேவையான காலம் வரை பெல்மாண்ட் நகரில் தங்கியிரு. ஷைலக் என்னிடமிருந்து பெற்ற வாக்குறுதிச் சீட்டைப் பற்றி நீ சிந்திக்க வேண்டாம். உன் காதல் எண்ணத்திலே ஷைலக் இடம் பெற விட வேண்டாம். ஆனந்தமாக இரு. உன் காதல் வெற்றி பெறும் வழிவகைகளில் கவனத்தைச் செலுத்து! என்று அண்டோனியோ பதில் சொன்ன போது அவன் கண்களில் நீர் பெருகிற்று. வெனிஸ் வணிகன் கண்ணீரை மறைக்க, முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, ஆழ்ந்த அபூர்வமான அன்பினுல் கட்டுண்டு, பஸ்ஸானியோவின் கையைக் குலுக்கி வழியனுப்பினுன்" என்று கூறினுன் சலாரினே.

"அண்டானியோ, பஸ்ஸானியோவுக்காகவே இவ்வுலகில் வாழ்கின்ருன் என்று நினைக்கின்றேன். அவன் இப்போது தனித்திருப்பான். நாம் விரைந்து சென்று, அவனின் தனிமையைப் போக்கி மகிழ்ச்சியூட்ட முயல வேண்டும்" என்ருன் சோலானியோ.

"ஆம். நாம் அப்படியே செய்வோம், வா!" என்று சலாரினே விடையளித்து, சோலானியோவுடன் சென்ருன்.

# 10. பித்தனின் தலை

"சீக்கிரம்! சீக்கிரம்! சீக்கிரம் திரையை அகற்றுங்கள்! ஆரகன் இளவரசர் உறுதி மொழி அளித்து விட்டார். பேழையைத் தேர்ந்தெடுக்க வருகிறார். சீக்கிரம்!" என்று பணிப் பெண்களை நோக்கிப் பரபரப்புடன் நெரிஸ்ஸா. கட்டளை யிட்டாள்

சிறிது நேரத்திற்கெல்லாம் எக்காளம் முழங்கியது. ஆரகன் இளவரசரும் போர்ஷியாவும், துணையாட்களும் பெட்டிகள் உள்ள இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அப் போது இளவரசனை நோக்கி, "மேன்மை மிக்க இளவரசே, இங்குத்தான் பெட்டிகள் உள்ளன. இப்பெட்டிகள் ஒன் றில் என் உருவப்படம்உள்ளது. அந்தப்பெட்டியைநீர்தேர்ந் தெடுப்பின்உடனேநம்திருமணம்நடக்கஏற்பாடாகும். இதில் நீர்தவறின், வேறு பேச்சின்றி இவ்விடத்தைவிட்டு உடனே அகன்று செல்லவேண்டும்" என்றாள் போர்ஷியா.

"பேரழகி, நான் அளித்த மூன்று உறுதிமொழிகள் எனக்கு நினைவிருக்கின்றன. வேண்டுமாயின் சொல்லுகின் றேன்: முதலாவதாக, நான் தேர்ந்தெடுக்கின்ற பெட்டியை யும் அதிலுள்ளதையும் வேறு யாரிடமும் சொல்லக் கூடாது. இரண்டாவதாக, நான் சரியானப் பெட்டியைத் தேர்ந்தெடுக்கத் தவறின் என் வாழ்க்கையில் திருமணத்திற் காக வேறு பெண்ணைக் காதலிக்கக் கூடாது. மூன்றாவதாக என் நற்பேற்றில் நான் தோல்விகாணின் இவ்விடத்தை விட்டு உடனே அகன்று செல்லவேண்டும் சரிதானே!" என்றான் இளவரசன்.

"ஆம். என்னை நாடி எனக்காக எதையும் இழக்கத் துணிந்து வருகின்றவர்கள் இந்த மூன்று மொழிகளையும் ஏற்று உறுதியளித்துத்தான் தேர்வில் இறங்குகின்றார்கள்" என்றாள் போர்ஷியா.

"நானும் அதற்காகத் தயாராக உள்ளேன். என் வினை என் உள்ளத்திலுள்ள நம்பிக்கைக்கு உதவுவதாக!" என்று கூறிப் பெட்டிகளைப்பார்வையிட்டான் ஆரகன் இளவரசன்.

"தங்கம்; வெள்ளி; கேவலமான ஈயம்! ஈயப் பெட்டியின் மேல் ஏதோ எழுதியுள்ளதே: 'என்னை யார் தேர்ந்தெடுக்கின்றார்களோ, அவர்கள், உள்ளதையெல்லாம் கொடுக்கத் துணியவேண்டும்! உம். நான் என்னுடையது யாவையும் கொடுக்கத் துணியும் முன்பு நீ அழகாகவன்றோ இருக்க வேண்டும். அதோ, தங்கப் பெட்டி! ஆ! அதைப் படித்துப் பார்ப்பேன்! 'என்னை யார் தேர்ந்தெடுக்கின்றார்களோ, அவர்கள், அநேக மனிதர்கள் விரும்புவதை அடைவர்.' அநேக மனிதர்கள் விரும்புவதா! கண்காணும் வெளிப் பகட்டை மெய் என்று நம்பி உள்ளிருப்பதை அறியாது தேர்ந்தெடுக்கும் முட்டாள் கூட்டமன்றோ, அநேக மனிதர்கள்! கால நிலையையும், கடும் காற்றையும், உணராது, சுவர் வெளியில் கூடுகட்டும் பரத்வாஜக் குருவியின் அறிவைப் போன்றதன்றோ, அந்த 'அநேகர்' அறிவும். நான் அநேகர் விரும்பும் இதைத் தேர்ந்தெடுக்க விரும்பவில்லை. ஏனெனில், சாதாரண நாகரிகமற்ற மனிதர்களின் மன உணர்ச்சியோடு நான் இணைந்திட விரும்பவில்லை! இதோ, வெள்ளிப் பேழை! ஏ, வெள்ளிப் பேழையே! நீ என்ன கூறுகிறாயோ! 'என்னை யார் தேர்ந்தெடுக்கின்றார்களோ, அவர்கள், எந்த அளவிற்குத் தகுதியோ, அந்த அளவிற்குப் பெறுவார்கள்' நன்றாகக் கூறினாய்! வினையை ஏமாற்றி, தகுதியற்ற உயர்வுக்

குத் தன்னைப் பாத்திரமாக்கிக் கொள்ள எவனொருவனுக்கும் உரிமை ஏது? தகுதியற்ற நிலைக்கு ஆளாக யாரும் எண்ணக் கூடாது. அந்தஸ்தும், உயர்வும், உத்தியோகமும் பெரும்பாலும் தவறான முறைகளினாலேயே பெறப் படுகின்றன! ஆனால் உண்மையான புகழ், அதைப் பெறுவதற்குத் தகுதியுடையவனுக்கேயன்றோ கிடைக்கவேண்டும்! அப்படியாயின், தலைகுனிந்து நிற்கின்ற எவ்வளவு பேர் தலை நிமிர்ந்து நிற்கவேண்டிய நிலை ஏற்படும்! எவ்வளவு அடிமைகள், உரிமையுடையவர்களாக மாறவேண்டி ஏற்படும்! அதிகாரம் செய்கின்றவர்களில் எவ்வளவு பேர் அதிகாரம் செய்யப்பட வேண்டியவர்களாக மாறவேண்டிய நிலை ஏற்படும்! களங்கமற்ற மேன்மையோடு கலந்திருக்கும் கீழ்மையை எந்த அளவில் பிரித்திட முடியும்! காலக் கேட்டினால் சிதைவுண்டிருக்கும் மேன்மக்களை எந்த அளவில் பழைய மேன் நிலைக்குக் கொண்டுவர முடியும்? சரி. நான் இந்த வெள்ளிப் பேழையையே தேர்ந்தெடுக்கின்றேன். நான் போர்ஷியாவை அடைய தகுதியுடையவனே. ஆதலின் தகுதிக்கு அவசியம் பாத்திரமாவேன்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு, போர்ஷியாவை நோக்கி, "இந்தப் பெட்டியின் சாவியைக் கொடு. இதை நான் உடனே திறந்து என்னுடைய அதிஷ்டத்தைப் பார்க்க வேண்டும்" என்று சொன்னான்.

இளவரசர்க்குச் சாவி கொடுக்கப்பட்டது. அவர் பெட்டியையும் திறந்தார். ஆனால், அதிலிருந்த பொருளைக் கண்டு வாயடைந்து நின்றார். அதைக் கண்ட போர்ஷியா, "அதிலுள்ளதைப் பார்த்து ஏன் நெடு நேரமாக மலைத்து நிற்கின்றீர்?" என வினவினாள்.

"இதிலே என்ன இருக்கிறது? சிமிட்டும் கண் பித்தன் ஒருவனின் உருவப்படமும், காகித சுருளையுமன்றோ

இருக்கின்றன! அதை நான் படித்துப் பார்க்கிறேன். எத்தகைய பொருத்தமற்ற நிலை! நான் நினைத்தது ஒன்றிருக்க நிகழ்ந்தது வேறொன்றாகவன்றோ உள்ளது! நான் ஒரு பித்தனின் தலையைத் தவிர்த்து வேறெதற்கும் தகுதியற்றவனா? இதுதானா எனக்குக் கிடைத்த பரிசு?" என்று உள்ள அதிர்ச்சியுடன் சொல்லிக் கொண்டிருந்தான்.

அப்போது போர்ஷியா, "குற்றவாளிகளும் நீதிபதிகளும் வெவ்வேறானவர்கள்; ஒருவர்க்கொருவர் எதிரிகளுங்கூட!" எனக் கூறி, ஆரகன் இளவரசன் உடனே, பேசாது, அவ்விடத்தைவிட்டு அகலவேண்டியதை மறைமுகமாக நினைவு படுத்தினாள்.

ஆனால், அந்த இளவரசன் கடிதச் சுருளைக் கையிலெடுத்துப் படிக்க ஆரம்பித்தான். "ஒரு மனிதன் ஏழுமுறை அவனுடைய பகுத்தறிவை உபயோகப்படுத்தினாலும், அந்த ஏழுமுறையும் தவறலாம்! சிலர் பொய்த்தோற்றத்தை மெய் என்று நம்பி விநாடியில் மறைகின்ற இன்பத்தை பெரிதென அனுபவிக்கின்றார்கள் மேலே அறிவாடையைப் போர்த்திய முட்டாள்களும்-பித்தர்களும்-உண்டு. அதற்கு உதாரணம் இங்குள்ளது. இந்த வெள்ளிப் பெட்டியில் ஒரு பித்தனின், முட்டாளின் உருவம் இருக்குமென்று யார் எண்ண முடியும்! நீ யாரை மணந்தாலும், நான் (முட்டாள்) உன் தலையிலிருப்பேன். ஆதலால் நீ இங்கிருந்து உடனே செல்" என்று எழுதியிருந்தது. அதைப் படித்த இளவரசன், "நான் இன்னும் இங்குத் தங்கி இருந்தால், பெரும் முட்டாளாகக் கருதப்படுவேன். நான் என் ஒரு முட்டாள் மண்டையோடு இங்கு வந்தேன். இப்போது பெட்டியிலுள்ளதோடு சேர்த்து இரண்டு முட்டாள் மண்டைகளோடு செல்லுகின்றேன். இன்பவல்லி

நான் விடை பெற்றுக்கொள்கிறேன். வருத்தத்தைத் தாங்கிக் கொண்டு, கொடுத்த வாக்கை நிறைவேற்றுகிறேன்" என்று போர்ஷியாவிடம் கூறிவிட்டுத் துணைவர்களுடன் வெளியேறினன்.

"விளக்கொளியைக் கண்டு, அதில் வீழ்ந்து சாகின்ற விட்டில்பூச்சியைப்போன்று பேழைத்தேர்வில் ஆரகன் இளவரசரின் ஆணவம் அழிந்தது. முட்டாள்களெல்லாம் அவர்களின் சிறுமையால் பெரும் நிலையை யன்றோ இழக்கின்றார்கள்!" என்று நெரிஸ்ஸாவிடம் கூறினள் போர்ஷியா.

"மரணமும், மணமும் அவரவர் விதிப்படித்தான் என்னும் பழமொழி பொய்யாகுமா!" என்று விடையளித்தாள் நெரிஸ்ஸா.

"சரி, திரையை இழுத்துவிடு. நாம் போவோம்" என்றாள் போர்ஷியா. நெரிஸ்ஸாவும் திரையை இழுத்தாள். அப்போது ஒரு வேலையாள் உள்ளே நுழைந்து, "நம் வாயலில் ஒரு வெனிஸ் இளைஞன், அவனுடைய சீமானின் வருகையை அறிவிக்க முன்னோடி வந்துள்ளான். அவன் உமக்காக விலையுயர்ந்த பரிசுகளும், வாழ்த்துச் செய்திகளும் கொண்டுவந்துள்ளான். நான் இதுவரை காதலுக்காக இத்தகையதொரு தூதனைக் கண்டதேயில்லை. அமைதியான ஏப்ரல் மாதத்திலிருந்து இன்பமயமான கோடையின் வருகை அறிவதுபோன்று, இந்தத் தூதனின் வருகையிலிருந்தே அவனின் சீமானைப் பற்றி நாம் ஊகிக்கலாம்" என்று தாழ்ந்து கூறிக்கொண்டிருந்தான்.

அச்சமயம் போர்ஷியா குறுக்கிட்டு, "போதும் நிறுத்து. நீ அவனை உன் உறவு என்றுகூட சொல்லிவிடு

வாயோ, என்று அஞ்சுகின்றேன் அவனைப் புகழ்வதில் அவசியமற்ற அறிவைச் செலுத்துகின்றாய்" என்று வேலை யாளிடம் கூறிவிட்டு, "நெரிஸ்ஸா, சீக்கிரம் வா. காமனின் தூதன் போன்று வந்துள்ளவனை நான் பார்க்க வேண்டும். வா, போவோம்" என்று தோழி நெரிஸ்ஸாவிடம் சொல் லிக் கொண்டே நடந்தாள.

"வருகின்ற காதலன் பஸ்ஸானியோவாக இருக்க ஆண்டவன் அருளட்டும்" என்று நெரிஸ்ஸா கூறிக் கொண்டே போர்ஷியாவைத் தொடர்ந்து நடந்தாள். அவர் களைத் தொடர்ந்து துணையாட்கள் அனைவரும் வெளியேறி னார்கள்.

# 11. யூதனும் கிருத்துவனும்

"ரியால்ட்டோ சந்தையிலிருந்து ஏதேனும் செய்தி கிடைத்துள்ளதா, சலாரினோ?"

"ஆம். அண்டோனியோவின், விலையுயர்ந்த பொருள்கள் நிறைந்த கப்பல் ஆங்கில கால்வாயில் மோதி உடைந்து விட்டதாகக் கூறப்படுகிற வதந்தி இன்னும் ரியால்ட்டோவில் பரவிக் கொண்டுதானிருக்கிறது. 'குட்வின்ஸ்' என்னுமிடம் பயங்கர நாசத்தை விளைவிக்கக்கூடிய மணற்பாங்கான இடமாம். அங்கு அநேக பெருங்கப்பல்கள் மூழ்கிப் புதைந்திருப்பதாகக் கூறப்படுகின்றன சோலானியோ, இந்தச் செய்தி உண்மையாக இருக்குமா?"

"என்னால் இந்தச் செய்தியை நம்ப முடியவில்லை. ஒரு வாயாடி கிழவி இஞ்சியை மென்று தின்றாளென்றும், செத்த அவளின் மூன்றும் கணவனுக்காக மிக அழுதாள் என்றும் கூறப்பட்டால் அதை நாம் நம்ப முடியுமா? கிழவிக்குப் பற்கள் இருக்குமா? வயதேறி முதுமை அடைந்த காலத்திலே மூன்றும் கணவன் செத்ததற்காக ஒரு கிழவி அழுததாகக் கூறப்படும் செய்தியை நம்பமுடியுமா சலாரினோ, சுற்றி வளைக்காமல் நேராகச் சொல்லுகின்றேன்: உண்மையில் அண்டோனியோ, பெருங்குண அண்டோனியோ—ஒப்புயர்வற்ற பெருங்குண அண்டோனியோ!—"

"சோலானியோ, ஏன் சுற்றிவளைத்துப் பேசுகின்றாய். சீக்கிரம் முடி..."

"ஆ! என்ன சொல்லுகின்றாய்? முடிவா தெரியவேண்டும்! அவர் ஒரு கப்பலை இழந்தார்."

"அது அவருடைய நன்மை இழப்பின் முடிவாகும்"

"ஆமென்" என்று உடனே சொல்லிவிடுகின்றேன். இல்லாவிடில் சலாரினே, நம்முடைய பிரார்த்தனை முடிவிற்குள் எங்குச் சாத்தான் குறுக்கிட்டு விடுகின்றானே என்று பயப்படுவது போன்று இங்கு 'யூதனின்' உருவத்தில், இதோ, வரும் சாத்தான் தலையீட்டிற்காகப் பயப்படுகின்றேன்" என்றான் சோலானியோ.

அண்டோனியோவின் கப்பல்கள் கடலில் மூழ்கி சேதமடைந்த செய்தி மிக வேகமாகப் பரவிக்கொண்டிருப்பதை அறிந்த சலாரினேவும், சோலானியோவும் வெனிஸ் நகரத் தெரு ஒன்றில் அண்டோனியோவின் எதிர்பாராத பொருள் இழப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது ஷைலக் வந்தான். அவன் வருகையைத் தான், சோலானியோ யூதனின் உருவில் வரும் சாத்தான் என்றான்.

ஷைலக் நெருங்கியவுடன் சோலானியோ, "நீ எப்படி இருக்கிறீர். வணிகர்களிடையே ஏதேனும் செய்தி உண்டா?" என வினவினான்.

"நீ அறிந்துள்ளது போன்று, என் மகள் ஓடி விட்டதிலிருந்து எதுவும் நன்மையாகவே இல்லை; எங்கும் தீமைதான்" என்று கூறினான், மன வருத்தத்துடன் ஷைலக்.

"ஆமாம். உண்மைதான். அவள் பறந்தோடுவதற்குத் தக்க இறக்கைகளைத் தயாரித்துக் கொடுத்த தையற்காரனை நான் நன்கு அறிவேன்" என்றான், கேலியாக சலாரினே.

"ஷைலக், என்னைப் பொறுத்தவரையில் சொல்லுகின்றேன்: பறவைக்கு இறகுகள் முளைத்து விட்டன. அதன்

பின், தாய் பறவையை விட்டுப் பிரிந்து செல்வதுதானே இயற்கை" என, "ஜெஸ்ஸிக்கா தானே கணவனைத் தேர்ந் தெடுக்கும் வயதடைந்து விட்டாள்" என்னும் பொருள் தொக்கக் கேலியாகக் கூறினன் சோலானியோ.

"அவள் அதற்குத் தக்க தண்டனை அடைவாள்" என் முன் ஷைலக் கோபமுடன்.

"ஆம். அவளுடைய குற்றத்தை விசாரிக்க உன் போன்ற சாத்தான் நீதிபதியாக அமர்ந்தால் தண்டனைதான் அடைவாள்" என்முன் சலாரினே.

"என் இரத்தமும் சதையுமே என்னைக் கலங்கச் செய் வதா!" என்முன் வெறுப்பும் வியப்பும் கொண்ட ஷைலக்.

"என்ன! அழுகிப்போன மாமிசப் பிண்டமே, இந்த வயதிலா உன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை" என்று ஷைலக்கின் வார்த்தைகளின் பொருளைச் சரியாகப் புரிந்துகொள்ளாதவன் போன்று நடித்துக் கோபமாகக் கேட்டான் சோலானியோ.

"இல்லை, இல்லை. நான் என் இரத்தமும் சதையும் என்று குறிப்பிட்டது என் மகளை" என்முன் விளக்கமு டன், ஷைலக்.

"ஒரு கறுமையான பொருளுக்கும், தங்கத்திற்கும் வித்தியாசம் உள்ளதுபோன்று, உன் சதைக்கும் அவள் சதைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. ரேனிஷ் திராட்சை இரசத்திற்கும், சிவந்த திராட்சை இரசத்திற் கும் வித்தியாசம் உள்ளதுபோன்று உன் மகள் இரத்தத் திற்கும் உன் இரத்தத்திற்கும் நிரம்ப வித்தியாசம்

உண்டு" என்று ஷைலக்கிற்கும் அவன் மகளுக்கும் குணத்தில் நிரம்ப வித்தியாசம் உண்டு என்று கூறிவிட்டு, "இப்போது அண்டோனியோ கடலில் ஏதேனும் நஷ்டமடைந்தாரா என்பதைக் கூறு" என வினவினான் சலாரினோ.

"இதோ எனக்கு மற்றொரு கேடு: அவன் ஓர் ஊதாரி. வீண் செலவுக்காரன். அவன் இப்போதெல்லாம் ரியால்டோவுக்கு அடிக்கடி வருவதில்லை. கடனைத் திருப்பித்தர வகையற்றுப் போகிற அந்தப் பிச்சைக்காரன் அப்போதெல்லாம் தற்பெருமையுடன் சந்தைக்கு வருவான். இப்போது அவன் எங்கே இருக்கிறான் பார்! அவனை எனக்கு எழுதித் தந்த வாக்குறுதிச் சீட்டின்மீது கவனம் வைக்கச் சொல். என்னை அதிக வட்டி வாங்குகின்றவன் என்று அடிக்கடி பழித்துப் பேசினான். எனக்கு எதிராக கிருத்துவர்க்குள்ள அன்பின் மிகுதியைக் காட்டிக் கொள்ள வட்டியின்றி அனைவர்க்கும் கடன் கொடுத்தான். இன்று அவன் உள்ள நிலை என்ன! எங்கும் நஷ்டம்! என் சீட்டின் மீது அவனைச் சதா கவனமுடனிருக்கச் சொல்!" என்று ஷைலக், அண்டோனியோவைப் பற்றிச் சலாரினோவிடம் கடுகடுப்புடன் பேசினான்.

"ஏன் இவ்வளவு கடுகடுப்பு! அண்டோனியோ கடனைத் தவணைக்குள் திருப்பித்தரத் தவறின், நீ என்ன அவருடைய சதையை எடுத்துக்கொள்ளவா போகிறாய்? அந்தச் சதையை நீ என்ன செய்யப் போகிறாய்!" என வினவினான் சலாரினோ.

"என்ன செய்யப் போகிறேனா? அந்தச் சதையை மீன் பிடிக்க இரையாக்குகின்றேன். சலாரினோ, அது எதற்கும் பயன்படாவிடினும், நான் பழிவாங்க எண்ணிய

தற்கேனும் பயன்படும். அவன் என்னைப் பலர் முன்னிலே யில் இகழ்ந்தான்; நான் அரை லட்ச மில்லியன் நாணயங் களைச் சம்பாதிக்கவிடாது தடுத்தான்; என்னுடைய நஷ்டத்தில் மகிழ்ந்தான்; என்னுடைய இலாபத்தைக் கண்டு இகழ்ந்தான்; என் இனத்தவரை நிந்தித்தான்; என்னுடைய வட்டி வாணிபத் துறையிலே குறுக்கிட்டான்; என் நண்பர்களை எனக்கு எதிரிகளாக்கினான்; என் எதிரி களைத் தூண்டிவிட்டான்! இவை யாவும் அவன் செய்ய காரணமென்ன? நான் ஒரு யூதன்! நான் யூதன் என்ற ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் இவ்வளவு கொடுமை களை அந்தப் பிச்சைக்கார, இறுமாப்பு பிடித்த அண்டோனியோ எனக்கிழைத்தான்! யூதனுக்குக் கண்க ளில்லையா? யூதனுக்குக் கைகளில்லையா? அங்க உறுப்புக் கள் இல்லையா? நுண்ணுணர்ச்சி இல்லையா? அன்பு இல்லையா? காதலுணர்வில்லையா? ஒரு கிருத்துவன் உண்ணுகின்ற உணவைத்தானே ஒரு யூதனும் உண்ணு கின்றான்? அவன் எந்த ஆயுதங்களினால் காயப்பட்டு எவ் வழியிலே குணமாக்கப் படுகின்றானோ, அதே ஆயுதங்களி னால் தானே ஒரு யூதனும் காயமடைந்து அவ்வழியிலேயே தானே குணமாக்கப்படுகின்றான்? எந்தக் கோடைக்காலம் வெப்பத்தையும் எந்தக் குளிர்க்காலம் குளிரையும் அவனுக் களிக்கின்றதோ, அதே கோடைக்காலமும் குளிர்காலமும் தானே எனக்கும் வெப்பத்தையும், குளிர்ச்சியையும் அளிக்கின்றது? நீங்கள் எங்களைக் குத்தினால், எங்கள் உடலிலிருந்து இரத்தம் ஒழுகாதோ? நீங்கள் எங்களைத் தொட்டுக் கூச்சமுண்டாக்கினால், நாங்கள் சிரிக்கமாட் டோமா? நீங்கள் எங்கட்கு விஷமூட்டினால் நாங்கள் இறக்கமாட்டோமா? நீங்கள் எங்கட்குக் கொடுமை புரிந் தால், நாங்கள் அதற்காகப் பழிவாங்கமாட்டோமா?

நாங்கள் மற்றவற்றில் உங்களைப் போன்றிருக்கும் போது, பழிவாங்கும் நிலையிலும் உங்களைப்போன்று ஏன் இருக்கக் கூடாது? ஒரு யூதன் ஒரு கிருத்துவனுக்குத் தீமை செய்தால், அதற்கு அவனுக்குக் கிடைக்கும் கைமாறு என்ன? பழிவாங்குவதுதானே! அதே போன்று ஒரு கிருத்துவன் ஒரு யூதனுக்குத் தீங்கிழைத்தால், அந்த யூதனும் கிருத்துவனைப் பழிவாங்குவதிலே ஏன் தயங்கவேண்டும்? அத்தகைய கொடுமையை நீங்களே எனக்குக் கற்றுக் கொடுத்துள்ளீர். நான் வாக்குறுதிச் சீட்டிலுள்ளபடி நிறைவேற்றுவேன்; என் நடத்தை மற்றவர்க்கு மிகவும் கொடூரமாகவும் காணப்படும்." என்று தன் எதிரிலிருந்த கிருத்துவர்களை நோக்கி மிகவும் கோபாவேசமாகக் கூறினான் ஷைலக்.

அச்சமயம் ஒரு பணியாள் அங்கு வந்து இரண்டு கிருத்துவர்களை நோக்கி. "ஐயன்மீர், என் எஜமானர் அண்டோனியோ உங்களை அவர் வீட்டில் பேச அழைக்கின்றார்" என்று பணிவுடன் கூறினான்.

"நாங்கள் அவரைத் தேடிக்கொண்டு அங்குமிங்கும் அலைகின்றோம்." என்றான் சலாரினோ அந்த வேலையாளிடம். அச்சமயம் ஷைலக்கின் நண்பனான டியுபால் என்ற மற்றொரு யூதன் அவ்விடம் வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் சோலானியோ, சலாரினோவிடம், "இதோ மற்றொரு யூதன் வந்து கொண்டிருக்கிறான், இவனும், ஷைலக்கும் பணம் சேர்ப்பதிலே நிகரற்ற பேராசைக்காரர்களே. இந்த இரண்டு யூதர்களையும் மிஞ்சக் கூடிய பேராசைமிக்க யூதன் வேறு யாருமில்லை. அப்படி இவர்களையும் மிஞ்சக் கூடிய பேராசைக்காரனிருந்தால், அவன் யூதன் உருவிலிருக்கும் சாத்தானாகத்

தானிருக்க முடியும்." என்று கூறிக்கொண்டே நடக்க ஆரம்பித்தான். அவனைத் தொடர்ந்து சலாரினோவும், வேலைக்காரனும் நடந்தார்கள்.

டியுபாலைப் பார்த்த ஷைலக், "டியுபால், ஜேனேவாவி லிருந்து ஏதேனும் செய்தி கிடைத்ததா? அங்கு என் மகளைப் பார்த்தாயா?" என ஆவலுடன் கேட்டான்.

"அவள் எங்கெங்கு இருப்பதாக அறிகிறேனோ அங் கங்கே, நான் எப்போதும் உடனே செல்கின்றேன். ஆனால் அங்கெல்லாம், அவளை நான் பார்க்கமுடிவதில்லை" என்றான் வருத்தத்துடன் டியுபால்.

"அதைக் கேட்டு ஆத்திரமடைந்த ஷைலக், "ஏன் எங் கெங்குக் கேட்கின்றாயோ அங்கங்கெல்லாம் செல்ல வேண்டும்! ஜர்மெனியிலுள்ள பிரான்க்போர்ட்டில் இரண்டா யிரம் பொன் நாணயங்களுக்கு வாங்கிய வைரக்கல்லை என் மகளால் இழந்தேன்! பலகாலமாகச் சபிக்கப்பட்டு வந்த நம்முடைய யூத இனம் இப்போதுதான் அதிகமாக வேதனைக்குள்ளாகியுள்ளது. இதற்குமுன் நான் அந்தச் சாபத்தை உணர்ந்ததேயில்லை. அதனால், நான் இரண் டாயிரம் நாணயங்களையும், விலையுயர்ந்த நகைகளையும் இழந்துள்ளேன். என் மகள் என் காலடியில் பிணமாக வீழ்ந்தாலும் நான் பொருட்படுத்த மாட்டேன். ஆனால் அவளுடைய காதுகளிலுள்ள நகைகள் மட்டும் தொலையா திருக்கவேண்டும்! அவள் பிணப்பெட்டியிலே தூக்கிச் செல்லப் படுவதைப்பற்றிக்கூட நான் கவலைகொள்ள மாட்டேன்; ஆனால், அந்தப் பெட்டியில் என் பொன் நாண யங்கள் மட்டும் காணப்படவேண்டும். என் பெண்ணைவிட நான் மதிக்கும் பொன் நாணயங்களைப் பற்றிக்கூட இது

வரை ஒரு விபரமும் தெரியவில்லையே. என் மகளைத் தேடுவதற்காக இதுவரை செலவழித்த பணம் எவ்வளவு? ஏன் நஷ்டத்தின் மேல் நஷ்டமடைடவேண்டும்? திருடன் பணத்தோடு சென்றான் என்றால், அந்தத் திருடனைத் தேடுவதற்குமா மேலும் பணம் செலவழிக்க வேண்டும். எனக்கு இதிலே திருப்தியில்லை; துர்அதிர்ஷ்டத்தால் நான் பெரும் வேதனை அடைகிறேன். என் பெருமூச்சினாலும், கண்ணீராலும் பயனொன்றுமில்லை" என்று கூறி வருந்தினான்.

"ஆம். உனக்கு மாத்திரமன்று, மற்றவர்களும் துர்அதிர்ஷ்டத்தால் வேதனை அடைகின்றார்கள். நான் ஜெனோவாவில் கேட்டபடி, அண்டோனியோ......" என்று டியுபால் அண்டோனியோவைப் பற்றிப் பேச ஆரம்பிக்கும் முன்பே, ஷைலக், "என்ன, என்ன? துர்அதிர்ஷ்டமா? துர்அதிர்ஷ்டமா?" என்று அக்கரையுடன் வினவினான்.

"ட்ரிப்போலிஸிலிருந்து வந்துகொண்டிருந்த ஒரு வாணிபக் கப்பல் மூழ்கியதாம்" என்றான் டியுபால்.

இதைக் கேட்டவுடன் ஷைலக், மகிழ்ச்சியால், "நான் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். யுபால், நீர் கூறுவது உண்மையா?" என வினவினான்.

"அந்தக் கப்பலிலிருந்து தப்பிய சில மாலுமிகளுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன்" என்றான் டியுபால்.

"ஆ, அப்படியா! டியுபால், நான் உனக்கு மிகவும் நன்றி செலுத்துகின்றேன். நற்செய்தி! நற்செய்தி! நீ கொண்டு வந்த செய்தி மிகவும் நற்செய்தி." என்று ஆனந்தத்தால் ஷைலக் பெருஞ் சிரிப்புச் சிரித்தான்.

பின்பு டியுபாலை நோக்கி, "அந்தக் கப்பல் எங்கு உடைந்து மூழ்கியது? ஜெனோவாவிலா?" என வினவினான்.

"ஆம். ஜெனோவாவில்தான். ஷைலக். அதே ஜெனோவாவில் தான் உன் மகள் ஓர் இரவில் எண்பது பொன்நாணயங்களைப் பொறுப்பின்றி செலவுசெய்ததாகவும் கேள்விபட்டேன்" என்றான் டியுபால்.

தன் மகள் வீண் செலவு செய்ததைக் கேட்ட ஷைலக் அதிர்ச்சியுடன் "ஓ, டியுபால், என்னைப் பிச்சுவாவினால் குத்துகின்றாயே! நான் என் பொன் நாணயங்களை மீண்டும் பார்க்க முடியாது! எண்பது பொன் நாணயங்கள் ஓர் இரவில்செலவழிக்கப்பட்டதாமா! எண்பது பொன்நாணயங்களா!" என்று ஒடிந்த மனத்தினனாய்க் கேட்டான்.

"பின்பு, அண்டோனியோவுக்குக் கடன் கொடுத்தோரின் நீர்மூழ்கி ஆட்கள் அங்கிருந்து என்னுடன் வெனிஸ் நகர்க்குத் திரும்பினார்கள். இனி அண்டோனியோ கடனைத் திருப்பித்தர முடியாத நாதாரியாகத்தான் மாறவேண்டும். அஃதன்றி, அவனுக்கு வேறு வழி கிடையாது என்றார்கள்" என்றான் டியுபால்.

அண்டோனியாவின் கேடுற்ற நிலையை மேலும் அறிந்த ஷைலக், "நான் மிகவும் மகிழ்கிறேன். நான் அவனைக் கொடுமைபடுத்தி, தொல்லைக்காளாக்குவேன். டியுபால், எனக்கு நீ நற்செய்தி கொண்டுவந்துள்ளாய்" என்று மகிழ்ச்சியுடனும், உறுதியுடனும் கூறினான்.

டியுபால், ஷைலக்கை மகிழ்ச்சியுடனேயே இருக்க விடவில்லை. அடுத்து, "என் உடன் வந்தவர்கள், உன் மகள் ஒரு குரங்குக்காக விலைக்கொடுத்த ஒரு மோதிரத்தைக் காட்டினார்கள்" என்றும் கூறினான்.

"இது மிகவும் வெட்கக் கேடாக இருக்கின்றதே! நீ என்னை உயிரோடு வாட்டுகின்றாய்! டியுபால் அந்தமோதிரம் நான் பருவ வாலிபனாக இருக்கும் போது என் மனைவி லியா அளித்தது. அதை நான் குரங்குகளுக்காகக் கொடுத் திருககக் கூடாதே!" என்று வருத்தத்துடன் மொழிந்தான் ஷைலக்.

"எனினும், அண்டோனியோ நிச்சயமாக சிதைவுண்டு விட்டான்" என்று ஷைலக் மனதை மாற்ற நோக்கால் கூறினான், டியுபால்.

"ஆம். அது உண்மை. முழு உண்மை. டியுபால, எனக் காக, அண்டோனியோவின் தவணைத் தேதிக்குப் பதி னைந்து நாட்களுக்கு முன்னரே, ஓர் அமீனாவை ஏற்பாடு செய்து வை. நான் அவனுடைய இதயத்தை சிதைத்துக் கொல்ல வேண்டும். அவன் வெனிஸை விட்டு ஒழிந்தால நான் என்னுடைய வட்டி ஈட்டும் வாணிபத்திலே எதிரி யின்றி செழிப்பேன். இவ்விடத்தை நீ முதலில் சென்று நான் சொன்னபடி செய்துவிட்டு, நம் கோவிலில் என்னைச சந்தி. சீக்கிரம் போ! நாம் மீண்டும் கோவிலிலே சந்திப் போம்" என்று கூறி டியுபாலை அனுப்பி விட்டு, அவனைத் தொடர்ந்து ஷைலக்கும் நடந்தான்.

# 12. வெற்றியும் வேதனையும்

அண்டோனியோவின் உதவியால் ஷைலக்கிடமிருந்து வேண்டிய பொருளைப் பெற்றுப் பெல்மாண்ட் வந்து சேர்ந்த பஸ்ஸானியோ, தன் தோழன் கிரேஷியானோ வுடன் போர்ஷியாவின் மாளிகையினுள் நுழைந்தான். போர்ஷியா அவனைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்று இருக்க ஆசனமளித்தாள். பஸ்ஸானியோ காதல் பரிட்சை யில் தேர்வடைந்திடும் நோக்கத்தால் வந்திருப்பதை உணர்ந்த போர்ஷியா, அவன் வெற்றி அடைந்து தன்னை மணக்க விரும்பினாள். எனினும், ஒரு வேளை தவறான பெட்டியைப் பஸ்ஸானியோ தேர்ந்தெடுத்து விட்டால் அவனை உடனே நீங்க வேண்டி நேரிடுமே என்ற அச்சத் தால், போர்ஷியா, பஸ்ஸானியோவை நோக்கி, “இன்னும் ஓரிரண்டு நாட்கள் பொறுத்து பெட்டித் தேர்வில் இறங்க லாமே! ஒரு வேளை தவறான பெட்டியைத் தேர்ந்தெடுத்து நீர் உம் துணிவில் தோல்வி அடைந்தால், நான் உம் தோழமையை உடனே பிரிய நேரிடுமே என்ற அச்சத் தால்தான் உம்மை இங்குச் சில நாட்கள் தங்கி இருக்க வேண்டுகின்றேன். நான் உம்மை இழக்கக் கூடாது என்று என் உள்ளத்தில் ஏதோ ஒன்று எனக்குக் கூறுகின்றது. ஆனால், அது காதலல்ல. எனினும் நான் உம்மை இழக்க விரும்பவில்லை. நான் இப்படிப் பேசும் முறையை நீர் வெறுக்கமாட்டீர் என்று நம்புகின்றேன். நான் எதையும் எண்ணுகின்றபடி, வெளியே சொல்ல முடியாதபடி, எங்கள் இனத்திற்குரிய ‘அடக்கம்’ என்னைத் தடுப்பதால், என்னை நீர் நன்றாக அறிந்து கொள்ள வேண்டி, நீர் காதல்

பரிட்சையில் இறங்குவதற்கு முன் ஓரிரண்டு மாதங்கள் என்னோடு தங்கியிருக்க வேண்டுகின்றேன். நீர் சரியான பெட்டியைத் தேர்ந்தெடுக்க நான் கற்றுத் தர முடியும். ஆனால், நான் அப்படிச் செய்ய முடியாதபடி என் தந்தையின் ஆணை குறுக்கே நிற்கின்றது. என் தந்தையின் ஆணையை மீறி என் உணர்ச்சிகளுக்கு அடிமையாக மாட்டேன். ஏனெனில் என் தந்தையின் ஆணையை நான் மீறி உனக்குப் பெட்டிகளின் விளக்கத்தைக் கூற முற்பட்டும், நீர் தவறான பெட்டியைத் தேர்ந்தெடுப்பின், என்னை இழப்பதோடன்றி, நான் என் தந்தைக்குப் பொய் சத்தியம் செய்தபாவத்திற்காளாக நேரிடும் என்று அஞ்சுகின்றேன். உம்முடைய கண்கள் பொல்லாதவை. அவை என்னை மயக்கி, அறிவிழக்கச் செய்து, உமக்கு அடிமையாக்கி யுள்ளன. நான் இப்போது உமது கைகளிலே சிக்கியவளா யுள்ளேன். நானே உம்முடையவளாகி யுளளேனுதலால், என்னுடையதனைத்தும் உம்முடையதாகி விட்டன. நாம் வாழ்கின்ற இக்கேடுற்ற காலம், மனிதர்களுக்கும், அவர்கட்கு உரிமையுள்ள சொத்துக்களுக்கும் பெரிய தடைகளை ஏற்படுத்துகின்றன, ஆகையால் நானும், என்னைச் சேர்ந்த யாவும் உம்முடையதாயினும், சட்டபடி உம்முடையதாக வில்லை. காலம் என்னை உன்னுடையதாக்கிடா விடின், காலத்தைத்தான் நீ பழிக்கவேண்டுமேயன்றி என்னையோ, என் தூய்மையான காதலையோ வல்ல! நான் நீண்ட நேரமாகப் பேசிக் கொண்டிருக்கின்றேன். அப்படி நான் பேசுவதுகூட, காலத்தை வீணே நீட்டித்து, உம்முடைய தேர்வை நிறுத்தி வைக்கும் நோக்கத்தாலன்றி, வேறெதற்காகவுமன்று" என்று சோகப் பெருமூச்சுடன் கூறினாள்.

போர்ஷியாவின் வார்த்தைக்களை கேட்ட பஸ்ஸானியோ "நான் தேர்வில் அவசியம் கலந்து கொள்ளவேண்டும். என்னுடைய தற்சமய சூழ்நிலை; என்னை வேதனைவிலங்கிலே மாட்டியுள்ளது" என்றான் மனக்கலக்கத்துடன்.

'விலங்கு' என்று பஸ்ஸானியோ கூறியதைத் சிலேடையில் புரிந்து கொண்ட போர்ஷியா அவனை நோக்கி, "விலங்கா! பஸ்ஸானியோ, உன் காதலோடு சம்பந்தப் பட்ட அத்தகைய பெருந் துரோகம்தான் என்ன என் பதை எனக்குத் தெரிய சொல்" என்று கேட்டாள்.

"அழகிய போர்ஷியாவை நான் அடைவேனோ அடையமாட்டேனோ என்று சந்தேகிக்கினற பெருந் துரோகம்தான் என் காதலோடுசம்பந்தப்பட்ட துரோகம். எப்படிப் பனிக் கட்டியும், நெருப்பும் இணையாதோ அப் படியே துரோகமும் என் காதலும் இணையாது" என்றான் பஸ்ஸானியோ.

"விலங்கிலே மாட்டப்பட்ட மனிதர்கள்—குற்றவாளி கள்—தொந்தரவால் பொய்யையும் பேசுவது போன் றல்லவோ, நீர் இப்போது பேசுகின்றீர்" என்று மேலும் சிலேடையாகவே கூறினாள், போர்ஷியா.

"என் வாழ்வுக்கு நீ உறுதியளிப்பதாயின், நான் உண்மையைக் கூறுகின்றேன்" என்றான், பஸ்ஸானியோ வும் சிலேடையாக.

"நன்று. நான் அப்படியே உறுதியளிக்கிறேன். நீர் உண்மையைக் கூறி, வாழ்!" என்றாள், போர்ஷியா.

"உண்மையைக் கூறி, என்னைக் காதலி என்று நீ கூறி யிருந்தால் நான் உண்மையைக் கூறுவதற்கு ஏதுவாயிருந் திருக்கும். யார் என்னைத் துன்புறுத்துகின்றாரோ, அவரே அத்

துன்பத்திலிருந்து நான் தப்பித்து வாழக் கற்றுக் கொடுப் பின், அச்செயல் எனக்கு வேதனை தரும் இன்பமன்றே! ஆதலால், நான் பெட்டியைத் தேர்ந்தெடுக்க விடு" என்று கூறினன்.

"சரி. வா, போவோம்" என்று கூறி, போர்ஷியா பஸ் ஸானியோவைப் பெட்டிகளிருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்று, அப்பெட்டிகளைச் சுட்டி, "இப்பெட்டிகளிலொன் றிலே நான் இருக்கின்றேன். நீ என் மீது கொண்டிருக்கும் காதல் உண்மையாயின், இவை ஒன்றிலே நானிருக்கும் பெட்டியைத் தேர்ந்தெடுப்பாய்" என்று கூறிவிட்டு, தன் தோழியையும் மற்றவர்களையும் நோக்கி, "நெரிஸ்ஸா, நீயும் மற்றவர்களுடன் தனியாக நில்லு" என்று சொல்லி விட்டு, வாத்தியக்காரர்களைப் பார்த்து, "பஸ்ஸானியோ பெட்டித் தேர்வில் ஈடுபடும்போது, இசை ஒலிக்க கப் விடுங்கள். சாகும் அன்னப்பறவை பாடிக்கொண்டே சா பயன்படும் இசை, இங்கு பஸ்ஸானியோ தேர்வில் தோல்வி அடையும்போது பயன்படும். அதாவது தேர்விலே தோற்றால், என் கண்ணீர் ஓடையில் பஸ்ஸா னியோ என்னும் அன்னம் பாடிக்கொண்டே இறக்கும். அவர் வெற்றி பெற்றால் எத்தகைய இசையை நீங்கள் எழுப்பவேண்டும் தெரியுமா? விசுவாசமுள்ள மக்கள், புதி தாக மணிமுடி சூடிய மன்னன் முன் பணியும்போது, ஏற்படுகின்ற விண் முட்டும் இசை முழக்கம் இங்கும் ஏற்படவேண்டும். இன்பக் கனவுகளுடன் தூங்குகின்ற மணமகனைக் காலை மலர்ந்து விட்டதைத் தெரிவித்து, திரு மணத்திற்குஅழைக்கும்முறையில்விடியற்காலையில் முழங்கு இசை இப்போது தேவை. கடல் அரக்கனுக்குப் பலியாக அளிக்கப்பட்ட ட்ராய் மன்னன் மகளை, இளங்கன்னியை

மீட்கச் சென்ற **எர்குலிஸ்** பெரு வீரன்போன்று பஸ்ஸானியோ, பெட்டிகளினருகே செல்ல விருக்கிறார். எர்குலிஸ் காதலுக்காகக் கடலரக்கனைக் கொல்லச் செல்லவில்லை. ஆனல், இங்குப் பஸ்ஸானியோ, காதலினல், எனக்காகவே தேர்வில் இறங்குகின்றார். கடலரக்கனுக்கு ட்ராய் மன்னன் மகளாக இளங்கன்னி பலியாக நின்றதுபோன்று, இன்று, இங்கு, என் தந்தையினல் ஏற்பட்டுள்ள அதிர்ஷ்ட கட்டுப் பாட்டுக்குப் பலியாக நின்றுள்ளேன். அந்தக் கன்னியின் நிலையைக் கண்டு கலங்கி நின்று கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த ட்ராய் பெண்கள் போன்று இங்கு என் பரிதாப நிலையைக் கண்டு நெரிஸ்ஸாவும் தோழிகளும் வருத்தமுடன் நிற்கின்றார்கள்" என்று கூறிவிட்டு, பஸ்ஸானியோவை நோக்கி, "எர்குலிஸ் வீரனே போ! உன்னுடைய வெற்றி மகிழ்ச்சியிலே என் வாழ்வின் மகிழ்ச்சி அடங்கியுள்ளது. நீ வென்றால் நான் வாழ்வேன். நீ கலந்து கொண்டு நடத்துகின்ற இந்தத் தேர்வுச் சண்டையிலே உன்னைவிட பார்வையாளளான நான்தான் மிகவும் கலக்கத்துடன் முடிவை எதிர் நோக்கியுள்ளேன்" என்றாள்.

பஸ்ஸானியோ பீடு நடையுடன் பெட்டிகளின் முன் சென்று நின்றான். பெட்டிகளைப் பற்றித் தனக்குத்தானே வாதாடிக்கொண்டிருந்தான். அப்போது இசையோடு, பாட்டெழுந்தது. அந்தப்பாடலில் "காதல் கண்களிலிருந்து தோன்றக் கூடாது. அது உள்ளத்திலிருந்துதான் உதிக்கவேண்டும். கண்களிலிருந்து தோன்றும் காதல், கண்களிலேயே மறைந்துவிடும். வெளித் தோற்றத்தால் காதலியைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. அறிவைப் பயன்படுத்த வேண்டும்" என்ற பொருள் பதிந்திருந்தது.

பஸ்ஸானியோ தனக்குத்தானே, பேசிக்கொண்டான். அப்பேச்சு உச்ச நிலையை அடைந்தபோது வார்த்தைகள் வெளி வரலாயின, "ஆகையால் பொருள்களின் வெளித் தோற்றம், அப் பொருள்களின் உண்மை நிலையைக் கூறுது! உலகம் எப்போதும் வெளித் தோற்றத்தில் ஏமாந்து போகிறது. நீதி மன்றத்திலே, பொய்யும், குறையும் நிறைந்த வாதமேயாயினும், அது ஒரு திறமை மிக்க நியாயவாதியின் அலங்கார, நுணுக்க வார்த்தைகளினுலானதாயின், தோல்வி காணுது வெற்றி அடைவது நிச்சயமன்ருே! மதப் பிரச்சாரத்திலே, நரகம் சென்று இன்னல் அனுபவிக்கக்கூடிய அளவிற்குப் பெரும் பாவம் செய்தவனையும், ஒரு மதக்குரு வேதப் புத்தகத்திலிருந்து புது விளக்கங்களுடன் மேற்கோள்கள் காட்டி, தப்பித்து விடுவதன்றி, அவன் செய்த தவறையும் நேர்மையான தொன்ருக்கி விடுகின்ருரன்ருே! மறுக்க முடியாத தவறு கூட வெளித்தோற்றத்தால், அப்படியின்றி, நேர்மையானது போன்று காட்சி அளிக்கிறதே! இவ்வுலகில் தீரமற்ற அநேக கோழைகள் பெரு வீரர்கள் எர்குலிஸ், மார்ஸ் போன்று தாடிகளை வைத்துக்கொண்டு, மணலான படிக்கட்டுகளைப் போன்று பொய்யான வீரர்களாகக் கட்சியளிக்கவில்லையா? ஏன், பெண்களின் அழகை எடுத்துக் கொண்டால் போதுமே: கடைச்சரக்கின் மேற்பூச்சுகளினுல் அழகிகளாகத் தோன்றுவோர், இயற்கை அழகிகளையும் மிஞ்சவில்லையா? அத்தகைய மேற்பூச்சுக்கார அழகிகள் இயற்கை அழகிகளைவிட கேடொழுக்கத்தில் மிஞ்சியவர்கள் என்ற உண்மை வெளித்தோற்றத்தால் மறைந்திருக்கிறதன்ருே! துர் நடத்தைக்காரி ஒருத்தியின் தலையை அலங்கரிப்பது சுருள் சுருளான, வழ வழப்பான, பொன்னிற போலிக் கூந்தலன்ருே! அப்போலிக் கூந்தல்

காற்றில் அசைந்தாடி, அதைத் தரித்துள்ளவள் தரத்தை வெளிப்படுத்துவது போன்று, அக்கூந்தலின் தரத்தையு மன்றோவெளிப்படுத்துகிறது! போலிக்கூந்தல் செத்த ஒருத்தியின் கூந்தலன்றோ! காமாந்தகாரியின் தலையை அலங்கரிக்க உதவுகின்ற போலிக் கூந்தல், கல்லறையிலே பிணமாகக் கிடக்கின்ற ஒருத்தியின் தலையிலே வளர்ந்ததன்றோ! போலிக் கரை பூமியின் கீழ் உள்ள கடலை மறைப்பது போன்றும், நீக்ரோ பெண்களின் கோரரூபத்தை அவர்கள் அணியும் பூ வேலைப்பாடு நிறை உடைகள் மறைப் போன்றுமன்றோ, வெளிஅலங்காரம்! தந்திரம் நிறைந்த இந்த உலகில், போலி, உண்மை அறிவாளிகளையும் மயக்கி ஏமாற்றி விடுகின்றது. வெளிப்பகட்டான பொன், பேராசையால், தொட்டதெல்லாம் பொன்னாகும் வரம் பெற்ற மைடாஸ் உணவுக்கும் வேதனைப்படச் செய்ததை நான் நன்கு அறிவேன், அதனால் நான் பொன்னோடு என்ன செய்ய முடியும்? அடுத்துள்ள வெள்ளியோ உலகிலுள்ள மனிதருள் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கைக்கு மாறி மாறிச் செல்லும் பொதுவான அடிமை! ஆனால் இந்த எளிய ஈயம் எதையும் உறுதி அளிப்பதைவிட அதிக அச்சமூட்டுகின்றது. இதனுடையஎளிய விளக்கம், சாதுரிய பக்கட்டைவிட என் உள்ளத்தில், வேரூன்றியிருக்கிறது. நான் இதையே தேர்ந்தெடுக்கின்றேன். இதன் முடிவு இன்பமாக இருக்கட்டும்!"

பஸ்ஸானியோ சுய வாதங்களின் முடிவில் தன் படம் உள்ள, அச்சமூட்டும் ஈயப் பெட்டியைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானத்தை அறிந்த போர்ஷியா தனியே தனக்குத்தானே," என்னுள் இதுவரை குடிக் கொண்டிருந்த சந்தேக எண்ணங்களும், பெருந் தளர்ச்சி

யும், நடுநடுங்கும் அச்சமும், பொறுமையும் காற்றிலே விரைவில் மறைகின்றன. என் உள்ளத்தில் இப்போது தெளிவேற்படுவதால் காதலெழுச்சியின் வேகம் வளர்கின்றது. ஏ, காதலே, உன் வேகம் அடங்கட்டும்; எல்லை மீறும் உன் ஆனந்தம், எல்லைக்குள் அடங்கட்டும்; உன்னால் இன்பம் என்மீது மழை போன்று பெய்கின்றது; இந்தப் பேரின்பம் வரையரைக் குட்படட்டும்; நீ என்மீது அள்ளித் தெளிக்கின்ற இன்ப மழையை என்னால் மௌனமுடன் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால், அதைக் குறைத்துக்கொள்; இன்றேல், அந்தப் பேரின்பம் எனக்குத் தெவிட்டிவிடு மென்று அஞ்சுகின்றேன்" என்று பேசிக்கொண்டிருந்தாள்.

அச்சமயம் பஸ்ஸானியோ ஈயப்பெட்டியை, "நான் இதில் என்ன பார்க்கப் போகிறேன்" என்று கூறிக் கொண்டே திறந்தான். அதில் போர்ஷியாவின் உருவப் படம் இருக்கக் கண்டு அதிர்ச்சியுடன் அதிசயித்து, "பேரழகி போர்ஷியாவின் பிரதிபிம்பம்!" என்று அந்தப் படத்தை கையில் எடுத்துப் பார்த்தான். அப்படத்தில் அழகில் உள்ளம் நெகிழ்ந்து "உயிர் உள்ளது போன்ற இச் சித்திரத்தைத் தீட்டியவன் மனிதனுக்குரிய திறனை மிஞ்சியவனே! சித்திரத்துக் கண்கள் சிமிட்டி அசைகின்றனவே! என் கண்களின் கருமணிகள் அசைவதால் சித்திரத்தின் கண்கள் அசைவனபோன்று தோற்றமளிக்கின்றதோ! இச்சித்திரத்திலிருந்து வீசும் மணம், இதிலுள்ள போர்ஷியாவின் பிளவுபட்ட உதடுகளிலிருந்து மூச்சு வெளிவருவது போன்றுள்ளதே! சிற்றீக்களையும், கொசுக்களையும் சிக்கவைக்க கட்டும் கண்கள் நிறை வலையைப் போன்று, மனிதர்களின் உள்ளங்களைச் சிலந்திவலை

சிற்றீக்களை இழுக்கும் வேகத்தைவிட மிக விரைவாகக் கவர்ந்திடு மளவிற்கன்றோ சித்திரக்காரன் பேரழகி போர்ஷியாவின் பொன்னிற கூந்தலைச் சித்தரித்துள்ளான்! இதோ, இவளின் கண்கள் அழகே அழகு! இக்கண்களின் அழகொளியிலே தன் கண்களைக் குருடாக்கிக் கொள்ளாது, எப்படி எழுதினன் இந்தச் சித்திரக்காரன்! இவளின் ஒரு கண்ணை எழுதியபோதே அக்கண்ணின் அழகொளியால் அவனின் இரு கண்கள் குருட ாகியிருக்க வேண்டுமாதலின், படத்திலே மற்றொரு கண்ணைத் தீட்டாது விட்டுவிட்டான் போலும்! இந்தப்படத்தைக் குறை கூறுவது எவ்வளவு நேர்மையற்றதோ, அவ்வளவு நேர்மையற்றதாகும், இந்தப் படம், உயிருள்ள போர்ஷியாவுக்கு நிகரற்றதென்று." கூறுவது என்று படத்தின் அழகையும், உயிருள்ள போர்ஷியாவின் அழகையும் ஒப்பிட்டுப் புகழ்ந்து கொண் டிருந்தபோது பெட்டியிலுள்ள காகிதச் சுருளைக் கண்டு, காகிதச்சுருள் இருக்கின்றதே" "இதோ, இங்கே என் அதிர்ஷ்டத்தை விளக்குகின்ற ஒரு என்று அதைஎடுத்துப் படிக்க ஆரம்பித்தான் பஸ்ஸானியோ.

அதிலே "வெளித் தோற்றத்தைக் கண்டு ஏமாறாது சரியான பெட்டியைத் தேர்ந்தெடுத்த நீ, உண்மைக்கு விளக்கம் கூறியுள்ளாய். இந்த நற்பேறு உனக்கு கிடைத் துள்ளதால், வேறு நற்பேற்றைத் தேடியலையாது மனத் திருப்தியடைந்திடுவாய். நீ இப்போது அடைந்துள்ள நற்பேற்றைப் பேரின்பமாகக் கருதின், பக்கமாகத் திரும்பி, அருகில் நிற்கும் அழகியை, அன்பு முத்தத்தால் அடைந் திடு" என்ற பொருள் பதிந்த ஒரு பாடல் எழுதப்பட் டிருந்தது.

அந்தப் பாடலைப் படித்த பஸ்ஸானியோ, மகிழ்ச்சி யால் உந்தப்பட்டு, "மேன்மைமிக்க வாசகங்கள் நிறைந்த

சுருள்" என்று கூறி அந்தக் காகிதத்தைச் சுருட்டிக் கொண்டே, போர்ஷியா நின்றிருந்த பக்கம் திரும்பி, "பேரழகி, பரிசுபெறும் பந்தயத்தில் போட்டியிடும் இருவரில் ஒருவர் வெற்றிபெறும் போது, பந்தயத்தைப் பார்க்கும் மக்கள் ஆரவாரித்து, கைதட்டி பெருங்கூச்சலெழுப்புவர்கள். அச்சத்தத்தைக் கேட்கும் வெற்றிவீரன் மகிழ்ந்து, 'இம் மக்கள் என் வெற்றிக்காகத்தான் மகிழ்ந்து கூச்சலிடுகின்றார்களோ" என்று பார்வையாளர்களை அவ்வீரன் சந்தேக விழிகளுடன் பார்ப்பான். அதுபோல, நான் வெற்றியடைந்தாலும், என் வெற்றி வெற்றிதானோ என்ற சந்தேக நினைவுடனே உன்னை அணுகி, சுருளில் கூறியுள்ளபடி உனக்கு என் அன்புக் காணிக்கையான முத்தமளித்து, அதை உன்னிடமிருந்து திரும்பிப் பெறப்போகிறேன். நற்பேரழகி, என் வெற்றியை நீ உறுதி படுத்தும்வரை, நான் காண்பவை யாவும் உண்மைதானோ என்ற சந்தேகத்துடன் நிற்கிறேன்" என்றான்.

"அன்புமிக்க பஸ்ஸானியோ, நான் இருக்குமிடத்திலேயேதான் நீர் என்னைப் பார்க்கின்றீர். நான் தனியே நின்றிருந்தாலும், என்னுடைய ஆசையிலே அடக்கம் நிறைந்துள்ளது. உள்ள உணர்ச்சியால் சிறிதளவு தற்சமயம் நான் உயர்ந்திருந்தாலும், அவ்வுயர்வு பல ஆயிரம் மடங்காக உனக்குத் தோன்றுகின்றது. நீர் என்னைப் புகழ்ந்தேத்துவதற்காகவேனும் ஒருவேளை நான் நிறைவிலும் அழகிலும், உயர்விலும், அன்பிலும், உள்ளதைவிட அதிகமாகத் தோன்றலாம்! உண்மையில் நான் ஒரு கல்லாத, பழக்கமில்லாத, அனுபவமற்ற பெண், ஆனாலும், நான் இப்போதும் எதையும் அறிவதற்குத்

தகுதியுடைய முறையிலே வளர்ந்துள்ளேனாதலால், நான் என்னையே உனக்கு ஒப்படைக்கின்றேன். நீர்தான் என் அன்பன், பாதுகாவலன், இதயமன்னன். நானும், என்னைச் சார்ந்த யாவரும், யாவும் இனி உன்னுடையனவையே. இன்றுவரை நான்தான் இந்தப் பெருமாளிகைக்கு உரிமையுடைய சீமாட்டியாகவும், இங்குள்ள பணியாட்களுக்கு அதிகாரியாகவும், என் இதயத்திற்கு இராணியாகவுமிருந்தேன். ஆனால், இப்போது முதல் நானும், பணியாட்களும் இந்த வீட்டுடன் உன்னுடையதானோம் என்று, இதோ என் கைவிரல் மோதிரத்தை உனக்கு அளித்துக் கூறுகின்றேன். இந்த மோதிரத்தை என்றேனும் நீர் தவற விடுவாயாயின், அன்றே நம் காதல் வாழ்வில் சங்கடம் ஏற்படுமென்று நீர் முன்கூட்டி உணர்ந்துகொள்ளலாம்; அத்துடன் நான் உம்மீது குறை கூறுவதற்கும் நிலைமை ஏற்படும்.'' என்று போர்ஷியா தன்னையும் தன்னைச் சார்ந்தனைத்தையும் ஒப்படைப்பது போன்று கைவிரல் மோதிரத்தைப் பஸ்ஸானியோவின் கைவிரலில் அணிவித்தாள்.

போர்ஷியாவின் பேச்சாலும், செயலாலும், வாயடைத்துப்போன பஸ்ஸானியோ, "சீமாட்டி, என் வார்த்தைகளை எல்லாம் நீ பறித்துவிட்டாய். அதனால் என்னால் உன்னோடு பேசமுடியவில்லை. எனினும், என் இரத்தம் என் உடலுள் பேசுகின்றது. மக்கள் மதிக்கும் இளவரசனின் கவர்ச்சியான பேச்சுக்குப் பின் ஒருவர்க்கொருவர் வார்த்தையாடிக் கொள்ளும் அம்மக்கள், பலவித உணர்ச்சிகளும் ஒருங்கே கூடியதால், வார்த்தைகளின்றி, செயலில் தெரியகாட்டும்புரட்சிவேக ஆனந்தம் போன்று, உன் கவர்ச்சி மிக்க வார்த்தைகளைக் கேட்ட

என் உணர்ச்சியிலும் புரட்சி ஏற்பட்டுள்ளது. போர்ஷியா, நீ அளித்த இந்த மோதிரத்தை நான் இழப்பேனுயின் என் உயிரை இழப்பது போன்ரும். அப்போது இந்தப் பஸ்ஸானியோ இறந்து விட்டானென்று நீ தீரமுடன் கூற லாம்" என்று உறுதி மொழி தந்தான் பஸ்ஸானியோ

அப்போது, நெரிஸ்ஸா அவ்விடமடைந்து" என் தலைவ, தலைவியே எங்களுடைய எண்ணங்கள் வெற்றி அடைந்த நேரம் இதுவே. இந்த நேரத்தில் எங்களுடைய மகிழ்ச்சியை வெளிப் படுத்திக் கொள்கின்ரேம்" என்று அவள் சார்பாகவும் ஏனைய பணிப் பெண்கள் சார்பாகவும் நல்வாழ்த்து கூறினள். அவளைத் தொடர்ந்து கிரேஷியா ஞேவும் நெருங்கி "என் செல்வச் சீமான் பஸ்ஸானியோ, என் செல்வச் சீமாட்டி, நீங்கள் விரும்பும் நலங்கள் அனைத்தும் நீங்கள் பெற்றிட நான் விரும்புகின்றேன். இந்த நல்வாழ்த்தைத் தவிர்த்து வேறெதையும் என்னிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கமாட்டீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். மேலும், உங்களை நான் மன்ருடிக் கேட்பதும் ஒன்று உண்டு: நீங்கள் திருமணம் செய்து கொள்ளும் போது நானும் திருமணம் செய்து கொள்ள உத்தரவு வேண்டுகின்றேன்" என்ருன.

"மனப்பூர்வமாக உத்தரவளிக்கின்றேன். நீ உன் மனைவியைத் தேர்ந்தெடுத்து அழைத்து வா" என்று பஸ் ஸானியோ விடையளித்தான்.

பஸ்ஸானியோவின் உத்தரவைப் பெற்றுக் கொண்ட கிரேஷியாஞே மகிழ்ச்சியுடன், "உமக்கு மிகவும் நன்றி. சீமானே, எனக்கான மனைவி உன்னிடமுள்ளவள். செல்வந் தரே, உன் கண்களைப் போன்று என் கண்களும் வெகு வேகமாக எதையும் பார்க்கும். நீர் ஒரு பாவையைப்

பார்த்துக் காதலித்தீர். நான் அவளின் பணிப் பெண்ணைப் பார்த்துக் காதலித்தேன். இடையிலே தயக்கம் இருவர்க்கும் ஏற்பட்டது. உம்முடைய நற்பேறு பேழையின்வெற்றியைப்பொறுத்திருந்தது. என்னுடையநற்பேறு, உன் நற்பேரைப் பொறுத்தேயிருந்தது. என் நா உலர்ந்து நான் மயக்கமடையும் வரை அநேக உறுதி மொழிகளால் அவளுடைய ஒப்பத்தைப் பெற்றேன். அப்போது கூட அவள், 'என் தலைவி உன் தலைவனை மணக்கும் பேறு பெற்றாலொழிய நான் உன்னை மணக்க முடியாது' என்று தான் கூறினாள்" என்று சாதுரிய முறையில் கேலியாகக் கூறினான்.

கிரேஷியாவின் வார்த்தைகளைக் கேட்ட போர்ஷியா, அருகிலிருந்த நெரிஸ்ஸாவை நோக்கி, "இஃதுண்மையா, நெரிஸ்ஸா?" என வினவினாள்.

சீமாட்டி, இச்சேதி உமக்கு மகிழ்ச்சி தருமாயின் உண்மையே" எனப் பணிவுடன் பதிலளித்தாள் நெரிஸ்ஸா. அதைக் கேட்ட பஸ்ஸானியோ கிரேஷியாவையும், நீ உண்மையாகக் கூறுகின்றாயா?" என வினவ அவனும் அதற்கும் விடையாக "ஆம் நான் உண்மையாக அவளை மணக்க விரும்புகின்றேன்" என்று கூறிட, பஸ்ஸானியோ. "உங்கள் திருமணத்தில் நம் விருந்து மிகச் சிறப்பெய்தும்" என்று கூறினான்.

அச்சமயம் யாரோ வருவதை அறிந்த கிரேஷியானோ அவர்களை உற்றுப் பார்த்து விட்டு "லோரென்சோவும் அவன் காதலியும் வருகின்றார்கள்,—ஓ என் பழைய வெனிஸ் நண்பன் சோலானியோவும் அவர்களுடன் வருகின்றான்!" என்று குதூகலத்துடன் கூறினான். லோரென்சோவும், ஜெஸ்ஸிக்காவும் சோலானியோவும் முற்றத்துள்

நுழைந்தார்கள். அவர்களைப் பஸ்ஸானியோ, "லோரென்சோ சோலானியோ வருக, வருக!" என்று கூறி வரவேற்று விட்டு, போர்ஷியாவை நோக்கி, "இன்பவல்லி உன் உத்தரவுடன், என் நண்பர்களுக்கு, எந்நாட்டு மனிதர்களுக்கு நான் வரவேற்பளிக்கின்றேன்" என்று கூறிட, அவளும், "அவர்கள் வருகை இங்கு இன்முகத்துடன் வரவேற்கப் படுகின்றது; நானும் அவர்களை வரவேற்கின்றேன்" என்று மகிழ்ச்சியுடன் விடையளித்தாள்.

"மிக்க நன்றி. பெருமகனே, நான் உன்னைப் பார்க்க வேண்டுமென்று எண்ணி வரவில்லை. சோலானியோவை வழியில் சந்தித்தேன். நான் எவ்வளவோ மறுத்தும் கேளாது என்னை அவனுடன் இங்கு அழைத்து வந்துள்ளான்" என்று பணிவுடன் கூறினன், லோரென்சோ.

"நான் அப்படிச் செய்ததற்கும் காரணம் உண்டு. பெருவணிகன் அண்டோனியோ அவருடைய வாழ்த்துச் செய்திகளை உனக்குத் தெரிவிக்கச் சொன்னர்" என்று கூறி பஸ்ஸானியோவிடம் ஒரு கடிதத்தைச் சோலானியோ கொடுத்தான்.

பஸ்ஸானியோவும் அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டு, "என் நல்லரும் நண்பன் எப்படி உள்ளார்?" என்று வினவினன்.

"அவர்க்கு உடல் நலக்குறைவில்லை. ஆனல், மனக் குறை ஏற்பட்டிருக்கிறது. நான் உன்னிடம் கொடுத்த அவருடைய கடிதம் அவருடைய நிலையை விளக்கிக் கூறும்" என்றுன் சோலானியோ.

கிரேஷியானே தன் காதலி நெரிஸ்ஸாவை நோக்கி, "நெரிஸ்ஸா, ஜெஸ்ஸிக்காவை வரவேற்று உபசரி" என்று

கூறிவிட்டு சோலானியோவைப் பார்த்து, "வணக்கம் சோலானியோ, வெனிஸ்நகரத்திலிருந்து என்ன செய்தி கொண்டு வந்துள்ளாய்? பெரு வணிகன் அண்டோனியோ நலமாகத்தானே உள்ளார்? அவர் எங்களின் வெற்றியைக் கேட்பின் மகிழ்வார் என்று நம்புகின்றேன். நாங்கள் உரோமத்தோலை வெற்றியால் கொணர்ந்த ஜேசன்களானோம்" என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் கூறினன்.

"ஆம். அண்டோனியா இழந்ததை நீ பெற்றுள்ளாய்" என்று பதில் கூறினன் சோலானியோ.

சோலானியோ விடமிருந்து பெற்ற அண்டோனியின் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த பஸ்ஸானியோவின் முகத் தோற்றம் மாறியது. அதைக் கண்ட போர்ஷியா, சோலானியோனுவை 'நோக்கி, நீ கொண்டு வந்துள்ள கடிதத்தில் ஏதோ தீயச் செய்தி உள்ளது போலும்! இல்லாவிடில் பஸ்ஸானியோவின் கன்னங்களின் நிறம் திடீரென்று மாற வேண்டிய காரணமென்ன? யாரோ ஓர் அன்பிற்குரிய நண்பர் மாண்டியிருக்க வேண்டும்! இவ்வுலகில் அத்தகைய நிலையன்றி வேறுஎத்தகையஇன்னலும் திடமனம் படைத்த ஒரு மனிதனை மாற்ற முடியாது என்னே, இவரின் முகத்தோற்றத்தின் மாற்றம்! என்று கூறிகொண்டே, பஸ்ஸானியோவை நோக்கி, "பஸ்ஸானியோ, நான் துணைவி; உன்னை எதையும் கேட்க உரிமையுடையவள்; அதனல், உன் நிலையை மாற்றக்கூடிய அளவில் அந்தக் கடிதத்தில் உள்ள செய்தி என்ன என்பதை எனக்குத் தெரியச் சொல்" எனக் கேட்டாள்.

பஸ்ஸானியோவும் மிகவும் வருத்தத்துடன், "என் இன்பவல்லி, போர்ஷியா! எனக்கு வேதனைத் தாக்கூடிய வார்த்தைகள் இந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளன.

பெருங்குடிப் பெண்ணே, முதன் முதலில் நான் உன்னைச் சந்தித்தபோது "நான் ஒரு பெருங்குடியில் பிறந்தேன்; எனினும்,என்னிடம் யாதொரு செல்வமும் கிடையாது' என்று உன்னிடம் வெளிப்படையாகச் சொன்னேன். என் அன்புமிக்க ஆரணங்கே, நான் பாராரி என்று அறிந் திருந்தும், நான் தற்பெருமைக்காரனு யிருந்தேன் என் பதை நீ நன்ருக உணரவேண்டும். நான் ஏது மற்றவன் என்று உன்னிடம் கூறியபோது நான் கீழ்க்குணமும் படைத்தவன் என்று தவருமல் கூறியிருக்கவேண்டும். ஏனெனில், நான் அன்பு பாராட்டும் ஒரு நண்பனை, என் சுய நலத்திற்காக அவனுடைய எதிரியிடம் சிக்கவைத்து விட்டேன். இதோ, கடிதம்! இந்தக் கடிதம் என் நண்ப னின் உடல், இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், உயிர் வாதை அளிக்கும், இரத்தக்கசிவு மிக்க ஒவ்வொரு புண்!" என்று கூறி கடிதத்தைப் போர்ஷியாவிடம் கொடுத்து விட்டு, சோலானியோவை நோக்கி, "சோலானியோ, உண்மையாகவா, அண்டோனியோவின் வாணிபக் கப்பல் கள் அனைத்தும் திரும்பவில்லை! டிரிபோலிஸ், மெக்ஸிகோ, இங்கிலாந்து, லிஸ்பன், பார்பாரி, இந்தியா ஆகிய இடங் களுக்குச் சென்ற கப்பல்களில் ஒன்றுகூடவா வெனிஸ் திரும்பவில்லை? அவருடைய கப்பல்களில் ஒன்று கூடவா வாணிபர்களின் உள்ளத்திற்கு வேதனை அளிக்கும் பேராபத்து மிக்க பாறைகளிடமிருந்து தப்பித் திரும்ப வில்லை?" என்று ஆச்சரியமும், அச்சமும் கலந்த உணர்ச்சியுடன் கேட்டான்.

"ஆம், செல்வந்தரே, ஒரு கப்பல்கூட திரும்பவில்லை. இஃதன்றி, அந்த யூதனின் கடனைத் திருப்பிக் கொடுக்கு மளவிற்குக் கையில் தற்போது பணமிருந்தாலும் பிரயோ

சனமில்லை, ஏனெனில் அதை அந்த யூதன் திரும்பப் பெற்றுக்கொள்ள மாட்டான். மனித உருவில் இருந்து மற்றொரு மனிதனுக்குத் தீங்கிழைக்கும் இவனைப்போன்ற ஒரு பேராசைக்காரனை நான் இதுவரையில் பார்த்ததே கிடையாது. ஷைலக் அல்லும் பகலும் ஓயாது வெனிஸ் இறைமகனிடம் சென்று அவனுக்கு நீதி வழங்கக் கோரிக்கொண்டிருக்கிறான். அவனுக்கு வாக்குறுதிச் சீட்டுப்படி நீதி கிடைக்கவில்லையானால், வெனிஸ் நாட்டில் அந்நியர்க்குள்ள உரிமைப் பறிக்கப்படுவதாகப் பிரசாரம் செய்யப் போவதாகப் பயமுறுத்துகிறான். அந்த வெனிஸ் இறைமகனும், இருபது வணிகர்களும், பெருந் துறைமுகப் பட்டினங்களில் வாழ்கின்ற செல்வந்தர்களும், ஷைலக்கை நெருங்கி, அவனுடைய அநீதியான பேராசையை போக்கும்படி கேட்டுக்கொண்டதும் பயனற்றதாகிவிட்டது. அந்தப் பேராசைக்கார, பழிவாங்கும் மனம் படைத்த ஷைலக், அண்டோனியோவின் வாக்குறுதிச் சீட்டிலுள்ள படியே நீதிவேண்டி நிற்கிறான்" என்று ஷைலக்கின் போக்கைத் தெள்ளத் தெளிய விளக்கிக் கூறினான் சோலானியோ.

சோலானியோவின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஜெஸ்ஸிக்காவும், பஸ்ஸானியோவை நோக்கி, "ஆம், என் தந்தை அவருடைய நண்பர் டியுபாலிடமும் மற்ற அவருடைய இனத்தாரிடமும், 'அண்டோனியோவுக்கு நான் அளித்த கடன் தொகையைப் போன்று இருபது மடங்கு பணம் எனக்கு கிடைப்பதாயினும், அண்டோனியோவின் சதையையே நான் பெரிதும் விரும்பி ஏற்பேன்' என்று அவர் அடிக்கடி கூறியுள்ளதை நான் கேட்டிருக்கிறேன். பெருமகனே, சட்டமும், அதிகாரமும், உரிமை

யும் இடமளிக்குமேயாயின், அண்டோனியோவின் உயிர்க்கு ஆபத்து ஏற்படுவது தவறாது" என்று கூறினாள்.

சோலானியோவும், ஜெஸ்ஸிக்காவும் பஸ்ஸானியோ விடம், அண்டோனியோ ஆபத்திலிருக்கும் நிலையைக் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்ட போர்ஷியா, பஸ்ஸானியோவை நோக்கி, "பஸ்ஸானியோ, உன்னுடைய அன்பு மிக்க நண்பர் உண்மையில் இவர்கள் கூறுவது போன்ற தொரு பேராபத்திலா உள்ளார்?" என வினவினாள்.

"ஆம். அவன் என் பேரன்புமிக்க நண்பன்; பெருங் கருணை உள்ளத்தினன்; அருங்குணம் படைத்தவன்; பிறர்க்கு நன்மை புரிவதிலே தளராத மனத்தினன். இத்தாலியில் வாழ்கின்ற அனைவரையும்விட அவன் உள்ளத்திலேதான், பழங்கால உரோமானியர்க் கிருந்த பண்புகள் பூராவும் குடிக்கொண் டிருக்கின்றன.'' என்று தன் நண்பன் அண்டோனியோவின் குணங்களைப் பற்றிக் கூறினான் பஸ்ஸானியோ.

"அவர், அந்த யூதனுக்கு எவ்வளவு கடன் தரவேண்டும்?" என்று போர்ஷியா வினவினாள்.

"எனக்காக மூன்றுயிரம் நாணயங்கள் வாங்கினார்!" என்றான் பஸ்ஸானியோ.

இதைக் கேட்டவுடனே போர்ஷியா, "இவ்வளவு தானா! ஆறுபிரம் நாணயங்கள் கொடுத்து அண்டோனியோவின் வாக்குறுதிச் சிட்டை ரத்துசெய்யுங்கள். தேவையாயின் ஆறுயிரத்தை இருமடங்காக்கி பன்னிரண்டாயிரமாகக் கொடுங்கள். அப்போதும் அந்த யூதன் வாங்க மறுத்தால், அந்தத் தொகையையும் மூன்று மடங்காக்கிக் கொடுங்கள். பஸ்ஸானியோ, நீர் குறிப்பிட்ட அருங்குணங்கள் படைத்த

ஒரு நண்பர், உன்னுடைய தவற்ருல் ஒரு சிறு மயிரைக் கூட அவருடைய உடலிலிருந்து இழக்கக்கூடாது. முதலில் கோவிலுக்குச் சென்று என்னை உன் மனைவியாக்கிக் கொண்ட பின்னர் நேரே, வெனிஸில் உள்ள உம் நண்பரிடம் நீர் செல்லலாம். நிம்மதியற்ற மனதுடன் நீர். என் அருகில் இருக்கவேண்டாம். உம் சிறு கடனைத் தீர்க்க, அக்கடனைப் போன்று இருபது மடங்கு பொன்னை நீர் எடுத்துச் செல்லலாம். அக் கடன் தீர்க்கப்பட்டவுடன், உம் நண்பரையும் நீர் இங்கு அழைத்து வரவேண்டும் நீர் திரும்பி வரும்வரை நானும், நெரிஸ்ஸாவும், கன்னியும், விதவையும் போன்று நேர்மையாக யிருந்து காலங்கடத்துவோம். ஆதலால், வாரும், சொல்வோம். இன்று உம்முடைய மண நாளாகையால், உம் நண்பர்களை வரவேற்றிடுவீர்; உம் முகத்தில் மகிழ்ச்சி தோன்றக் காட்டிடுவீர். நான் உம்மைப் பெருவேதனையி லடைந்தேனுதலால், அருமையுடன் காதலிக்கிறேன். எதோ, உம் நண்பர் எழுதிய கடிதத்தைப் படியுங்கள்; கேட்போம்." என்ருள்.

பஸ்ஸானியோவும், அண்டோனியோவின் கடிதத்தைப் பிரித்து, "போர்ஷியா என் நண்பன் எழுதிய கடிதத்திலுள்ள செய்தி இதோ: "அன்புமிக்க பஸ்ஸானியோ, என் கப்பல்களெல்லாம் கடலில் உடைந்தும், மூழ்கியும் போயின. என் கடன்காரர்கள் என்னிடம் கொடுமையாக நடந்துகொள்கின்ருர்கள். என் நிலை தாழ்ந்துவிட்டது. யூதன் ஷைலக்கிற்கு நான் அளித்த வாக்குத் தவறிவிட்டது. நான் ஷைலக்கிற்குரிய கடனை ஒரு வேளை திருப்பித் தந்தாலும் நான் உயிருடன் வாழமுடியாது. நான் சாகும் போது நீ என் அருகில் இருப்பின், உனக்கும் எனக்குமிடையிலிருக்கும் கடன் தீர்ந்துவிடும். எனினும், நீ

இன்பமாக இரு. உன் காதலி உன்னை இங்குவர அனுமதிக்காவிடில், இந்தக் கடிதத்தைப் பற்றிக் கவலைகொள்ளாதே." போர்ஷியா என் நண்பன் கடிதத்தை நான் படிக்கக் கேட்டுவிட்டாயன்றோ!" என்று உள்ளத் துடிப்புடன் கேட்டான்.

பஸ்ஸானியோவின் நிலையை உணர்ந்த போர்ஷியா, "காதலரே, எல்லா வேலைகளையும் தள்ளிவைத்து, நீர் உடனே இங்கிருந்து செல்லவும்!" என்றாள்.

"நான் உன்னுடைய விடையைப் பெற்றுவிட்டதால் இங்கிருந்து சீக்கிரம் செல்லுகின்றேன். ஆனால், என் அன்புக்குரிய போர்ஷியா, இங்குத் திரும்பி வரும்வரை, நான் படுக்கையில் படுத்துறங்க மாட்டேன்; எங்கும் ஓய்வு எடுக்கமாட்டேன்." என்று கூறிப் பிரியாவிடை பெற்றுச் சென்றான, பஸ்ஸானியோ. அவனைத் தொடர்ந்து அனைவரும் முற்றத்தை விட்டு நீங்கினார்கள்.

# 13. கல் நெஞ்சு நாய்

வெனிஸ் நகரில் ஷைலக்கிற்கு தவணைக்குள் கடன் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்ட காரணத்தால்; அண்டோனியோ சிறையில் அடைக்கப்பட்டான். ஆனாலும், சிறைக்காவல் புரிவோன் அண்டோனியோவின் வேண்டுகோளின்படி, அவனை ஷைலக்கிடம் அழைத்துச் சென்றான். அண்டோனியோவைச் சலாரினோ பின்தொடர்ந்தான். மூவரும் ஷைலக்கை ஒரு தெருவில் கண்டார்கள். அண்டோனியோ தன்னிடம் நோக்கி வருவதைக் கண்ட ஷைலக் சிறைக்காவல்காரனைப் பார்த்து, "இவனைக் கவனமாகப் பார்த்துக்கொள். இவனுக்காகக் கருணைக் காட்டாதே. இவன் இனமாகக் கடன் கொடுத்த முட்டாள். ஏய், சிறைக்காவல்காரனே, இவனைக்கவனமாகக் காத்து வா" என்றான்.

அண்டோனியோ, ஷைலக்கை நோக்கி, "ஷைலக், தயவு செய்து நான் சொல்வதைக் கேள்" என்றான்.

அதற்குள் ஷைலக், "நான் வாக்குறுதிச் சீட்டுப்படி அவசியம் நடப்பேன். நீ என்னிடம் பேசுவதில் பயனில்லை. நீ எழுதியளித்த வாக்குறுதிச் சீட்டுப்படி நான் தவறாமல் நடக்க வேண்டுமென்று உறுதிகொண்டுள்ளேன். அண்டோனியோ, இந்த நிலைமை ஏற்படுவதற்குமுன், நீ என்னை நாய் என்று இகழ்ந்துரைத்தாய். நான் நாய்தான். ஆகையால், என் பற்களைக் கண்டு கவனமாகயிரு. வெனிஸ் இறைமகன் எனக்குத் தவறாது நீதி வழங்குவார்" என்று அண்டோனியோவிடம் கூறிவிட்டு, அவனைக் கொண்டு

வந்த சிறைக்காவல்காரனை நோக்கி, கோபமுடன், "குணங் கெட்ட காவற்காரனே, நீ முட்டாள்தனமாக இவனை இங்கு அழைத்து வந்துள்ளாய்" என்றான்.

அண்டோனியோ மீண்டும் ஷைலக்கை நோக்கி, "நான் உன்னை மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பேசவிட்டுக் கேள்" என்று கூறி மன்றாடினான். ஆனால், ஷைலக் திடமனதுடன், "நான் என்னிடமுள்ள கடன் பத்திரப்படியே அவசியம் நடவடிக்கை எடுப்பேன். ஆதலால், நான் உன் பேச்சைக் கேட்க முடியாது. நீயும் என்னிடம் பேசமுயல்வது வீணே! உன் போன்ற கிருத்து வர் நிலையைக் கண்டு நான் பரிதாபப்படவோ, பெருமூச்சு விடவோ, உன் வேண்டுகோளுக்கு இணங்கவோ தேவை யான இளகிய உள்ளமும், குருட்டுக் கண்களும் என்னிட மில்லை. ஆதலால், நீ என்னைத் தொடர்ந்து பேசமுயல்வது பயனற்ற செயலாகும்" என்று கூறிச், சென்றுவிட்டான்.

ஷைலக்கின் முரட்டுப் போக்கைக் கண்ட சலாரினோ, "இவனைப் போன்றதோர் உணர்ச்சியற்ற கல்நெஞ்சு நாயை மனிதரிடையிலே இதுவரையில் நான் கண்டதே இல்லை" என்றான்.

அண்டோனியோ உள்ளமொடிந்து, "நான் இனி ஷைலக்கைப் பின் தொடரப் போவதில்லை. என் விண்ணப் பங்கள் வீணாகி விட்டன. அவன் என் உயிரைப் போக்க விரும்புகின்றான். அதன் காரணத்தை நான் நன்கு அறி வேன்: அவனிடம் கடன் வாங்கித் தொல்லை அனுபவித்த அநேகரை, என்னிடம் அவர்கள் முறையிட்டுக் கொண்ட காரணத்தால், நான் விடுவித்து உதவியது அவன் இன்று

என்னை வெறுக்கச் செய்கிறது" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

அண்டோனியோவின் உள்ளக் குழப்பத்தை உணர்ந்த சலாரினோ, "வெனிஸ் இறை மகன் எப்படியும் ஷைலக்கிடம் உள்ள கடன் பத்திர நிபந்தனைபடி நீதி வழங்க மாட்டார் என்று நிச்சயமாக நம்புகிறேன்" என்று மனத் தேற்ற மொழி கூறினான்.

ஆனல், அண்டோனியோ சலாரினோவை நோக்கி, "இறைமகன் சட்டத்திற்கு எதிராக நடக்கமுடியாது. ஏனெனில், வெனிஸ் நாட்டு வியாபாரமும், சிறப்பும், அந்நிய நாட்டினர் தொடர்பாலானதாகையால், அவ்வந்நியர்க்கு நீதி வழங்கும்போது நம்மிறைமகன் நேர்மை தவறின், நம் நாட்டு நீதியை அனைவரும் குறைகூறவல்லவோ தொடங்குவர். என்னுடைய வருத்தமும், இழப்பும், நான், கடுமனமுடைய ஷைலக்கிற்கு நாளைக்கு ஒரு இராத்தல் சதை அளிக்கமுடியாத நிலையிலன்றோ உள்ளேன். சரி, நாம் போவோம். என் துன்பங்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனல், நான் என் கடனைத் திருப்பித் தருகின்றபோது என் நண்பன் பஸ்ஸானியோ என் அருகில் இருக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று கூறி நடந்தான். காவற்காரனும், சலாரினோவும் அவனுடன் சென்றார்கள்.

# 14. பெண்ணுக்கும் ஆண்மை உண்டு

பெல்மாண்ட நகரில் போர்ஷியாவும், நெரிஸ்ஸாவும், லோரென்சோவும், ஜெஸ்ஸிக்காவும், ஓர் அறையில் அமர்ந்து அண்டோனியோவைப் பற்றிப் பேசிக் கொண் டிருந்தார்கள். அச்சமயம் போர்ஷியாவிடம், அண்டோனி யோவின் மேன்மையையும், அவனுக்கும் பஸ்ஸானியோ வுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைப் பற்றியும் விளக்கிக் கூற எண்ணி, "சீமாட்டி, பஸ்ஸானியோவுக்கும் அண்டோ னியோவுக்கும் இரு கடவுளர்கட்குள்ள தொடர்பு போன்றதொரு தொடர்பு உள்ளதென்று, உம் உள்ளத்தில் உண்மையாக மேன்மையானதோர் எண்ணம் எழுந்துள்ள தென்று, நான் உம் எதிரில் கூறுவது வீண் புகழ்ச்சியாக உமக்குத் தோன்றலாம். ஆனல், உம் நாயகன் அவருடைய உண்மையான நண்பனுக்கு உதவுதற்கன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவேனும் உம்மைத் தற்போதுபோல பிரிய நேரிட்டிருந்தால், நீர் அவருடைய பிரிவை இப் போது பொறுத்துக் கொண்டிருப்பதுபோன்று, பொறுத் துக் கொண்டிருக்க மாட்டீர். நீர் எத்தகைய நேர்மையான மனிதனுக்கு உதவி அனுப்பியுள்ளீர் என்று அறிந்தால், உம்முடைய கணவனின் எத்தகைய அன்பனுக்கு நீர் கருணைக் காட்டுகின்றீர் என்று அறிந்தால், நீர் அத்தகைய மனிதனுக்கு, எம்முடைய உயிர் நண்பனுக்கு உதவி புரிந்த தற்காக, பெரிதும் பெருமை கொள்வீர்" என்ருன்.

"நான் நன்மை புரிவதற்கு எப்போதும் தவறுவ தில்லை. அதுபோன்றுதான் இப்போதும் தவருமல் உதவி செய்துள்ளேன். நான் உதவியுள்ள அண்டோனியோ என் கணவரின் உண்மையான நண்பராதலால், அவர் குணுதி

சயங்களும் என் கணவருடைய குணாதிசயங்களைப் போன்றே யிருக்கவேண்டும். ஏனெனில், நுகத்தடியில் கட்டப்படுகின்ற இரு எருதுகளும் எப்படிப் பளுவைச் சுமந்து செல்வதில் ஒத்த குணம்படைத்தனவாக இருக்கின்றனவோ, அப்படியே, காலத்தைச் சேர்ந்து கழிக்கும் நெருங்கிய நண்பர்கள் உள்ளத்தாலும், நடத்தையாலும் ஒன்றுபட்டே இருப்பார்கள். லோரென்சோ, நான் கூறியது உண்மையாயின், என் கணவருடைய நண்பரைக் கடும் நரக வேதனையிலிருந்து மீட்க நான் உதவிய பணம் மிகவும் சொற்பமே! இப்படிப் பேசுவது தற்புகழ்ச்சியாதலால், இனி என் உதவியைப் பற்றி நான் பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. லோரென்சோ, என் கணவர் இங்குத் திரும்பி வரும்வரை, இந்த வீட்டின் பராமரிப்புப் பொறுப்பை உனக்களிக்கின்றேன்—ஏனெனில், நான் ஒரு விரதம் மேற்கொண்டிருக்கிறேன். அதற்காக, நானும், நெரிஸ்ஸாவும், எங்கள் கணவன்மார்கள் திரும்பி வரும் வரை, இங்கிருந்து இரண்டு மைல்களுக் கப்பாலுள்ள ஒரு மடத்தில் தனிமையாக இருந்து, பிரார்த்தனையும் தியானமும் நிகழ்த்தப் போகின்றோம். இந்தப் பொறுப்பை மறுக்காமல் ஏற்று, என் சந்தர்ப்பத்திற்கு நீ அவசியம் உதவ விரும்புகின்றேன்" என்றாள் போர்ஷியா.

லோரென்சோ போர்ஷியாவின் கட்டளையை மனமாற ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தான். போர்ஷியாவும், அவருடைய வேலையாட்களனைவரும், பஸ்ஸானியோவிடத்திலும், அவளிடத்திலும் எப்படி நடந்துகொள்வார்களோ, அப்படியே லோரென்சோவிடத்திலும் ஜெஸ்ஸிக்காவிடத்திலும் நடந்துகொள்வார்கள் என்று உறுதியளித்தாள். லோரென்சோவும், ஜெஸ்ஸிக்காவும் போர்ஷியாவுக்கு வாழ்த்தளித்து விடை பெற்றுச் சென்றார்கள்.

அதன் பின்பு போர்ஷியா **பால்தாசர்** என்ற வேலையாளை அழைத்து அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, "பால்தாசர், நான் உன்னை எப்போதும் போல இப்போதும் உண்மையான மனிதன் என்று கருதுவதால் இந்தக் கடிதத்தை உன்னிடம் கொடுத்துள்ளேன். நீ உன் முழு வேகத்தையும் செலுத்தி, இங்கிருந்து **படுவாவுக்குச்** சென்று அங்குள்ள என் உறவினரான **டாக்டர் பெல்லாரியோ**விடம் இந்தக் கடிதத்தைச் சேர்க்க வேண்டும். அவர் கொடுக்கும் பதிலையும், உடைகளையும் பெற்றுக் கொண்டு, கற்பனையிலடங்கா வேகமுடன், வெனிஸுக்குப் பொருள்களை ஏற்றிச் செல்லும் தோணியை வந்தடைய வேண்டும். ஆகையால், நேரத்தை வீணே கழிக்காது, உடனே இவ்விடம் விட்டகன்று செல். உனக்காக குறிப்பிட்ட இடத்தில் நான் காத்திருப்பேன்" என்றாள். பால்தாசரும், "சீமாட்டி, உமக்காக என் முழுவேகத்துடன் சென்று திரும்புகின்றேன்" என்று கூறி கடிதத்துடன் புறப்பட்டான்.

பின்பு போர்ஷியா, நெரிஸ்ஸாவைப் பார்த்து, "நெரிஸ்ஸா, என்னைத் தொடர்ந்து வா. நீ இன்னும் அறியாத முக்கிய வேலை ஒன்றில் நான் ஈடுபட்டுள்ளேன். நாம், நம் கணவன்மார்களை, அவர்கள் அறியா வண்ணம் சந்திக்கப் போகின்றோம்" என்றாள்.

"அவர்கள் நம்மைப் பார்க்கமாட்டார்களா?" என வினவினாள் நெரிஸ்ஸா.

"ஆம். அவர்கள் நம்மைப் பார்ப்பார்கள். நாம் ஆண் உடையில் அவர்கட்குக் காட்சி அளிப்போம். உடையில் மட்டுமன்று; உள்ளத்திலும், இயற்கையாக நம்மிடமில்லாத ஆண்மையுடன் நாம் அவர்கள் முன் நிற்கப்போகின்றோம், நெரிஸ்ஸா, ஆண் உடையில் நம்மிருவரில் நான்தான் கம்பீர

மாகத் தோற்றமளிப்பேன் என்று, பந்தயங் கட்டிக் கூறு கின்றேன். அதுமட்டுமா! வீர எழுச்சியுடன் பிச்சுவாவை என் இடுப்பில் சொருகிடுவேன்; இளம் வாலிபனுக்கும் முதியவனுக்கும் இடையிலுள்ளவன் போன்று பேசுவேன்; பெண் என்பதை மறந்து ஆண் நடை பயில்வேன்; தற் பெருமைக்கார இளைஞன் போன்று யுத்தத்தைப்பற்றி வர்ணிப்பேன்; எவ்வளவோ கௌரவமிக்க பெண்கள் என் னுடைய காதலுக்காக ஏங்கி, அக் காதல் கைகூடாத கார ணத்தால் மாண்டார்கள் என்று பொய் கதைகளைக் கூறி, அவர்கள் அப்படி மரணமடையாது தடுக்க நான் ஏதேனும் மார்க்கம் காணுதுபோனதற்காக வருந்துவதுபோலும் நடிப் பேன்; தற்புகழ்ச்சிக்கார இளைஞர்களுக்குரிய வான ஆயிரம் சூழ்ச்சிகளை நான் செயலில் காட்ட என் மனதில் திட்டமிட் டுள்ளேன்" என்று போர்ஷியா உறுதியுடன் கூறினுள்.

"சரி. நாம் ஆண்களாக மாறவேண்டிய அவசிய மென்ன?" என்று வினவினுள் நெரிஸ்ஸா.

"சீ, எத்தகைய கேள்வியைக் கேட்கின்றுய்? முதலில் என்னுடன் வா. நமக்காக வெளியில் வண்டி நிற்கின்றது. வழியில் என் திட்டத்தை உனக்கு விளக்கிக் கூறுகின்றேன். நாம் இன்று இருபது மைல்களைக் கடக்கவேண்டும். சீக்கிர மாகட்டும்" என்று நெரிஸ்ஸாவுடன் போர்ஷியா வெளி யேறினுள்.

போர்ஷியாவும், நெரிஸ்ஸாவும் வெளியேறிய பின்பு, ஜெஸ்ஸிக்கா, தோட்டத்தில் அமர்ந்திருந்தாள். அச்சமயம் பஸ்ஸானியோவின் பணியாளும், விகடகவியுமான லான்ஸ் லாட் ஜெஸ்ஸிக்காவைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந் தான் அவன். அவளை ஏமாற்றக் கருதி, "தந்தை செய்யும் பாபங்கள் தனயனேயும் சாரும், ஆதலால், ஜெஸ்ஸிக்கா,

உன் தந்தை இழைத்துவரும் அக்கிரமமான பாபக்காரியங்களுக்காக உனக்கும் தண்டனை கிடைக்குமே என்று பயப்படுகின்றேன். நான் எப்போதும் உன்னிடத்தில் தெளிவாக இருப்பது வழக்கமாதலால், என் மனதிலுதித்ததைத் தைரியமாகக் கூறினேன். இதற்காக நீ வருந்தாது, மகிழ்ச்சியாக இரு. எனினும் உனக்கு நன்மை பயக்கக்கக் கூடிய வழி ஒன்றே ஒன்றுதான் உள்ளது. அதுகூட நேர்மையான முறையன்று" என்றான்.

அதைக் கேட்ட ஜெஸ்ஸிக்கா "அது என்ன வழி?" என வினவினாள்.

"உன் தந்தை உன்னைப் பெற்றெடுக்கவில்லை என்றும், நீ அந்த யூத ஷைலக்கின் மகள் அல்லவென்றும் சொல்லிக் கொள்வதுதான், நான் எண்ணுகின்ற வழி" என்று பதில் கூறினான், லான்ஸ்லாண்ட்.

"எத்தகைய நேர்மையற்ற வழி இது! அப்போதுகூட என் தாயின் பாபங்கள் என்மீது தங்காதோ?" என வினவினாள்.

"உண்மையில் நீ உன் தாய் தந்தை இருவராலும் பெரும் பழிக்காளாகியுள்ளாய், அதற்காக நான் மிகவும் அச்சமடைகின்றேன்" என்றான், லான்ஸ்லாட்.

"நான் என் கணவரால் புனிதமாக்கப்படுவேன். ஏனெனில், அவர் என்னைக் கிருத்து மார்க்கத்தில் சேர்த்து விட்டார்" என்று விடையளித்தாள், ஜெஸ்ஸிக்கா.

"லோரென்ஸ்சோ உண்மையில் குறை கூறப்படவேண்டியவன். நாங்களே போதுமான அளவில் கிருத்துவர்களாக இருக்கும்போது, உன்னையும் கிருத்து மார்க்கத்தில் சேர்த்து, பன்றி இறைச்சி உண்ணுகின்றவர்கள் தொகையை அதிகரித்து விட்டதால், இனிப் பன்றியிறைச்சி விலை உய

ரப் போகின்றது. எத்தகைய தீங்கிழைத்துள்ளான், இந்த லோரென்சோ!" என்று மனக் கசப்புடன் கூறினன். அச் சமயம் லோரென்சோ அங்கு வந்தான். அவனைக் கண்ட தும் ஜெஸ்ஸிக்கா லான்ஸ்லாட்டை நோக்கி, இதோ, என் கணவர் வருகிருர். நீ கூறியதை அவரிடம் சொல்லுகின் றேன்" என்ருள்.

லோரென்சோவும் லான்ஸ்லாட்டை நோக்கி, "நீ என் மனைவியிடம் அடிக்கடி நெருங்கிப் பழகுவதைக் கண்டு எனக்குப் பொருமை ஏற்படுகின்றது" என்ருன். ஆனல் அருகிலிருந்த ஜெஸ்ஸிக்கா, நீர் அப்படிப் பொருமைபட வேண்டிய அவசியமில்லை. நானும், லான்ஸ்லாட்டும் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம். நான் யூதனின் மக ளாய் இருப்பதால் எனக்கு விண்ணுலகில் கருணை காட்டப் படமாட்டாது என்றும், நீ யூதர்களைக் கிருத்துவர்களாக்கி, பன்றியினிறச்சியின் விலையை உயர்த்தி, கிருத்துவர்களுக்குத் துரோகம் செய்கின்ருய் என்றும் இவன் கூறிக்கொண்டிருக் கிருன்" என்று லான்ஸ்லாட்டைப்பற்றிச் சொன்னுள்.

ஜெஸ்ஸிக்காவின் வார்த்தைகளைக் கேட்ட லோரென்சோ, லான்ஸ்லாட்டை நோக்கி, "இங்கிருந்து போய் மற்ற பணியாட்களை நோக்கி, உணவு தயாரிக்கச் சொல். நாங்கள் உண்ண விரைவில் வருகிருேம்" என்ருன். லான்ஸ்லாட்டும் வெளியேறினன். பின்பு அருகிலிருந்த ஜெஸ்ஸிக்காவை நோக்கி, "ஜெஸ்ஸிக்கா, என் அன்பு மனைவி, பெருமகன் பஸ்ஸானியோவின் மனைவியை நீ விரும்புகின்ருயா?" என வினவினன்.

"நான் போர்ஷியாவைப் பற்றி என்ன நினைக்கின்றேன் என்பதை வார்த்தைகளால் என்னுல் சொல்லமுடியாது. பஸ்ஸானியோ நற்பேற்றினல் மண்ணுலகில், விண்ணுலகு

போன்ற போர்ஷியாவை மனைவியாக அடைந்துள்ளார். அவர் விண்ணுலகான போர்ஷியாவுடன் நன்முறையில் வாழ முயலவில்லையானால், அவர் விண்ணுலகை அடைய விரும்பாதவராவார். இரண்டு கடவுளர் விண்ணுலகத்தில் (சொக்கட்டான்) விளையாட்டிற்கு இரண்டு மண்ணுலக பெண்களைப் பந்தயமாக வைக்க எண்ணினால், ஒரு சார்பில் அழகி போர்ஷியாவை நியமித்துவிட்டு மற்றொரு சார்பில் அவளுக்கு இணையாக வேறொரு பெண்ணை நியமிக்க ஆளில்லாது, ஏதோ ஒரு பொருளையன்றோ பந்தயத்திற்கு நியமிக்க வேண்டிய நிலை ஏற்படும்" என்று போர்ஷியாவைப் பற்றி பெருமையாகக் கூறினாள் ஜெஸ்ஸிக்கா.

"போர்ஷியா பஸ்ஸானியோவுக்கு மனைவியானது போன்று, நானும் உனக்குக் கணவனானேன்" தானே புகழ்ந்து கூறிக் கொண்டாள்.

"இல்லை. நீ போர்ஷியாவைப் பற்றி என் எண்ணத்தைக் கூறச் சொன்னது போன்று உன்னைப் பற்றியும் நீ என்னைக் கூறக் கேட்க வேண்டும்" என்றாள் ஜெஸ்ஸிக்கா.

"நான் என்னைப்பற்றி பிறகு கேட்கின்றேன். நாம் இப்போது உணவருந்தச் செல்வோம்" எனக் கூறினான்.

"இல்லை, இல்லை. இப்போதே நான் உன்னைப் புகழ்ந்து கூறுகின்றேன்" என்றாள் ஜெஸ்ஸிக்கா.

தன்னை ஜெஸ்ஸிக்கா புகழ்ந்து பேசமாட்டாள் என்று அறிந்திருந்த லோரென்சோ, "நீ உணவு போது என்னைப் பற்றி எதுவேண்டுமாயினும் பேசு. உன் பேச்சும் என் உணவோடு சேர்ந்து செரித்துவிடும்" என்று கூறி ஜெஸ்ஸிக்காவை அழைத்துக் கொண்டு தோட்டத்தை விட்டு வெளியேறினான்.

# 15. ஒரு துளி இரத்தம்

வெனிஸ் நகரின் இறைமகன் அவையிலே, இறைமகனும், அண்டோனியோவும், பஸ்ஸானியோவும், கிரேஷியோனுவும், சலாரினோவும், நகரின் பெரு தனவந்தர்களும், அமர்ந்திருந்தார்கள். அப்போது வெனிஸ் இறைமகன் அண்டோனியோவை நோக்கி, "அண்டோனியோ உன்னுடைய நிலைமைக்காக நான் மிகவும் வருந்துகின்றேன். இரக்கமற்ற, தீ நோக்குடைய மனிதத் தன்மையற்ற, கல்மனம் படைத்த உன்னுடைய எதிரியால் நீ இங்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது." என்று பரிதாபத்துடன் கூறினான்.

இறைமகனின் இரக்கம் மிக்க உண்மை உரையைக் கேட்ட அண்டோனியோவும் தாழ்மையுடன், "பெருந்தன்மையும், மேன்மையும் பொருந்திய தாங்கள் எனக்காகப் பெரிதும் முயன்றதாகக் கேள்விப் பட்டேன். ஆயினும் என் எதிரியின் கல்மனம் இளகவில்லை. அவன் பிடிவாதமாக இருப்பதால், எத்தகைய சட்ட வரம்புக்குட்பட்ட விதியும் என்னை என் எதிரியின் படுபகையிலிருந்து விடுவிக்க முடியாது, என்னால் அவன் கொடும்பகையை, பொறுமையாக இருந்தே எதிர்க்க முடியும். ஆயினும் நான் அவனுடைய கொடுமையால் ஏற்படுகின்ற பெருந் தீங்கை நிம்மதியான உள்ளத்துடன் வரவேற்கவே தயாராக உள்ளேன்" என்றான்.

அப்போது வெனிஸ் இறைமகன் ஷைலக்கை உள்ளே அழைக்க உத்தர விட்டான். ஷைலக்கும் அவையினுள்ளே வந்தான். அவனை எல்லோரும் பார்க்கும் முறையில் நிற்கக் கூறினார் இறைமகன். ஷைலக்கும் அப்படியே இறைமகனும், அவையிலுள்ள ஏனையோரும் பார்க்கும்படி நின்

ருன். வெனிஸ் இறைமகன் ஷைலக்கை நோக்கி, "ஷைலக் இந்நாட்டு மக்கள் நினைப்பதென்ன தெரியுமா? கடைசி நேரம் வரை நீ உன் பிடியைத் தளர்த்தாமலிருந்து, முடிவு நேரம் நெருங்கியவுடன், நீ எவ்வளவுக் கெவ்வளவு அண்டோனியோவிடம் பகைமை பாராட்டினுயோ, அவ்வளவுக்கவ்வளவு யாரும் எதிர்பார்க்காதபடி அவன் மீது கருணை காட்டி, அவன் உடலிலிருந்து ஓர் இராத்தல் சதை எடுக்காது விடுவது மாத்திரமன்றி, அவனுடைய நஷ்டத்தை மனதிலெண்ணி, மனிதத் தன்மையுடன் கருணை கூர்ந்து அவன் உனக்களிக்க வேண்டிய அசல் தொகையிலும் பாதி தள்ளி விடுவாய் என்று எண்ணுகின்றுர்கள். நானும் அப்படித் தான் நினைக்கின்றேன். அண்டோனியோவுக்கு வாணிபத்தில் கடலில் எற்பட்ட பெருத்த இழப்பு அவனைத் தாழ்வுக்குக் கொண்டு வந்து விட்டது. அவனுடைய எதிர்பாராத நஷ்டமும், தாழ்வும், கல்மனம் படைத்தவர்களையும், முரட்டுக் குணம் பொருந்தியவர்களையும் இரக்கங் காட்டச் செய்ய முடிந்தவை. ஏன், அண்டோனியோபோன்ற பெரு வாணிகனின் திடீர்த் தாழ்வுக்காக, சாந்தமே அறியாத பிடிவாதக் குணம் பொருந்திய துருக்கியர்களும், தத்தாரியர்களும்கூட தவருது வருந்தி கருணை காட்டுவார்கள். ஆகையால், ஷைலக், உன்னிடமிருந்து பெருந்தன்மையான பதிலை எதிர்பார்க்கின்றேம்" என்றுன்.

"என் எண்ணம் யாதென்பதை மேன்மை தங்கிய உமக்கு நான் முன்னமே தெரிவித்து விட்டேன். புனிதமான சாபத்திய ஓய்வு நாளன்று எக்காரணம் முன்னிட்டும் என் வாக்குறுதிச் சீட்டுப்படி நான் தவருது நடப்பதாக உறுதிகொண்டேன். அதன்படி இன்று நான் நீதி வேண்டுகின்றேன். நீர் எனக்கு நீதி வழங்கத் தவறின் உன்

நாட்டின் சாசனத்திற்கும், சுதந்திரத்திற்கும் ஆபத்தைத் தானே கொண்டவராவீர். மூன்றுயிரம் பொன் நாணயங் களைப் பெற்றுக் கொள்வதை விட ஓர் இராத்தல் உயிரற்ற சதையை நான் ஏன் விரும்புகின்றேன் என்று என்னை நீர் வினவலாம். என்னைக் கட்டாயப்படுத்தினுல் அக் கேள்விக்குப் பதிலளிக்க மாட்டேன். நான் அண்டோ னியோவின் சதையை விரும்புவது, என் மனம் அதை நாடுவதால் என்று கூறினுல் பொருத்தமான பதிலாகுமா? என் வீட்டில் தொல்லை தரும் ஓர் எலியைப் பிடித்துக் கொன்றிட ஒருவர்க்கு நான் பத்தாயிரம் பொன் நாணயங் களைக் கொடுக்கின்றேனென்றுல், அதனுல், மற்றவர்க்குத் நான் அளிக்கும்தொல்லையென்ன? சிலமனிதர்கள்பன்றியைப் பார்த்து அருவருப்படைகின்றுர்கள். சிலர் பூனையைப் பார்த்ததும் ஆசையால் உள்ளம் நெகிழ்கின்றனர். மனநிலை உணர்ச்சிகளின் தலைவி. அத்தலைவி உணர்ச்சிகளை அவளு டைய விருப்புக்கும் வெறுப்புக்கும் உடன்பட வைக்கின் றுள். 'பூனையைக் கண்டு ஏன் உள்ளம் நெகிழ்கின்றனர்? பன்றியைப் பார்த்து ஏன் வெறுப்பு கொள்கின்றனர்?' என்று யாரேனும் கேட்டால் தகுதியான விடை கிடைக் குமா? அதுபோல, இறைமகனே. அண்டோனியோ மீது எனக்கேற்பட்டுள்ள நெடு நாளைய வெறுப்பு, இன்று அவனுக்கெதிராக, என்னை வழக்குத் தொடர வைக்கின் றது. இதைத் தவிர்த்து என்னுல் வேறு தகுதியான கார ணத்தைக் கூற முடியாது" என்றுன் வெறுப்பும், ஆத்திர மும், தந்திர உள்ளமும் கொண்ட ஷைலக்.

ஷைலக்கின் பேச்சைக் கேட்ட பஸ்ஸானியோ, "ஏ, உணர்ச்சியற்ற மனிதனே, நீ உன் கொடுமைக்குத் தகுதியான பதிலைக் கூறவில்லை" என்றுன்.

"நான் உனக்குப் பதிலளித்துத் திருப்திசெய்ய வேண்டிய அவசியத்தில் இங்கில்லை" எனப் பஸ்ஸானியோவுக்கு விடையளித்தான் ஷைலக்.

"விரும்பாத பொருள்கள் அனைத்தையும் மனிதர் கொன்று விடுகிறார்கள்?" எனக் கோபமுடன் கேட்டான் பஸ்ஸானியோ.

"கொன்றிட விரும்பாத பொருளை எந்த மனிதனும் வெறுப்பானா?" எனக்கேட்டான் ஷைலக்.

"கோபத்திற்காளாகும் எதுவும் முதன் முதலிலேயே வெறுப்புக்காளாகாது" என்று விளக்க வுரை கூற ஆரம்பித்தான், பஸ்ஸானியோ. அச்சமயம் அண்டோனியோ குறுக்கிட்டெழுந்து பஸ்ஸானியோவை நோக்கி, "இந்த யூதனிடம் நல்ல பதில் எதிர்பார்ப்பது வீண். இவனுக்கு இரக்கமே கிடையாதாதலால், மென்மேலும் இவனைக் கேள்விகள் கேட்பதில் நன்மை எதுமில்லை. கடற்கரை யோரத்திலே நின்று, உயர்ந்தெழுந்து வீசுகின்ற அலையைநோக்கி, 'அலையே நில்' என்று நீ கட்டளையிட்டால் அந்த அலை நிற்குமா? குட்டியைக் கொன்று தின்று, தாய் ஆட்டை அழவிட்டதேன் என்று ஓநாயைக் கேட்டு, உன்னால் பதில் பெற முடியுமா? காற்றினால் மலைகளின் மீதுள்ள தேவதாரு மரங்கள் அசைந்து இரைச்சலுண்டாக்குவதை உன்னால் நிறுத்த முடியுமா? இவற்றையும், இவற்றைவிட கடினமான எதையும், நீ ஒரு வேளை நிகழ்த்தலாம்! ஆனால், எதையும் விட கடினமான இந்த யூதன் மனத்தை இளகச்செய்ய உன்னால் முடியாது. ஆகையால், மேலும் காலந்தாழ்த்தாது நான் என் தண்டனையை அடையவும், இந்த யூதன் எண்ணம் நிறைவேறவுமான நிலையை உடனே ஏற்படுத்து" என்று வருத்தத்துடன், ஆனால், உறுதியுடன் கூறினான்.

அண்டோனியோ தடுத்தும் கேளாத பஸ்ஸானியோ ஷைலக்கை நோக்கி, "ஷைலக், உன் மூன்றுயிரம் நாணயங் களுக்கீடாக இதோ, என்னிடம் ஆறுயிரம் நாணயங்கள் உள் ளன. பெற்றுக் கொள்" என வேண்டினுன். ஷைலக் பஸ் ஸானியோவின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்க மறுத் தான். "ஆறுயிரமல்ல; அதைவிட ஆறுமடங்காக, முப்பத்தா றுயிரம் நாணயங்கள் கொடுத்தாலும் நான் வாங்கத் தயா ராக இல்லே. எனக்களித்த வாக்குறுதிச் சீட்டிலுள்ள நிபந் தனையின்படிதான் நான் நடப்பேன்" என்று பஸ்ஸானி யோவை நோக்கி ஷைலக் துளி கூட இரக்கமின்றி கூறி ஞன்.

ஷைலக்கின் இரக்கமற்ற தன்மையைக் கண்ட வெனிஸ் இறைமகன் "நீ உன்னுடைய தோழர்களுக்கு இரக்கம் காட்ட மறுக்கிறபோது, ஆண்டவன் மட்டும் உனக்கு இரக் கம் காட்டுவாரா?" என வினவினுன்.

இறைமகனின் கேள்வியைச் செவிமடுத்த ஷைலக், "நான் தவறெதுவும் செய்யாத போது ஆண்டவனுடைய தண்டனைக்காகப்பயப்படவேண்டிய அவசியம் என்ன இருக் கிறது? நீங்கள் அநேக அடிமைகளை விலை கொடுத்துவாங்கி, அவர்களைக் கழுதைகளைப் போன்று, நாய்களைப் போன்று, உங்களுக்கான கேவலமான வேலைகளில் ஈடுபடுத்துகின் றீர் அல்லவா? நீங்கள் அவர்களை ஏன் அப்படிக்கேவலமாக நடத்துகின்றீர்? அந்த அடிமைகள் நீங்கள்பணம் கொடுத்து வாங்கிய பொருள்கள் என்ற காரணத்தாலன்றே! அவர்களுக்காகப் பரிந்து, உங்களிடம் உள்ள அடிமைகளை உரிமையுடையவர்களாக்கி விடுங்கள். அவர்களை உங்கள் இனமக்களோடு திருமணம் செய்து வையுங்கள். அவர்களை மிருகங்களைப் போன்று நடத்தாது, உங்களுக்குள்ள மிருது

வான படுக்கைகளைப் போன்ற படுக்கைகளை அவர்கட்கும் அளியுங்கள். அவர்கட்கும் நீங்கள் ருசித்துச் சாப்பிடுகின்ற உணவையே கொடுங்கள் என்று நான் உங்களிடம் கூறினால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? 'அவர்கள் எங்கள் அடிமைகள். அவர்களை நாங்கள் பணம் கொடுத்து வாங்கினோம்!' என்றல்லவோ விடையளிப்பீர்கள். அது போன்றுதான் நானும் கூறுகின்றேன்: நான் கேட்கின்ற ஓர் இராத்தல் சதைக்காக நான் முன்னமேயே பெரும் விலை கொடுத்துள்ளேன். அந்தச் சதை எனக்கு அவசியம் கிடைத்தாக வேண்டும். மேன்மை தங்கிய இறைமகனே, நீர் எனக்கு நீதி வழங்கி அண்டோனியோவின் உடலிலிருந்து ஓர் இராத்தல் சதை நான் எடுத்துக்கொள்ள அனுமதிக்கா விட்டால், இந்த வெனிஸ் நாட்டின் நீதியை நான் அவமதிப்பேன். இங்கு நீதி, நெறி தவறுகிறது என்று கூறிப் பரிகசிப்பேன். நான் நீதி வேண்டி நிற்கின்றேன். அந்த நீதி எனக்குக் கிடைககச் செய்யுங்கள்" என்று வாதாடினான்.

"பெல்லாரியோ என்ற ஒரு சட்ட நிபுணர்க்கு நான் ஆள் அனுப்பியுள்ளேன். அவர் இன்று இங்கு வராவிட்டால், இன்றைய சபையை என் அதிகாரத்தின் துணையால் கலைத்து விடுவேன்" என்று கூறினான் வெனிஸ் இறைமகன். அச்சமயம் சலாரினோ எழுந்து, "பிரபுவே, புதியதொரு தூதன் படுவாவிலிருந்து கடிதத்துடன் வந்துள்ளான்" என்றான்,

உடனே இறைமகன், "அந்தத் தூதனைக் கடிதத்துடன் உள்ளே வரச்சொல்" என்று முகமலர்ச்சியுடன் கூறினான்.

படுவாவிலிருந்து தூதன் வந்துள்ளதை அறிந்த பஸ்ஸானியோ அண்டோனிவை நோக்கி, "அண்டோனியோ, இனிக் கவலையொழிந்து, மகிழ்ந்திரு. எனக்காக நீ ஒரு துளி இரத்தமேனும் சிந்தின், உடனே இந்த யூதன் என் உடற் சதை, இரத்தம், எலும்பு அனைத்தும் பெறுவான்" என்றான்.

"மந்தையிலுள்ள ஓர் ஆடு நோய் வாய்ப்பட்டு இறக்கும் தருவாயிலுள்ளது போன்று நான் இன்றிருக்கின்றேன். நைந்து போன பழம் விரைவில் தரையில் வீழ்கின்றது. அதுபோல நானும் விரைவில் இறக்கின்றேன். பஸ்ஸானியோ, எனக்காக நீ வருந்த வேண்டாம். நான் இறந்த பின்பு, நீ வாழ்ந்திருந்து. என் கல்லறை மீது எழுப்பப் படுகின்ற நடுகல் மீது நம் நட்பைப் பற்றி எழுதி அதை உலகமனைத்தும் அறியச் செய்" என்றான். அண்டோனியோ.

அண்டோனியோ பஸ்ஸானியோவுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது, நெரிஸ்ஸா சட்ட நிபுணரின் குமாஸ்தா போன்று உடையணிந்து, அவையினுள்ளே வந்தாள். அவளைக் கண்டதும், வெனிஸ் இறைமகன், "நீ படுவாவிலுள்ள பெல்லாரியோ விடமிருந்தா வருகின்றாய்?" என வினவினான்.

"ஆம், பிரபு. பெல்லாரியோ நும் சமூகத்திற்கு அவருடைய வணக்கத்தைத் தெரிவிக்கச் சொன்னார்" என்று கூறிக்கொண்டே ஒரு கடிதத்தைக் கொடுத்தாள், மாறு வேடத்திலிருந்த நெரிஸ்ஸா.

கடிதத்தை வெனிஸ் இறை மகன் வாங்கிப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் ஷைலக் கத்தியைத்

தீட்டிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த பஸ்ஸானியோ அவனை நோக்கி, "நீ ஏன் கத்தியை அவ்வளவு கூர்மையா யாகத் தீட்டிக் கொண்டிருக்கிறாய்?" என வினவினான்.

அதற்கு ஷைலக், "அதோ அங்கிருக்கும் கைப்பொரு ளிழந்தவனின் உடலிலிருந்து ஓர் இராத்தல் சதையை அறுத்தெடுக்க" என்று அண்டோனியோவைச் சுட்டிக் காட்டிக் கூறினான்.

ஷைலக் பதிலைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த கிரேஷி யானோ, "கொடும் மனம் படைத்த கடும் யூதனே! நீ உன் பாதத்தை மூடுகின்ற செருப்புத் தோலின் மீது அந்தக் கத்தியைத் தீட்டவில்லை; உன்னுடைய உயிரின் மீது தீட்டு கின்றாய்! நீ அண்டோனியோவின் மீது கொண்டுள்ள படுபகையில் பாதியளவு கூட நீ தீட்டுகின்ற கத்தியேனும், கொலை புரிபவனின் கத்தியேனும், வேறு எந்த கூர்மை யான கத்தியேனும் கொண்டிருக்காது. அவ்வளவு கொடும் குணம் படைத்த உன்னைப் பிரார்த்தனைகளாலும், விண் ணப்பங்களாலும் மனமிளகச்:செய்ய முடியுமா?" என்றான்.

ஷைலக்கோ, "என் மனமிளகச் செய்யு மளவிற்குப் பிரார்த்தனை புரிய, உங்களில் ஒருவர்க்கும் போதிய அறிவு கிடையாது" என்று கேலியாகக் கூறினான்.

ஷைலக்கின் கேலியைக் கேட்ட கிரேஷியானோ கோப மடைந்து, "ஏ, கேவலமான நாயே, உன்னால் நீதி நேர்மை இழந்தாலும் பாதகமில்லை. உன்னால் நான் மதத்திலே கூட. நம்பிக்கை இழக்க வேண்டி ஏற்படுகிறது. மிருக உயிர் மனித உடலுள் நுழைகின்றது என்ற **பித்தாகோரஸின்** தத்துவத்தை என் மதக் கொள்கைக்கு எதிராக நான் நம்பவேண்டி நிர்பந்திக்கப் படுகின்றேன். உன்னு டைய கொடுங்குணம் வேட்டைக் குணம் பொருந்திய

இரத்த தாகம்மிக்க ஓநாயினது போன்றிருப்பதால், நீ தாயின் கர்ப்பத்திலிருக்கும் போதே, உன் உடலுள், மனிதரால் கொல்லப் பட்ட ஓர் ஓநாயின் உயிர் பிரவேசித்திருக்க வேண்டும்" என்றான்.

கிரேஷியானோவின் ஆத்திர மிக்க வசைமொழிகளைக் கேட்ட ஷைலக் மிகவும் நிதானமுடன் "எனக்கு அண்டோனியோவால் எழுதியளிக்கப் பட்டுள்ள வாக்குறுதிச் சீட்டிலிருந்து ஓர் எழுத்தைக் கூட அழிக்க முடியாத போது, நீ அவசியமின்றி ஆத்திரத்துடன் கத்தி, உன் மார்புக்கு வலி ஏற்படுத்திக் கொள்கின்றாய். நல்லிளைஞனே, உன் அறிவை நீ செம்மை படுத்திக் கொள். அல்லாவிடில், அது எப்போதும் திருத்த முடியாத நிலை எய்தும். நான் இங்குச் சட்டத்தின் துணைகொண்டு நிற்கின்றேன்" என்றான்.

கடிதத்தைப் படித்து முடித்த இறைமகன் அவையை நோக்கி, "பெல்லாரியோ விடமிருந்து இந்தக் கடிதம் வந்துள்ளது. அவர் அறிவு மிக்க ஓர் இளஞ் சட்டவாதியை இங்கு அனுப்பி யுள்ளார்" என்று கூறி விட்டு, நெரிஸ்ஸாவை நோக்கி, "அவர் எங்கே?" என வினவினர்.

"உம் உத்தரவு எதிர்பார்த்து அவர் வெளியே காத்திருக்கின்கிறார்" என்றாள், நெரிஸ்ஸா.

வெனிஸ் இறை மகன் "அந்தச் சட்ட வாதியை வரச் சொல்" என்று நெரிஸ்ஸாவிடம் கூறிவிட்டு, அவையை நோக்கி, "உங்களில் மூன்று அல்லது நான்கு பேர்கள் எழுந்து சென்று அந்தச்சட்ட நிபுணரை அழைத்து வாருங்கள். இதற்கிடையில் பெல்லாரியோவின் கடிதத்தை இங்குப் படிக்கச் சொல்லுகின்றேன்" என்று சபையிலிருந்த ஒரு குமாஸ்தாவிடம் கடிதத்தைக் கொடுத்தார்.

அந்தக் குமாஸ்தாவும் கடிதத்தைப் படித்தான். அதில் "மேன்மை தங்கிய இறைமகனே, நும் கடிதம் வந்த நேரம் முதல் நான் நோய் வாய்ப் பட்டிருக்கிறேன். என் அன்பின் மிகுதியால் பார்க்க வந்த பால்தாசர் என்னும் ரோமானியசட்டநிபுணரிடம், ஷைலக்கிற்கும் அண்டோனி யோவுக்குமிடையில் எழுந்துள்ள சச்சரவைப் பற்றிக் கலந் தாலோசித்து, நான் வரமுடியாத காரணத்தால் அவரையே நும் அவைக்கு அனுப்பியுள்ளேன். அவர் வயதில் சிறிய வராகத் தோற்றமளித்தாலும், அறிவில் முதியவர். தற்சமய முள்ள சிக்கலான சூழ்நிலையில் சட்ட நுணுக்கத்தை தெள்ளத் தெளிய விளக்கவைக்கும் ஆற்றல் அவர்க்கு நன்கு உண்டு என்று உறுதியளிக்கிறேன் அவரை நும் அவையில் அனுமதித்து ஷைலக் வழக்கை நடத்த வசதி யளித்தால், மேன்மை தங்கிய நும் சமூகம் அவருடைய அறிவை நன்கு உணர்ந்து போற்ற வாய்ப்பேற்படும்" என்று எழுதியிருந்தது.

கடிதம் படிக்கப்பட்டு முடியும் தருணம் போர்ஷியா சட்ட நிபுணர் உடையில் அவையினுள்ளே நுழைந்தாள். அவளைக் கண்ட இறைமகன், "இதோ, அவரும் வருகிறார்" என்று கூறி அவரை வரவேற்று இருக்க இடமளித்து "நீர் பெல்லாரியோவிடமிருந்துதானே வருகின்றீர்?" என வினவினான்.

"ஆம், பிரபு" என்றாள் வணக்கமுடன், போர்ஷியா.

"நல்லது. இச்சபையில் தீர்க்கப்பட வேண்டிய வழக்கின் முழு விபரத்தையும் தாங்கள் அறிவீரா?" என்று இறைமகன் கேட்டார்.

"நான் வழக்கைப் பற்றி நன்கு அறிவிக்கப்பட்டுள்ளேன். யார் அந்த வணிகன்? யார் அந்த யூதன்? அவர்களை நான் பார்க்க விரும்புகின்றேன்" என்றாள் போர்ஷியா.

"அண்டோனியோ, ஷைலக், நீங்கள் இருவரும் சட்ட நிபுணர்முன் நில்லுங்கள்" என்று கட்டளையிட்டான் இறைமகன்.

போர்ஷியா ஷைலக்கை நோக்கி, நீர்தான் ஷைலக்கோ?" என வினவினாள்.

"ஆம், நான்தான் ஷைலக்" என்றான் ஷைலக்.

"நீர் தொடர்ந்துள்ள வழக்கு மிகவும் விசித்திரமாக உள்ளது. ஆயினும், வெனிஸ் நாட்டுச் சட்டம், நீர் அத்தகைய வழக்குத் தொடர்வதைத் தடுக்கமுடியாது" என்று ஷைலக்கிடம் கூறிவிட்டு, அண்டோனியோவை நோக்கி, "நீர் இந்த யூத ஷைலக்கினால் ஏற்பட்டுள்ள ஆபத்தில் சிக்கியுள்ளாயன்றோ?" என்றாள்.

"அப்படியென்று ஷைலக் கூறுகின்றார்" என்றான் அண்டோனியோ.

"நீ ஷைலக்கிடமுள்ள வாக்குறுதிச் சீட்டிற்கு ஒப்புகின்றாயா?" என வினவினாள் சட்ட நிபுணர் உடையிலிருந்த போர்ஷியா.

"ஆம். நான் அந்தச் சீட்டிற்கு உடன்படுகிறேன்" என்றான் அண்டோனியோ.

"அப்படியாயின், ஷைலக் கருணை காட்டவேண்டும்" என்றாள் போர்ஷியா.

போர்ஷியா, "கருணை காட்டவேண்டும்" என்று கூறியவுடனே, "நான் எதற்காக கருணை காட்டவேண்டும்?" என வினவினான் ஷைலக்.

"ஷைலக். கருணை பலாத்காரத்தினுல் ஏற்படுவ தன்று. வானின்று நிலத்தின்மீது பெய்யும் மழைபோன்று தானகவே ஏற்படுவதுதான் கருணை. அக்கருணை இரண்டு முறைகளிலும் போற்றப்படுகின்றது. கருணைக் காட்டுகின் றவனும் போற்றப்படுகின்றுன். கருணை பெறுகின்றவனும் போற்றுதலுக்குரியவனுகின்றுன். பெருஞ்சக்தி படைத்த மனித வர்க்கத்திலே இணையற்ற பெருஞ்சக்தி படைத்தது கருணைத்தான். மணிமுடியைவிட மன்னனைக் கருணைத் தான் உயர்த்துகின்றது. அவனிடமுள்ள செங்கோல் நிலையற்ற இவ்வுலகியல் அதிகாரத்தை அளிக்கின்றது. அந்த நிலையற்ற அதிகாரம் அவனிடத்தில் அச்சத்தையும், அரச மகிமையையும் உண்டாக்குகின்றது. இந்த நிலையற்ற உலகியல் அதிகாரத்தைவிட கருணை மிக உயர்ந்தது. அது மன்னர்களின் உள்ளங்களிலே இடம் பெற்றுள்ளது. கருணை கடவுளுக்குமுரியதோர் அரிய குணம். குருட்டு நீதியின் கொடுமையைக் கருணைக் குறைக்கும்போது அக் கருணையுடைய மனிதன் கடவுளுக்கு ஒப்பாகின்றுன். ஆதலால், ஷைலக் உலக நியாய தீர்ப்பின்போது ஆண்ட வன் கடுமையாக இருந்தால், நாம் பரலோக இன்பத்தை அனுபவிக்க முடியுமா? நாம் செய்கின்ற குற்றங்களை மன்னித்துக் கருணைக் காட்டி பரலோக இன்பத்தை அடையவன்றே, ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை செய் கின்றேம்? யூதனே, உன் வாதம் நேர்மையே யாயினும், நமக்கு ஆண்டவன் கருணை காட்டுவதுபோன்று நாமும் நம்மை நாடுகின்றவர்க்குக் கருணை காட்டவேண்டாமா? உன் வாதத்தினுல் அண்டோனியோவுக்கு ஏற்படவிருக் கின்ற தண்டனையின் கடுமையைக் குறைக்கவே நான் இவ்வளவு தூரம் பேசுகின்றேன். நீர் மனமிரங்கி கருணைக் காட்டாவிடில், வெனிஸ் நாட்டு சட்டப்படி, இங்குள்ள

பெருவணிகன் அண்டோனியோவுக்கு எதிராகத் தீர்ப்பளிக்கவேண்டி ஏற்படும்" என்று அரியதொரு முறையில் போர்ஷியா விளக்கமாக வாதாடினாள்.

"என் செயலினால் ஏற்படும் தீமைகளை நான் ஏற்கத் தயாராக உள்ளேன். சட்டப்படி எனக்குச் சேரவேண்டிய ஓர் இராத்தல் சதையை நான் பெற வழிசெய்" என்றான் ஷைலக்.

ஷைலக் எவ்வளவு சொல்லியும் கருணையின்றி, 'ஓர் இராத்தல் சதை' மீதே கவனஞ்செலுத்துவதைக் கண்ட போர்ஷியா, "அண்டோனியோவால் உன் கடனைத் திருப்பித்தர முடியவில்லையா?" என வினவினாள்.

அச்சமயம் பஸ்ஸானியோ குறுக்கிட்டு "இதோ, அந்தக் கடன் தொகையை இங்கேயே நான் செலுத்துகின்றேன். வேண்டுமாயின் இரு மடங்காகவும் செலுத்துகின்றேன். அதுவும் போதாதெனில், வாங்கிய தொகையைப் போன்று பத்துமடங்கு அதிகமாகவும் நான் திருப்பித்தர வேண்டிய கடமையில் உள்ளேன். அதுவும் அவனைத் திருப்தி செய்யவில்லையெனில், அண்டோனியோவின்மீது அவன் கொண்டுள்ள படுபகை முழுக்க முழுக்க உண்மை என்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம். சட்டம் பயின்ற நிபுணரே, உன் கட்டளைக்குச் சட்டத்தைக் கீழ்படிய செய்யுங்கள். பெரும் நன்மை செய்வதற்காகச் சிறு தவறு புரிவதில் கேடொன்றுமில்லை. இந்தக் கொடும் பேயனை அவனின் கேடுமிகு எண்ணத்திலிருந்து விடுவிக்க வழி காண்பீர்" என்று இறைஞ்சிச் சொன்னான்.

ஆனால், சட்ட நிபுணராகத் தோற்றமளித்த போர்ஷியா, "நீர் கூறுவதுபோன்று எதுவும் என்னால் செய்ய

முடியாது. வெனிஸ் சட்டத்தைப் புரட்ட எந்தச் சக்திக்கும் அதிகாரம் கிடையாது. அப்படி நான் சட்டத்தைப் புரட்டித் தீர்ப்பு வழங்கச் செய்யின், என் செயல் பின் ஏற்படும் வழக்குகளுக்கு உதாரணமாகி, வெனிஸ் நாட்டின் நீதி, நேர்மையற்றதாகிவிட நிலைமை ஏற்படும். ஆகையால், நான் உன் வார்த்தைகளுக்கு உடன்பட்டு நடக்க மாட்டேன்" என்று பஸ்ஸானியோவை நோக்கிக் கூறினாள்.

போர்ஷியாவின் நேர்மையானப் பேச்சைக் கேட்ட ஷைலக் மிகவும் மகிழ்ச்சியுடன் "தீர்ப்பளிக்க ஒரு **தானியேலே** இங்கு வந்துள்ளார். ஏ, தானியேல். போறிவுமிக்க இள நியாயவாதியே, உன்னை நான் எப்படிப் போற்றிப் புகழ்வேன்!" என்று கூறினான்.

"உன்னிடம் உள்ள வாக்குறுதிச் சீட்டை எனக்குக் காண்பி" என்றாள் போர்ஷியா.

ஷைலக் உடனே "இதோ" என்று வாக்குறுதிச் சீட்டைப் போர்ஷியாவிடம் கொடுத்தான்.

போர்ஷியா வாக்குறுதிச் சீட்டை வாங்கிப் பார்த்துவிட்டு, ஷைலக்கை நோக்கி, "ஷைலக் நீ கொடுத்த கடனை விட இதைப் போன்று மூன்று மடங்காகத் திருப்பித் தருவதாகக் கூறுகின்றார்கள். அதைப் பெற்றுக்கொள்" என்று மீண்டும் இறைஞ்சினாள்.

"முடியாது, முடியாது. நான் பணத்தைத் தவணைத் தவறித் திருப்பி வாங்கிக் கொள்வதில்லை என்று உறுதி கொண்டுள்ளேன். அவ்வுறுதிமொழி தவறின் நான் பொய்ச் சத்தியம் செய்த குற்றத்திற்காளாவேன். அதனால், இந்த வெனிஸ் நகரத்தையே எனக்களித்தாலும் நான் மறுத்து,

அண்டோனியோவின் உடலிலிருந்து 'ஓர் இராத்தல் சதையைத்தான்' விரும்புவேன்" என்று கூறினன் ஷைலக்.

போர்ஷியா வாக்குறுதிச் சீட்டை மீண்டும் பார்த்து விட்டு அவையை நோக்கி, "இந்தச் சீட்டு காலம் தவறி விட்டது. சட்டப்படி இந்த யூன் அண்டோனியோவின் மார்பில், இருதயத்தருகில் ஓர் இராத்தல் சதை எடுத்துக் கொள்ள உரிமையுடையவனே" என்று கூறிவிட்டு, மீண்டும் ஷைலக்கைப் பார்த்து, "ஷைலக் உன் சீட்டில் குறிப்பிட்டுள்ள தொகையை மூன்று மடங்காக வாங்கித் தருகின்றேன். கருணை காட்டிப் பெற்றுக் கொண்டு, இந்தச் சீட்டை நான் கிழித்தெறிய அனுமதி கொடு" என்று வேண்டினுள்.

"குறித்த காலத்திலே கடன் திருப்பித் தரப்பட்டிருப்பின் நான் அந்தச் சீட்டைக் கிழித்தெறிய அனுமதி தந்திருப்பேன். நீர் ஒரு பொருத்தமான நியாயாதிபதி. நீர் சட்ட நுணுக்கங்களை நன்கு தெரிந்துள்ளீர். நீர் தூணுக நின்று காக்கும் சட்டத்தைக் காட்டி, எனக்குத் தீர்ப்பளி என்று கேட்கிறேன். என் உள்ளத்தை மாற்றக் கூடிய அளவு திறமை எந்த மனிதனுடைய நாவுக்கும் கிடையாது. நான் என்னிடமுள்ள வாக்குறுதிச் சீட்டில் கூறியுள்ள நிபந்தனைபடியே நடக்கப்போகின்றேன்" என்று உறுதியாகக் கூறினன் ஷைலக்.

ஷைலக்கின் தளராத மனப்போக்கைக் கண்ட அண்டோனியோ சபையை நோக்கி, "எனக்கு உடனே தீர்ப்பளிக்கும்படி மனப்பூர்வமாக இந்த நீதிமன்றத்தை வேண்டிக் கொள்கின்றேன்" என்று இறைஞ்சினன்.

"அப்படியாயின் சரி. நீ உன்னுடைய மார்பை அவனுடைய கத்திக்குத் தயார் செய்து கொள்" என்று அண்டோனியோவை நோக்கி போர்ஷியா கூறினாள்.

போர்ஷியா அண்டோனியோவுக்குக் கூறிய வார்த்தையைக் கேட்ட ஷைலக் மகிழ்ந்து, அவனை "பெருமைக்குரிய நீதிபதி! மேன்மையான இளம் மனிதன்!" என்று போற்றிப் புகழ்ந்தான். அவளோ அண்டோனியோவைப் பார்த்து, வாக்குறுதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள அபராதத் தொகை (ஓர் இராத்தல் சதை) சட்டப்படி பொருத்தமே. ஆதலால், நீ உன் மார்பை திறந்து காட்ட உன்னைத் தயார் செய்து கொள்" என்று தொடர்ந்து கூறினாள்.

போர்ஷியாவின் முடிவை அறிந்த ஷைலக் பெரு மகிழ்ச்சி அடைந்து, உண்மையிலே நீர் பேரறிவு படைத்த நேர்மையான நீதிபதி! தோற்றத்தில் இளையவனாயினும், அறிவில் முதியவனாக இருக்கின்றீர்!" என்று அவளைப் புகழ்ந்தாள்.

போர்ஷியாவும் அண்டோனியோவை நோக்கி, "அண்டோனியோ, உன் மார்பைத் திறந்து காட்டு" என்றாள். அப்போது ஷைலக் "ஆம், மார்புத்தான்! பெருங்குண நீதிபதியே, 'இருதயத்திற்கு அருகில்' என்ற வார்த்தைகள் சீட்டில் குறிப்பிட்டுள்ளன" என்று கூறினான்.

"ஆம், அப்படியே செய்வோம். சதையை எடைபோடுவதற்குத் தராசு உள்ளதா?" என வினவினாள் போர்ஷியா.

ஷைலக் "இதோ, என்னிடம் தராசு தயாராக உள்ளது" என்று விடையளித்து, தராசை எடுத்துக் காட்டினான்.

"நல்லது உன்னுடைய சொந்தச் செலவில் ஒரு டாக்டரை ஏற்பாடு செய். நீ சதையை அறுத்தெடுத்துக் கொண்டபின்பு அண்டோனியோவின் மார்பிலேற்படும் காயத்திற்கு மருந்திட்டு அவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டாமா?" என்ருள்.

"அப்படியொன்றும் வாக்குறுதிச் சீட்டில் குறிப்பிட்டில்லையே!" என்ருன் ஷைலக்.

"சீட்டில் அப்படியொன்றுமில்லை. எனினும் தயாள குணமுடன் இந்த நன்மையேனும் நீர் செய்யலாம்" என்ருள் போர்ஷியா.

"அப்படியொன்றும் சீட்டில் குறிப்பிட்டில்லாதபோது நான் செய்ய முடியாது" என்று திடமாகப் பதிலளித்தான் ஷைலக்.

"வணிகனே, ஏதேனும் சொல்லப் போகின்ருயா?" என்று அண்டோனியோவை நோக்கி போர்ஷியா வினவினுள்.

"நான் சொல்லப் போவது மிகவும் சொற்பமே" என்று போர்ஷியாவிடம் கூறிவிட்டு, பஸ்ஸானியோவை நோக்கி, "பஸ்ஸானியோ, எனக்கு விடை கொடு; நான் விடை பெற்றுக்கொள்கின்றேன். உன்னுல் நான் இக்கதிக்குள்ளானேன் என்று நீ எண்ண வேண்டாம். காலம் எனக்கு பெரு நன்மையே செய்துள்ளது. பொருள் இழந்தவனை, வறுமையில் கண்கள் குழிந்து, நெற்றி சுருங்கி வேதனையுடன் வாழ்ந்திறக்கச் செய்யும் காலம், என்னை அத்தகைய நிலைக்காளாக்காது, முடிவுக்கு அழைத்துச் செல்வதைக் கண்டு நான் மகிழ்கின்றேன். என்னைப்பற்றி நான் இறந்த பிறகு உன் மனைவியிடம் கூறு. அண்டோனியோ

மாண்ட விதத்தை அவள் அறியச் சொல். பஸ்ஸானியோ வுக்கு ஒரு காலத்தில் உண்மையான நண்பன் ஒருவன் இருந்தான் என்பதை அவளே நேர்மையுடன் கூறச்சொல். நீ உன்னுடைய நண்பனை இழப்பதற்காக வருந்து. நீ அப் படிச் செய்யின், உன் கடனுக்காக நான் என் உயிரை இழப் பதற்கு முழுமனதுடன் சம்மதிக்கின்றேன்." என்று வருத்தமுடன் கூறினன்.

அண்டோனியோவின் பிரிவுரையைக் கேட்ட பஸ்ஸா னியோ, "அண்டோனியோ, என் உயிரினுமினிய ஒரு மனைவியை நான் அடைந்துள்ளேன். என் உயிர், என் மனைவி, இந்த உலகிலுள்ள எதுவும், உன் உயிரைவிட எனக்கு மேலானதல்ல. நான் அவை அனைத்தும் இழக்கத் தயார். உண்மையாகவே சொல்லுகின்றேன்: உன்னை மீட்ப தற்காக, இந்தப் பேய்க் குண யூதன் பொருட்டு நான் எதை யும் தியாகம் செய்கிறேன்" என்று கூறினன்.

பஸ்ஸானியோவின் மனைவியான நியாயவாதியின் உடையிலிருந்த போர்ஷியா "உம் மனைவி இப்போது உன் அருகில் இருந்தால் நீ சொல்வதைக் கேட்டு உனக்கு அவ ளுடைய ஒப்புதலை அளிக்கமாட்டாள்" என்று பஸ்ஸானி யோவிடம் கேலியாகக் கூறினுள்.

"கிரேஷியானே அந்த நியாயவாதியை நோக்கி, "எனக்கும் ஒரு மனைவி இருக்கிருள். அவளை நான் உள் ளன்புடன் நேசிக்கின்றேன். விண்ணுலகத்திலுள்ள கடவு ளோடு பேசி இந்த யூத நாயின் மனதிலே இரக்கம் தோன் றச் செய்ய முடியுமாயின், அவள் விண்ணுலகத்திற்குச் செல்வதை நான் மகிழ்ந்து வரவேற்பேன்" என்று கூறி ஞன்.

கிரேஷியானோவின் வார்த்தைகளைக் கேட்ட குமஸ்தா உடையிலிருந்த நெரிஸ்ஸா "நீ உன்னுடைய எண்ணத்தை உன் மனைவி இங்கு இல்லாத வேளையில் தெரிவிக்கின்றாய் அவள் முன் இப்படிப் பேசினால், உன் வீட்டில் நிம்மதி யற்ற சச்சரவுதான் ஏற்படும்" என்று கேலி பேசினாள்.

பஸ்ஸானியோவும், கிரேஷியானோவும் தங்கள் மனைவி மார்களையும் நண்பனுக்காக இழக்கத் துணிவதாகக் கூறிய தைக் கேட்ட ஷைலக் தனக்குத்தானே, "இந்தக் கிருத்து வர்கள் தாம் கோரியதை அடைய மனைவியரையும் துறக்கத் துணிகின்றனரே! இத்தகைய கிருத்துவன் ஒருவனைக் கண வனாகத் தேர்ந்த என் மகள், ஒரு கொள்ளைக்காரனைத் தேர்ந்திருப்பினும் நான் மகிழ்ந்திருப்பேன்" என்று பொறு மைத் தீ சுடர் விட்டெரியும் மனத்தினனாய், "சிறு விவ காரங்களில் காலத்தை வீணாக்குவதைத் தவிர்த்து, தீர்ப் பைத் தொடரும்படி வேண்டுகின்றேன்" என்று போர் ஷியாவிடம் கூறினான்.

"நீ கோரும் வணிகனுடைய மார்பிலிருந்து எடுக்கப் படும் ஓர் இராத்தல் சதை உன்னுடையதே! சட்டமும், நீதிமன்றமும், நீ அதைப் பெற அனுமதிக்கின்றேன்" என்று கூறினாள் போர்ஷியா.

போர்ஷியாவின் தீர்ப்பைக் கேட்ட ஷைலக், "நீர் பேரறிவு படைத்த நீதிபதி! நேர்மையான நீதிபதி! நல்ல தீர்ப்பு அளித்துள்ளீர்" என்று மகிழ்ந்து கூறிவிட்டு அண் டோனியோவை நோக்கி, "வா. தயாராக வா!" என்று அழைத்தான். அப்போது போர்ஷியா ஷைலக்கைப் பார்த்து, "பொறு, ஷைலக். பொறு. மற்றும் சில விபரங் கள் உள்ளன. இந்த வாக்குறுதிச் சீட்டில், ஒருதுளி இரத் தங்கூட நீ சிந்த அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை. "ஓர்

**இராத்தல் சதை"** என்ற வார்த்தைகளே இந்தச் சீட்டில் உள்ளன. உன்னுடைய வாக்குறுதிச் சீட்டுப்படியே நீ கோரும் ஓர் இராத்தல் சதையை எடுத்துக் கொள். ஆனால், நீ சதையை அறுத்தெடுக்கும்போது **ஒரு துளி இரத்த மேனும்** இந்தக் கிருத்துவனுடைய மார்பிலிருந்து சிந்துமேயாயின், வெனிஸ் நாட்டுச் சட்டப்படி உன் செல்வமனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, அரசாங்கத்திற்குச் சேர்க்கப்படும்" என்று உறுதியுடன், விளக்கமாகக் கூறினாள்.

போர்ஷியாவின் தீர்ப்பைக் கேட்டவுடன் கிரேஷியானோ "ஓ, நேர்மையான நீதிபதியே! ஓ, பேரறிவுப் படைத்த நீதிபதியே!" என்று ஷைலக் முன் சொன்னதையே இப்போது திரும்பச் சொல்லி புகழ்ந்ததுடன் நில்லாது, ஷைலக்கையும் நோக்கி, "ஏ, யூதனே கவனித்துக் கொள். நீதிபதி கூறியதைக் கேட்டுக் கொள்" என்று கேலியுடன் எச்சரித்தான்.

"அதுதான் சட்டமா?" எனக் கேட்டான் ஷைலக்.

"நீர் சட்டத்தின் துணை நாடினீர். சட்டபடி நீதி வேண்டினீர். நீ வேண்டியதற்கு மேலும் இப்போது நீதி கிடைத்துள்ளது" என்றாள் போர்ஷியா.

"அப்படியாயின் நான் என் கடன் தொகைக்கு மூன்று மடங்காக பணம் பெற்றுக் கொள்கிறேன். பணத்தைக் கொடுத்து விட்டு அந்தக் கிருத்துவனைப் போகச் சொல்" என்று மனமாற்றத்துடன் மொழிந்தான் ஷைலக். பஸ்ஸானியோ உடனே, "இதோ பணம்" என்று முன் வந்தான்.

"பொறு" என்று பஸ்ஸானியோவுக்குப் போர்ஷியா கட்டளையிட்டு, "இந்த யூதன் நீதியை பெற்றே தீரவேண்டும். பொறு. இவன் கோரிய அபராதமாகிய மார்புச் சதையன்றி வேறெதையும் பெறக் கூடாது" என்று பஸ்ஸானியோவிடம் கூறினுள். பின்பு ஷைலக்கை நோக்கி, "நீகேட்டபடி ஓர் இராத்தல் சதையைப் பெற்றுக் கொள். சதையை அறுக்க சீக்கிரம் சித்தமாகு. ஆனல் ஒருதுளி இரத்தம் கூட நீ சதையை அறுக்கும் போது கீழே சிந்தக் கூடாது. அது மட்டுமா? நீ கேட்ட ஒரே ஒரு இராத்தல் சதையை விடஓர் அணுவளவுக் கூடஅதிகமாகவேனும் குறைவாகவேனும் அறுத்தெடுக்கக் கூடாது. கவனமிருக்கட்டும். சதை நிறுத்தப்படும்போது ஒரு மயிரிழையளவு கூட தராசுத் தட்டு எப்பக்கமும் சாயக்கூடாது. அப்படியின்றி, அண்டோனியோவின் மார்பிலிருந்து நீ சதை அறுத்தெடுக்கும் போது ஒரு துளி இரத்தம் சிந்தினும், அல்லது ஓர் இராத்தலைவிட ஓர் அணுவளவு அதிகமாகவோ குறைவாகவோ இருப்பின், உன் சொத்து பூராவும் பறி முதல் செய்யப்பட்டு நீ மரணத் தண்டனைக்குள்ளாவாய்" என்று கூறினுள்.

போர்ஷியாவின் சாதுரிய விவாதத்தைக் கேட்ட கிரேஷியானே, அந்த யூதன் அவளை முன்னே புகழ்ந்து கூறிய வர்த்தைகளிலேயே ஷைலக்கிடம் "இதோ இரண்டாம் தானியேல்! யூதனே நீ கூறிய தானியேலைப் பார்!" என்று கேலியாகக் கூறினன்.

ஷைலக் மௌன முற்று நின்றிருந்தான். அதைக் கண்ட போர்ஷியா யூதனை நோக்கி, "ஷைலக் ஏன் பேசாமல் நிற்கின்ருய். நீ விரும்பிய தீர்ப்பு உனக்கு கிடைத்துள்

ளது. அண்டோனியோவின் சதையை அறுத்தெடுத்துக் கொள்" என்று கூறினாள்.

"தயவு கூர்ந்து கடன் தொகையை மட்டும் எனக்களித்து, என்னைப் போக விடு" என்று போர்ஷியாவிடம் கோரினான் ஷைலக்.

பஸ்ஸானியோ, "இதோ பெற்றுக் கொள்" என்று பணத்தைக் கொடுக்க முன் வந்தான். அப்போது போர்ஷியா பஸ்ஸானியோவை நோக்கி "இவன் பணத்தைத் திருப்பிப் பெற மறுத்தது இந்த அவையிலுள்ள அனைவருக்கும் நன்கு தெரியும். இவன் சீட்டின்படி கோரிய நியாயத்தீர்ப்பையே பெற்றாக வேண்டும். ஆதலால், நீ பணத்தைக் கொடுக்க தேவையில்லை" என்றாள். அப்போதெல்லாம் கிரேஷியானோ மகிழ்ச்சியுடன் யூதன் ஷைலக்கைக் கேலியாகப் பேசினான்.

"நான் வட்டியின்றி என் முதலைக்கூடவா பெற்றுக் கொள்ளக் கூடாது?" என வினவினான் ஷைலக்.

"ஆம், நீர் விரும்பியது ஓர் இராத்தல் சதையே யன்றி நீ அளித்த கடன் தொகையன்று. ஆகையால், அந்த ஒரே ஓர் இராத்தல் சதையை உன் சொந்த ஆபத்தில் நீ பெற்றுக் கொண்டேயாக வேண்டும்" என்று கூறினாள் போர்ஷியா.

"சரி என் நாணயங்களினால் அண்டோனியோ வாழ, என் கேடு காலம் துணை புரியட்டும். என்னைமேலும் கேள்விகள் கேட்க வேண்டாம். நான் இங்கிருந்து சென்று விடுகின்றேன்" என்று கூறி நகர முயன்றான்.

போர்ஷியா அப்போதும் கெடுமதிபடைத்த ஷைலக்கை விடவில்லை. "பொறு ஷைலக்! பொறு! நீ

சட்டத்தின் பிடியிலே மீண்டும் சிக்கியுள்ளாய்! யாரேனும் ஓர் அந்நியன், வெளிப்படையாகவோ, அன்றி மறைமுகமாகவோ வெனிஸ் நாட்டுக் குடிமகன் ஒருவனின் உயிரைப் போக்க சூழ்ச்சி செய்ய, முற்படின், வெனிஸ் சட்டப்படி அவன் தன் சொத்தில்ஒரு பாதியை அரசாங்கத்திற்கு அபராதமாகவும், மற்றொரு பாதியை அவனால் பாதிக்கப்படவிருந்தவனுக்கும், பகிர்ந்து கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, சூது மதி கொண்ட அந்தச் சொத்திழந்த சூழ்ச்சிக்காரனின் உயிர், வெனிஸ் இறைமகனின் கருணையிலடங்கியது! ஷைலக், நான் குறிப்பிட்ட சட்டத்தின்படி, தற்போது நீ ஆபத்தில் உள்ளாய். இறைமகனை வணங்கிக் கருணைகாட்ட வேண்டிக் கொள்" என்று சட்ட விளக்கமும் அறிவுரையும் கூறினாள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி,கிரேஷியானோ ஷைலக்கை நோக்கி "வணங்கு. உன்னை நீயே தூக்கிலிட்டுக் கொள்ள உத்தரவுவேண்டி வணங்கு. அப்படிக்கூட உன்னால் செய்து கொள்ள முடியாது. நீ உன் உயிரைப் போக்கிக் கொள்ள தேவையான சிறு கயிற்றை வாங்கக்கூட பணமின்றித்தானே,உன்பூரா சொத்தும்அரசாங்கத்திற்குப் பறிமுதலாகி விட்டது. நீ சாக வேண்டுமாயின், அரசாங்கச் செலவிலேதான் உன்னைத் தூக்கிலிட வேண்டும்" என்று கடுமனத்துடன் சொன்னான்.

வெனிஸ் இறைமகனோ அந்த யூதனை நோக்கி, "உன்னிலும் நாங்கள் எவ்வளவு மாறுபட்டுள்ளோம் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டி, நீ இறைஞ்சி கேட்கும் முன்னரே, உன் உயிரை உனக்கு மன்னித்தளிக்கின்றேன். உன் சொத்தில் பாதி பங்கு அண்டோனியோவுடையதாகி விட்டது. அரசாங்கத்திற்கு அளிக்கும் உன்னுடைய மீதி பாதி

சொத்தை, நீ புரிந்த குற்றத்திற்காக அபராதத்தொகையாக மாற்றுகின்றேன்" என்று சொன்னார்.

மன அதிர்ச்சி அடைந்த ஷைலக், இறைமகனைநோக்கி "தயவு கூர்ந்து என் உயிரை என் சொத்துடன் பறித்துக் கொள்ளுங்கள். என்னை மன்னித்துப் பிழைக்க விடவேண்டாம். என் வீட்டைத் தாங்குகின்ற தூணை நீர் நீக்குகின்றபோது, என் வீடு இடிந்து, வீழ்ந்து விடாதோ! அது போன்று, நான் உயிர்வாழ ஏதுவாக உள்ள என் பூராச் சொத்தையும் நீர் பறிக்கும் போது, நான் உயிர் வாழ விடாதன்றோ தடுக்கின்றீர். ஆதலால்,வெளிப்படையாகவே என் உயிரை மாய்த்து விடும்" என்று கூறினன்.

ஷைலக்கின் பரிதாபகரமான உரையைக் கேட்டபோர்ஷியா அண்டோனியோவை நோக்கி "அண்டோனியோ நீ இந்த யூதனுக்காக ஏதேனும் இரக்கம் காட்டுகின்றாயா?" என வினவினள்.

வெறுப்புள்ளம் படைத்த கிரேஷியானோ, "ஒரு முழங்கயிறு வேண்டுமானல் இனமாகத் தரலாம். இதைத் தவிர்த்து வேறு எந்த விதமான கருணையும் இந்த யூதனுக்காகக் காட்ட முடியாது" எனருன். ஆனல் அண்டோனியோ பொறுமையுடன் "இறைமகனே அவையோரே, பெருந்தன்மையுடன் தயை கூர்ந்து ஷைலக்கிற்கு விதித்த அபராதத் தொகையாகிய அவனுடைய பாதிச் சொத்தை அவனுக்கே திருப்பித் தரும்படி வேண்டிக் கொள்கிறேன். எனக்கெனத் தீர்மானித்த அவனுடைய மற்றொரு பாதிச் சொத்தை, அவனுடைய மகளுடன் திருட்டுத்தனமாக ஓடியவனுக்கு நான் மனத் திருப்தியுடன் அளிக்கின்றேன். ஆனல், இந்த யூதன் என்னுடைய இரண்டு நிபந்தனைகட்கு உடன்படவேண்டும்.

ஒன்று: அவன் உடனே கிருத்துவனாக மாறவேண்டும். மற்றொன்று: அவன் சாகும்போது அவனிடமிருக்கும் சொத்தனைத்தும் அவனுடைய மருமகன் லோரென்சோ வுக்கும், மகள் ஜெஸ்ஸிக்காவுக்கும் தருவதாக, இந்தச் சபையிலேயே ஒரு தானச் சீட்டெழுதி, எல்லோர் முன்னிலையிலேயே கையொப்பமிட வேண்டும்." என்றான்.

அண்டோனியோவின் கருணை யுரையைக் கேட்ட வெனிஸ் இறைமகன், "ஷைலக், உன்னுடைய வார்த்தைகளின்படியே நடக்கவேண்டும். தவறின், நான் அவனுக்களித்த மன்னிப்பையும் திரும்பப் பெற்றுத் தண்டனை அளிக்க நேரிடும்" என்றான்.

குழப்ப உள்ளத்துடன் நின்றிருந்த ஷைலக்கை நோக்கி, "உனக்குத் திருப்திதானே, ஷைலக்? நிபந்தனைகட்கு நீ உடன் படுகின்றாயா?" எனக் கேட்டாள் போர்ஷியா. ஷைலக்கும் மனமொப்புதலைத் தெரிவித்தான். உடனே போர்ஷியா, அவளருகிலிருந்த குமாஸ்தாவை நோக்கி, "ஓர் உடன்படிக்கைச் சீட்டெழுது" என்று கட்டளையிட்டாள்.

ஷைலக் இறைமகனை நோக்கி, "பிரபு, தயவு செய்து என்னை இங்கிருந்து உடனே செல்ல அனுமதியுங்கள். என் உடல் நலமுற்றிருக்கவில்லை. உடன்படிக்கைச் சீட்டை என் வீட்டிற்கு அனுப்புங்கள். அங்குக் கையொப்பமிடுகிறேன்" என்று வேண்டினான்.

இறைமகனும், "சரி, நீ போகலாம். ஆனால், கவனமாக, மறுக்காது, உடன்படிக்கை பத்திரத்தில் கையொப்பமிடவேண்டும்" என்றான். ஷைலக் வெளியேற முயன்றான். அச்சமயம், கிரோஷியானோ ஷைலக்கை நோக்கி,

நீ கிருத்துவனாக மாறுவதற்கு ஞானஸ்நான தாய் தந்தைய ரான இரண்டுபேர் தேவை. ஆனால், நான் நீதிபதியாக இருந்திருந்தால், உன்னைத் தூக்குமேடைக்குக் கொண்டுவர, பன்னிரண்டு ஜூரர்கள் தேவைப்பட்டிருக்கும்." என்று வெறுப்புடன் கூறினான். ஷைலக் மனக் குழப்பத்துடன், தலை குனிந்து வெளியேறினான்.

சட்ட நுணுக்கத்தை அருமையாக விளக்கி, அண்டோனியோவின் உயிரைக் காப்பாற்றிய நியாயவாதி போர்ஷியாவை வெனிஸ் இறைமகன் விருந்துக்கழைத்தான். ஆனால், போர்ஷியா, "என்னை மன்னிக்கும்படி மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நான் இங்கிருந்து இன்றிரவே படுவாவுக்குச் சென்று வழக்கின் முடிவைத் தெரிவிக்கவேண்டும். ஆகையால், நான் இப்போதே இங்கிருந்து செல்வதுதான் முறையாகும்" என்றாள்.

போர்ஷியா படுவாவுக்குச் செல்லப் போவதை அறிந்த இறைமகன் அண்டோனியோவை நோக்கி, "அண்டோனியோ இவரை நன்கு உபசரித்து அனுப்பு. நீ இவர்க்காக மிகவும் கடமைப்பட்டுள்ளாய்" என்று கட்டளையிட்டு விட்டு போர்ஷியாவை நோக்கி, "உன் சந்தர்ப்பம் என்னுடனிருந்து விருந்துண்ண இடம் தராமைக்காக நான் மிகவும் வருந்துகின்றேன்" என்று கூறி, எழுந்து, வெளியேறினான். இறைமகனைத் தொடர்ந்து சபையிலுள்ள அனைவரும் வெளியேறினார்கள்.

பஸ்ஸானியோ நியாயவாதி வேடத்திலிருந்த போர்ஷியாவை நெருங்கி, "பேரறிவு சான்ற பெருந்தகையீர், நானும் என் நண்பனும் உம்முடைய அறிவின் திறமையால் பேராபத்திலிருந்து தப்பினோம். அதற்காக, அந்த

யூதனுக்குச் சேரவேண்டிய மூன்றுயிரம் நாணயங்களை உமக்கு வெகுமதியாக அளிக்கின்றோம்" என்று நாணயங் களிருந்த பையை நீட்டினன். அண்டோனியோவும், "அந்த நாணயங்களைவிட பலமடங்கு அன்பாலும், உழைப்பாலும் நான் தங்கட்குக் கடமை பட்டிருக்கின்றேன்'' என்றான்.

போர்ஷியாவோ, "அந்த யூதன் தண்டிக்கப்பட வேண்டிய முறையிலேயே தண்டிக்கப்பட்டுள்ளான். உங்களை நான் அவனுடைய கொடுஞ் செயலிலிருந்து தப்பிக்கச் செய்ததே எனக்கு பெரும் திருப்தி அளிக்கின் றது. நான் எந்தவித கைமாறும் கிடைக்குமென் றெண்ணி உங்கட்கு உதவி புரியவில்லை. **மீண்டும் சந்திக்கின்றபோது என்னை யார் என்று புரிந்து கொள்வீர்.** நீங்கள் நலமுற் றிருக்க நான் விரும்பி, உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்" என்று கூறி, பஸ்ஸானியோவின் பணத் தைப் பெற மறுத்துப் போக முயன்றான்.

ஆனல், "பஸ்ஸானியோ மீண்டும் அவளை நோக்கி, அன்பின் மிகுதியால் நான் மீண்டும் உங்களை வேண்டு கின்றேன். கைமாருகக் கருதாது, எங்கள் நினைவின் பொருட்டு ஏதேனும் சிறு வெகுமதியை எங்களிடமிருந்து நீங்கள் பெற்றே செல்லவேண்டும். என்னை மன்னித்து, எங்கள் வெகுமதியை ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்" என்று போர்ஷியாவை உண்மையில் அறியாது வேண்டி னன்.

"நீங்கள் என்னைத் தொந்தரவு செய்வதால் நான் உங்கட்கு உடன்படுகின்றேன்" என்று கூறி போர்ஷியா அண்டோனியோவை நோக்கி, "உன் கையுறையை எனக் குக் கொடு. உன் நினைவாக அதை நான் அணிந்துகொள் கின்றேன்" என்று அண்டோனியோவின் கையுறையைப்

பெற்றுக் கொண்டு, பஸ்ஸானியோவை நோக்கி, "உன்னுடைய அன்புக்காக, உன்னிடமுள்ள மோதிரத்தை எனக்குக் கொடுத்தால் போதும்" என்று கூறியபோது, பஸ்ஸானியோ அஞ்சி, கையைப் பின்னுக்கிழுத்தான். அதைக் கண்ட போர்ஷியா, "ஏன் உன் கையைப் பின்னுக்கிழுக்கின்றீர். அந்த மோதிரத்தைத் தவிர்த்து நான் வேறொன்றையும் கேட்கவில்லை. உன் அன்பு உண்மையாயின், நீர் எனக்கு மறுத்துரைக்க மாட்டீர் என்று நம்புகின்றேன்" என்று மிகவும் சிக்கலான நிலையை ஏற்படுத்தினாள்.

போர்ஷியா தனக்களித்த மோதிரத்தை வேறு யார்க்கும் கொடுக்கக் கூடாது என்று கட்டளையிட்டுள்ளதை எண்ணி, "இந்த மோதிரத்தையா நீர் கேட்கின்றீர்! இது மிகவும் அற்பமாயிற்றே! இதைக் கொடுக்க நானே வெட்கப்பட வேண்டாமா?" என்று தந்திரமாகக் கூறினான்.

அவன் தந்திரம் போர்ஷியாவிடம் பலிக்குமா! "எனக்கு இந்த மோதிரம் தவிர்த்து வேறெதுவும் தேவையில்லை." என்று உறுதியாகக் கூறிவிட்டாள். பஸ்ஸானியோ, "இந்த மோதிரத்தின் விலைமதிப்பு மிகவும் குறைவு. இதன் விலையைவிட இதனால் ஏற்படும் சிறுமை என்னை உமக்கு இந்த மோதிரத்தை அளிக்கத் தடை செய்கிறது. எங்கும் விளம்பரம் செய்து, வெனிஸ் நாட்டிலேயே விலைமிகுந்த நல்லதொரு மோதிரத்தை வாங்கி உமக்களிக்கின்றேன். ஆனால் இந்த மோதிரத்திற்காக என்னை மன்னித்துவிடவும்" என்று இறைஞ்சினான்.

சிக்கலேற்படுத்தி சிரிக்க எண்ணங்கொண்ட போர்ஷியா, "ஐயா, உங்களுடைய பேச்சில் தாராளம்

தொனிக்கின்றதே ஒழிய செயலில் அதைக் காண்பது அரிதாக உள்ளது. நீரே நான் யாசிக்கக் கற்றுக்கொடுத்தீர். யாசிக்கத் தொடங்கியதும். யாசகனுக்குக் கிடைக்கும் பதிலே எனக்கும் உம்மிடமிருந்து கிடைக்கின்றது" என்று சொன்னாள்.

உண்மையை மேலும் மறைக்க விரும்பாத பஸ்ஸானியோ, 'ஐயா, இந்த மோதிரம் என் மனைவியால் எனக்களிக்கப்பட்டது. அவள் இதை எக்காரணம் முன்னிட்டும், விற்கவும், இழக்கவும் கூடாது என்று கட்டளையிட்டு எனக்களித்தாள். அதனால்தான் நான் இந்த மோதிரத்தை உமக்களிக்கத் தயங்கினேன்" என்று போர்ஷியாவிடம் கூறினான்.

"இப்படிப் பேசித்தான் அநேக பெரிய மனிதர்கள் வெகுமதி அளிப்பதிலிருந்து தப்பித்துக் கொள்கின்றார்கள். உன் மனைவி சித்தசுவாதீனம் உள்ளவளாயின், நான் இந்த மோதிரத்தை விரும்பியதற்காகவும் நீ எனக்கு அதைக் கொடுத்ததற்காவும் உன்னை எப்போதும் பகைக்க மாட்டாள். சரி, அதை நீரே வைத்துக் கொள்ளும்" என்று கூறி விட்டு நெரிஸ்ஸாவுடன், போர்ஷியா அவையினின்றும் வெளியேறினாள்.

பின்பு அண்டோனியோ பஸ்ஸானியோவிடம், "நண்பனே, அந்த நியாயவாதி உன் மோதிரத்தைப் பெற்றுக் கொள்ள உதவு. அவருடைய விருப்பத்தையும், என் அன்பையும் உன் மனைவியின் கட்டளையோடு ஒப்பிட்டுப்பார். அப்போது எது உயர்ந்ததென்று நீ அறிவாய்" என்றான்.

அண்டோனியோவின் உரையைக் கேட்ட பஸ்ஸானியோ, அருகிலிருந்த கிரேஷியானோவை நோக்கி, "கிரே

ஷியானோ, இந்த மோதிரத்தை அந்த நியாயவாதியிடம் கொடுத்து விடு. சீக்கிரம் போ. முடியுமானால் அவரை அண்டோனியோவின் வீட்டிற்கழைத்துவா. சீக்கிரம் செல்" என்று கூறி அவனிடம் மோதிரத்தைக் கொடுத்தனுப்பினான். கிரேஷியானோ மோதிரத்துடன் ஓடினான். பின்பு, பஸ்ஸானியோ, அண்டோனியோவை நோக்கி, "நாமும் அவனைத் தொடர்வோம். நாளை காலைக்குள் நாம் இருவரும் பெல்மாண்ட் நகர்க்குச் செல்ல வேண்டும்" என்று கூறி அண்டோனியோவை அழைத்துக் கொண்டு கிரேஷினோ ஓடிய இடம் நோக்கி நடந்தான்.

நீதி மன்றத்தை விட்டு வெளியேறிய போர்ஷியா நெரிஸ்ஸாவுடன் வெனிஸ் நகரத் தெருவொன்றில் நின்று. நெரிஸ்ஸாவை நோக்கி, யூதன் வீட்டை விசாரித்து, அவனிடம் இந்தப் பத்திரத்தைக் காட்டி கையொப்பம் பெற்றுக் கொள். நாம் இன்றிரவே வீட்டிற்குச் செல்ல வேண்டும். நம் கணவன்மார்கள் திரும்புவதற்கு ஒரு நாள் முன்னதாகவே நாம் பெல்மாண்ட் சேர்ந்து விட வேண்டும் இந்தத் தானச் சீட்டு லோரென்சோவுக்கு மகிழ்ச்சி அளிக்கும்" என்றாள். அச்சமயம் கிரேஷியானோ போர்ஷியாவிடம் வந்து, "பேரறிவு படைத்த ஐயா, என் நண்பர் பஸ்ஸானியோ, அண்டோனியோவின் அறிவுரையால் இந்த மோதிரத்தை உமக்களிக்க என்னை அனுப்பியுள்ளார். இதைப் பெற்றுக் கொண்டு, விருந்துக்கு அவசியம் தங்களை வரச் சொன்னார்" என்று சொல்லி மோதிரத்தைப் போர்ஷியாவிடம் கொடுத்தான்.

"நான் இந்த மோதிரத்தை நன்றியுடன் பெற்றுக் கொண்டதாகச் சொல். நான் இன்று இப்போது விருந்துக்கு வரமுடியாது. மேலும் என் குமாஸ்தாவுக்கு,

ஷைலக் வீட்டை காட்டு" என்று கூறி மோதிரத்தை கிரேஷியானோ விடமிருந்து போர்ஷியா பெற்றுக் கொண்டாள்.

"அப்படியே செய்கின்றேன்" என்றான் கிரேஷியானோ.

"நான் உம்மிடம் தனியாகப் பேச வேண்டும்" என்று கூறிப் போர்ஷியாரைத் தனியே அழைத்து நெரிஸ்ஸா, "உம்மைப் போன்று நானும் என் கணவர் கிரேஷியானோ விடமிருந்து நான் அளித்த மோதிரத்தைத் திரும்பப் பெற முயற்சிக்கின்றேன்" என்றாள்.

போர்ஷியாவும் தனியேபோய் கிரேஷியானோ கேளாத படி. "உன்னால் முடியுமாயின் முயற்சி. செய் ஆனால், எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் நம்முடைய மோதிரங்களை உறுதி தவறி இழந்ததற்காக நாம் அவர்களைப் பின்பு வெட்கப் படச் செய்வோம்" என்று கூறிவிட்டுப்பின்பு கிரேஷியானோவுக்கும் கேட்கும்படி உரத்த குரலில், "சரி, நீ சீக்கிரம் சென்று நான் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர். நான் உனக்காக அங்குக் காத்திருப்பேன்" என்று கூறிச் சென்றாள்.

நெரிஸ்ஸாவும் கிரேஷியானோவும் ஷைலக் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

---

# 16. மோதிரம் விளைத்த முடிவு

பெல் மாண்ட் நகரில் போர்ஷியாவின் மாளிகையிலி ருந்த லோரென்சோவும் ஜெஸ்ஸிக்காவும் நிலவொளியில் மாளிகைத் தோட்டத்தில் அமர்ந்து களிப்புற்றிருந்தார்கள். அச்சமயம்லோரென்சோ, ஜெஸ்ஸிக்காவை நோக்கி, "ஜெஸ் ஸிக்கா, நிலவு எவ்வளவு வெண்மையாக ஒளிக்கின்றது, பார். மரங்களை முத்தமிட்டுச் சலனமின்றி இலைகளை அசைக்கும் இனியகாற்று வீசும் இன்று போன்றொரு நாள் இரவில்தான் **ட்ராய்லஸ்** என்பவன் **ட்ரோயன்** நகர் மதில் சுவர்கள் மீதேறி, அவனின் உள்ளத்தைக் கவர்ந்த **கிரேஸ்ஸிட்** அழகி துயின்ற கிரேக்க கூடாரங்களைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான்" என்றான்.

ஜெஸ்ஸிக்கா, "இதே போன்ற இரவில்தானே பனி படர்ந்த வழியில் நடுக்கமுடன் காதலனைச் சந்திக்கச் சென்ற **திஸ்பி** என்னும் பாபிலோனிய கன்னி காட்டில் சிங் கத்தைக் கண்டு ஓடினது!" என்றாள்.

நிலவொளியின் இன்பத்தை அள்ளிப் பருக எண்ணிய லோரென்சோ, "கார்தேஜ் அரசி என்பன்**ை டடோ** அவரிச் செடி போன்ற **வில்லோ** செடியின் இலைக் கொத்தை கையில் பிடித்து கடற்கரையில் நின்று, தன் காதலனுக்குச் சைகை காட்டி, தானிருக்கும் நகரான கார்தேஜூக்கு வரச் சொன் னதும், இது போன்ற ஓர் இரவில்தானே!" என்றான் ஜெஸ்ஸிக்காவை நோக்கி.

ஜெஸ்ஸிக்கா, தான் லோரென்சோவுக்குச் சளைத்த வளல்லள் என்று காட்டிக் கொள்ளக் கருதி, "சில மாந்திரீக

மூண்டுகளின் உதவியால், ஜேசனின் கிழத் தந்தையை, மேடியா, வாலிபனாக மாற்றியது இதே போன்றதோர் இரவில் தானே!" என்றாள்.

லோரென்சோ அவளைப் பின் பற்றி, "இதே போன்றதோர் இரவில்தான் ஜெஸ்ஸிக்கா அவளின் தந்தையின் செல்வத்தைத் திருடி எடுத்துக் கொண்டு எளிய ஏழைக் காதலனுடன் வெனிஸிலிருந்து பெல்மாண்ட் வரை ஓடியது" என்றான்.

தன்னைத் திருடி என்று கூறி கேலி செய்த லோரென்சோவையையும் அதே முறையில் கேலி செய்ய எண்ணிய ஜெஸ்ஸிக்கா, "இது போன்றதோர் இரவிலன்றோ பொய்மை மிக்க சத்தியங்களால் இளைஞனை லோரென்சோ அவனின் காதலியின் உள்ளத்தைத் திருடினான்" என்றாள்.

ஆனால் லோரென்சோ, "இது போன்ற தோர் இரவில்தான் அழகி ஜெஸ்ஸிக்கா, அவளுடைய காதலனை நிந்தித்துப் பேசியும், அவன் அதைப் பொருட் படுத்தாது மன்னித்தது" என்றான்.

இப்படியாக நிலவொளியில் அமர்ந்து லோரென்சோவும் ஜெஸ்ஸிக்காவும் கேலியாகவும், உல்லாசமாகவும் பேசிக் கொண்டிருந்த போது யாரோ வரும் காலடி சத்தம் கேட்டது. அப்போது லோரென்சோ, "இந்நேரத்தில் இவ்வளவு வேகமாக வருவது யார்?" எனக் கேட்டான். "நான் தான். ஸ்டீபனோ" என்று போர்ஷியாவின் வேலையாட்களிலொருவனான ஸ்டீபனோ என்பான் லோரென்சோ அருகடைந்து, "என் எஜமானி நாளை காலை உதயத்திற்குள் இங்கு வருவார்கள். அந்த அம்மை மகிழ்ச்சியளிக்கக்

கூடிய திருமண நேரத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண் டிருக்கிறார்கள்" என்றான்.

"அவருடன் யார் வருவது?" எனக் கேட்டான் லோரென்சோ.

"ஒரு துறவியும், நெரிஸ்ஸாவும் வருகிறார்கள். என் எஜமானன் பஸ்ஸானியோ இங்குத் திரும்பி வந்துவிட் டாரா?" எனக் கேட்டான் ஸ்டீபனோ.

"அவர் இன்னும் வரவில்லை. அவரிடமிருந்து எச் செய்தியும் இன்னும் கிடைக்கவில்லை" என்று லோரென்சோ ஸ்டீபனோவிடம் கூறிவிட்டு, ஜெஸ்ஸிக்காவை நோக்கி, "ஜெஸ்ஸிக்கா, நாம் போர்ஷியாவின் வருகையை முன் னிட்டு சில ஏற்பாடுகள் செய்யவேண்டும் ஆகையால், மாளிகையினுள்ளே செல்வோம், வா" என்று கூறி அழைத்தான்.

அச்சமயம் லான்ஸ்லாட் "ஆ! ஊ!" என்று பேரொலி எழுப்பிக்கொண்டு தோட்டத்தினுள் நுழைந்தான். அவ னைக் கண்ட லோரென்சோ, "ஏன் இப்படிக் கத்திக் கொண்டு வருகிறாய். என்ன செய்தி கொணர்ந்துள்ளாய்" என்று கேட்டான்.

"பஸ்ஸானியோ, நாளைக் காலை இங்கு வருவதைத் தெரிவிக்கும் செய்தி கொண்டு வந்துள்ளான் ஒரு தூதன்" என்றான் லான்ஸ்லாட்.

போர்ஷியாவும், பஸ்ஸானியோவும் வரும் செய்தி யைக் கேள்வியுற்ற லோரென்சோ ஜெஸ்ஸிக்காவை நோக்கி, "நாம் வரவேற்பு ஏற்பாடு செய்ய உள்ளே செல் வோமா?" என்று கேட்டான். உடனே, நிலவொளியி லிருந்து இன்பமனுபவிப்பதை விட்டு மாளிகையினுள்ளே

செல்ல மனமின்றி, ஸ்டீபனோவை நோக்கி, "நீ உள்ளே சென்று எஜமானியையும், எஜமானரையும் வரவேற்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, இசைவாணர்களை மாளிகை வெளியில் இசை வாத்தியம் முழக்கச் சொல்" என்று கூறினான். ஸ்டீபனோ உள்ளே சென்றான். பின்பு ஜெஸ்ஸிக்காவை நோக்கி லோரென்சோ, "இந்தத் தரை மீது விழும் நிலவொளி எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறது பார். நாம் இங்கே அமர்ந்து இரவின் அமைதியிலே இசையொலியை செவிமடுப்போம். "ஜெஸ்ஸிக்கா, நெருங்கி அமர். தங்கத் தட்டுபபோன்ற ஆகாய திரையிலிருக்கும் நட்சத்திரங்களைப் பார். அவை ஒவ்வொன்றும், அசைவின்போது தேவதைகள் பாடுவன போன்று காட்சி அளிப்பதைப் பார். அழியா ஆத்மா ஒவ்வொன்றிலும் இசை உள்ளது. அழியும் உடலுள் அழியா ஆத்மா இருக்கும்வரை அதனுள் இருக்கும் இசையைக் கேட்கமுடியாது" என்று கூறிக்கொண்டிருந்தான். அச்சமயம் இசைவாணர்கள் அவனை அடைந்தார்கள். அவர்களை நோக்கி, "வாருங்கள். நிலவுத் தேவதையான டையானாவைத் துயில் நீக்கிப் பாடுங்கள். நீங்கள் பாடும் இசை நம் எஜமானி போர்ஷியாவின் காதுகளைத் துளைத்து அவரை இங்கு வரச் செய்ய வேண்டும்" என்று இனிய இசையைப் பாடச் சொன்னான், லோரென்சோ. ஆனால், ஜெஸ்ஸிக்கா, இன்னிசை அவளுக்குப் பிடிக்காது என்று கூறினாள்.

அதைக் கேட்ட லோரென்சோ ஜெஸ்ஸிக்காவை நோக்கி, "நீ இன்னிசையை விரும்பாத காரணம், நீ அவ்விசையிலேயே உன்னை மறந்து உன் உள்ளத்தைப் புதைத்துவிடுகின்றாய். கொடிய பசுக் கூட்டமும், முரட்டுக் குதிரைக் குட்டிகளும், இசையொலியைக் காதுகள் வழியாகக் கேட்ட

வுடன் அவை தம் கொடிய பார்வை குளிர்ந்து நிற்பதை நீ பார்க்கலாம். இசைக்குக் காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்தும் சக்தியும் உண்டு. இசைக்கு இளகாத கொடுங்குணம் படைத்த பொருள் எதுமில்லாத காரணத்தால்தான் போலும், ஓர்பெயஸின் என்பவனின் இசையை மரங்களும், கற்களும், வெள்ளமும் கவனித்தன என்று ஓவிட் என்னும் கவிஞன் எழுதியுள்ளான் என்று எண்ணுகின்றேன். இசையை உணர்ந்து புகழாத மனிதன், துரோகச்செயல்கள் புரிவதற்கும், தீய திட்டங்கள் வகுப்பதற்கும், கொள்ளையடிப்பதற்கும்தான் தகுதியுடையவன். அவனுடைய ஆத்மா இரவின் சோகத்தைப் போன்றும், அவனுடைய ஆசைகள் இருள் நிறைந்துமிருக்கும். அத்தகைய மனிதன் ஆபத்து விளைவிக்கக் கூடியவன்" என்று சொல்லிக்கொண்டே, அச்சமயம் இசைவாணர்களால் எழுப்பிய நல்லிசையை ரசிகக ஜெஸ்ஸிக்காவுக்குக் கூறினன்.

லோரென்சோவும், ஜெஸ்ஸிக்காவும் தோட்டத்தில் அமர்ந்து நிலவொளியில் இன்பமாகப் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், போர்ஷியாவும், நெரிஸ்ஸாவும் வந்தார்கள். அப்போது போர்ஷியா முற்றத்துள் எரிந்துகொண்டிருந்த மெழுகுவத்தி ஒளியைச் சுட்டி, "நெரிஸ்ஸா அதோ, முற்றததில் எரிகின்ற அந்த மெழுகுவத்தியின் ஒளி எவ்வளவுதூரம் பரவுகின்றது பார். அதுபோன்றுதான், இந்தத் துன்மார்க்க உலகில் செய்யப்படுகின்ற ஒவ்வொரு நற்காரியமும் பிரகாசிக்கும்" என்று நெரிஸ்ஸாவிடம் கூறினள்.

"நிலவொளி அதிகமாயின், மெழுகுவத்தியின் ஒளியை நாம் பார்க்க மாட்டோம் அல்லவா?" என வினவினுள், நெரிஸ்ஸா.

"ஆம். அப்படியேதான், பெரும் புகழ். சிறு புகழை மறைக்கும். மன்னனில்லாத நேரத்தில் மன்னனிடத்தில் அமர்ந்து நாடாளும் அவன் பிரதிநிதி மன்னன் திரும்பியவுடன், நதி கடலில் கலப்பதுபோன்று, மன்னனின் அதிகாரத்திற்குட்பட்டவனாக மாறி விடுவது வழக்கமன்றோ" என்று போர்ஷியா கூறினாள்.

அச்சமயம் மாளிகை வெளியில் லோரென்சோவால் கட்டளையிடப்பட்டபடி இசை முழங்கிக் கொண்டிருந்தது. அதைக் கேட்ட நெரிஸ்ஸா, போர்ஷியாவுக்கு இசை முழக்கத்தை அறிவித்து அவ்விசை பகலில் கேட்பதைவிட இரவில் அமைதியாக உள்ளதாகக் கூறினாள்.

"காகம் கரைவதையும், வானம்பாடி பாடுவதையும் கவனிக்க யாருமில்லையேல் இரண்டும் இசையே. நன்றாகப் பாடுவதாகக் கூறப்படும் இராக் குருவி, சிறு குருவிபோல் பகலில் பாடுமேயாயின் அதன் இசைக்கு மதிப்பேது! நம் சூழ்நிலையைப் பொறுத்தும், நம் மன நிலையைப் பொறுத்தும், நாம் எதையும் மதிப்பிடுகின்றோம்" என்று போர்ஷியா இசையின் தன்மையைப் பற்றி, நெரிஸ்ஸாவுக்குச் சொல்லிவிட்டு, இசைவாணர்களை நோக்கி வாத்திய ஒலியை நிறுத்தக் கட்டளையிட்டாள்.

போர்ஷியாவின் குரலைக் கேட்ட லோரென்சோ ஓடி வந்து அவளை வரவேற்றான். அவனை நோக்கி, "எம் கணவர் திரும்பி விட்டனரோ?" எனப் போர்ஷியா கேட்டாள். "இல்லை. நீங்கள் வருவதற்குமுன் இங்கு ஒரு தூதன் வந்து, அவர்கள் வந்துகொண்டிருப்பதாகத் தெரிவித்துச் சென்றான்" என்று லோரென்சோ விடையளித்தான்.

பஸ்ஸானியோவின் வருகையை அறிந்த போர்ஷியா, நெரிஸ்ஸாவை நோக்கி அவர்கள் வருகையை வேலையாட்க

ளுக்கு அறிவித்து விழிப்பாக இருக்கச் செய்ய கட்டளை யிட்டாள். அச்சமயம் எக்காளம் முழங்கியது. அதைக் கேட்ட லோரென்சோ, "அம்மணி நம் கணவர் வருகின் ரூர்" என்று கூறினன்.

"இந்த இரவு எனக்குக் குழப்பமாகவும் மந்தமாகவு மிருக்கிறது. சூரியன் மறைக்கப்பட்ட நாள் போன்றுள் ளது, இந்த விடியற்காலை நேரம்" என்று இளங்கதிரோன் உதயமாகும் நேரத்தை போர்ஷியா, லோரென்சோவிடம் வர்ணித்துக் கூறினள்.

அச்சமயம், பஸ்ஸானியோ, அண்டோனியோ, கிரே ஷியானே, மற்றவர்களுடனும் படைத் துணைவர்களுடனும் வந்தனர். போர்ஷியாவைக் கண்ட பஸ்ஸானியோ, "போர் ஷியா, நீ இரவில் உலவினல், உன் அழகின் ஒளி இருளை யும்விலக்கி, நாம் உலகில் எதிர் பாகத்தில் இந்நேரம் மக்கள் பகலைக் காண்பதுபோன்று, இங்கும் காணமுடியும்" என்று அவளின் பெருமையைப் புகழ்ந்து கூறினன்.

"இருளுக்கு நான் ஒளியாக வேணுமாயின் உடன்படு வேன். ஆனல் ஒளிபோனறு நான் எளிமையாக இருந்து உனக்கு இன்னல் கொடுக்க விரும்பவில்லை. அன்பு மிக்கீர், உம் வரவு நல்வரவாகட்டும்" என்று கூறி போர்ஷியா பஸ் ஸானியோவை வரவேற்ருள்.

"என்னை வரவேற்று உபசரிப்பதற்காக நான் நன்றி செலுத்துகின்றேன். இதோ, என் அருகில் இருக்கும் இவர்தான், நான் மிகவும் கடமைப்பட்டுள்ள, என் பேரன்பு மிக்க நண்பர், அண்டோனியோ" என்று அண் டோனியோவைப் போர்ஷியாவுக்குப் பஸ்ஸானியோ அறி முகம் செய்து வைத்தான்.

"அவர் உனக்காக உயிரையே இழக்கத் துணிந்த போது, நீ அவர்க்கு எல்லாவிதத்திலும் கடன்பட்டிருக்கிருய்" என்று பஸ்ஸானியோவிடம் போர்ஷியா கூறினுள்.

தான் உயிரை இழக்க வேண்டிய அவசியம் நீங்கிவிட்டதை வெளிப்படுத்த அண்டோனியோ, "நான் அத்தகைய பேராபத்திலிருந்து விடுவிக்கப்பட்டேன்" என்று போர்ஷியாவிடம் கூறினுன்.

உடனே போர்ஷியா அண்டோனியோவை நோக்கி, "ஐயா, உம் வரவு எங்கட்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது. வாயுரையால் வரவேற்பதைவிட செயலில் இனிது உபசரித்திட நான் எண்ணியிருப்பதால், அதிகமாக உம்மைப் புகழ்ந்து வரவேற்க விரும்பவில்லை" என்று கூறினுள்.

போர்ஷயா அண்டோனியோவை வர வேற்றுக் கொண்டிருந்த நேரத்தில் கிரேஷியானே கைவிரலில் நெரிஸ்ஸா அளித்த மோதிரம் காணுததால் அவள் அவனேக் கடிந்து கொண்டாள். அதனுல் கிரேஷியானே "நிலவின்மீது ஆணேயிட்டுக் கூறுகின்றேன். என்னேத் தவருகப் புரிந்து கொள்ளவேண்டாம். நான், நீ எனக்களித்த மோதிரத்தை சட்ட நிபுணரின் குமாஸ்தாவுக்குத்தான் இனுமாகக் கொடுத்தேன்" என்று நெரிஸ்ஸாவிடம் கூறினுன். அதைக் கேட்டுக் கொண்டிருந்த போர்ஷியா, "ஓ இதற்குள் சண்டை ஆரம்பமாகி விட்டதோ! என்ன சண்டை?" என்று கிரேஷியானேவை வினவினுள்.

"ஓர் அற்ப தங்கத்துண்டு—ஒரு சிறு மோதிரம் எங்கள் சண்டைக்குக் காரணமாகின்றது. கத்திச் செய்வோன் கத்தியின் மேல் "என்னேக் காதலித்துப் பிரியாதே"

என்று காதல் கவிதை செதுக்குவது போன்று ஏதோ காதல்மொழி செதுக்கப்பட்ட ஒரு சிறு மோதிரத்தைப் பற்றி என்னிடம் நெரிஸ்ஸா சண்டை விளைவிக்கின்றாள்" என்று மோதிரத்தை அற்பமாகக் கூறி, அதைத் தான் வெனிஸ் நகரில் நியாயவாதியின் குமஸ்தாவுக்குக் கொடுத்து விட்டதற்காக நெரிஸ்ஸா பூசல் விளைவிப்பதைக் கிரேஷியானோ, போர்ஷியாவிடம் கூறினான்.

கிரேஷியானோவின் வார்த்தையைக் கேட்ட நெரிஸ்ஸா அவனை நோக்கி, "நீ மோதிரத்தின் மதிப்பையும், அதனுள் செதுக்கப்பட்டிருந்த காதல்மொழியையும் ஏன் பேசுகின்றாய்? நான் அந்த மோதிரத்தை உனக்கு அளித்த போது நீ சாகும் நேரம்வரை அதை உன் கைவிரலிலேயே போட்டிருப்பதாக என்னிடம் சத்தியம் செய்யவில்லையா? நீ எனக்காக அந்த மோதிரத்தைக் காப்பாற்றாவிடினும், உன் உறுதிமொழிக்காகவாகிலும், நீ அதைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டாமா? அதை ஒரு சட்ட நிபுணர் குமாஸ்தாவுக்கு இனமாகக் கொடுத்ததாகக் கூறுகின்றாய். உண்மையில், நீ, அதை ஒரு பெண்ணுக்கு கொடுத்துள்ளாய்!" என்று கூறினாள்.

"இல்லை, நெரிஸ்ஸா நான் ஒரு மீசை முளைக்காத உன் உயரமேயான ஓர் இளைஞனுக்குத்தான் உன் மோதிரத்தை இனமாக அளித்தேன்" என்று கிரேஷியானோ கூறினான்.

போர்ஷியா கிரேஷியானோவை நோக்கி, "நீ பெருந் தவறு செய்திருக்கின்றாய், என்று வெளிப்படையாகக் கூறுகின்றேன். வாக்குறுதிகளின் பேரில் உன் மனைவி தந்த முதல் பரிசை நீ எப்படி இழக்கலாம்? அந்தப் பரிசு உன் உடற் சதையோடு இணைந்திருந்திருந்ததன்றோ! நான்

கூட என் காதலனுக்கு ஒரு மோதிரத்தை அளித்து அதை அவர் எப்போதும் தவறவிடக் கூடாது என்று கூறினேன். அவரும் அப்படியே உறுதிமொழி அளித்தார். இதோ, அவர் இங்கே நிற்கின்றார். அதை அவர் விரலிலிருந்து நழுவ விடமாட்டார். உண்மையாகச் சொல்லுகின்றேன்: கிரேஷியானோ நீ தவறு புரிந்து உன் மனைவியைத் தொல்லைக்கு ஆளாக்கியுள்ளாய்" என்று கூறினாள்.

போர்ஷியா கிரேஷியானோவை கடிந்து கொண்ட முறையைக் கவனித்த பஸ்ஸானியோ, தனிமையில் தனக்குத்தானே, "என் இடக் கையை வெட்டிக் கொண்டாலுமேனும், நான் மோதிரம் இழந்ததைப்பற்றியும், என் உறுதிமொழியைப்பற்றியும், எக்கேள்வியும் எழாது போலிருக்கின்றது!" என்று கூறிக் கொண்டான்.

அச்சமயம் கிரேஷியானோ, "என் எஜமானன், சட்ட நிபுணர்க்கு அவர் மோதிரத்தை அளித்தார். அந்தச் சட்ட நிபுணர் குமாஸ்தாவுக்கு, நான், என் மோதிரத்தைக் கொடுத்தேன். யாசித்தவர்க்கு மறுப்பின்றி அளிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதால் நாங்கள் எங்கள் மோதிரங்களை அளித்தோம்" என்று கூறினான்.

பஸ்ஸானியோவும் மோதிரத்தை தவறவிட்டார் என்று கிரேஷியானோ கூறக் கேட்ட போர்ஷியா, ஏதுமறியாதவள் போன்று பாசாங்கு புரிந்து, பஸ்ஸானியோவை நோக்கி, "எந்த மோதிரத்தை கொடுத்தீர்? நான் கொடுத்த மோதிரத்தை நீர் அளித்திருக்க மாட்டீர் என்று நினைக்கின்றேன்" என்றாள்.

"போர்ஷியா, நான் பொய்யுரைக்க முடியும். ஆனால் அப்படிச் செய்ய விரும்பவில்லை. என் விரலில் கூட

மோதிரமில்லை" என்று வெளிப்படையாகப் பஸ்ஸானியோ கூறினன்.

"உம்உள்ளத்திலே தூய்மை காண வில்லை. நான் மீண் டும் என் மோதிரத்தைக் காண்கின்றவரை உன்மனை வியாக இருக்க முடியாது" என்று போர்ஷியா கோபங் கொண்ட வள் போன்று நடித்துக் கூறினள். நெரிஸ்ஸாவும் போர் ஷியா கூறியது போன்று கிரேஷியானோவிடம் கூறினள்.

"போர்ஷியாவின் கோபத்தைக் கண்ட பஸ்ஸானியோ அவளை அன்புடன் நோக்கி, "போர்ஷியா, என் இதய ராணியே, நீ எனக்களித்த மோதிரத்தை நான் யார்க்குக் கொடுத்தேன், யார்க்காக கொடுத்தேன், எதற்காகக் கொடுத் தேன் என்பவற்றையும், உன் மோதிரத்தைத் தவிர்த்து வேறெதையும் விரும்பாத போது அந்த மோதிரத்தை நான் எத்தகைய வேதனை யுள்ளத்துடன் கொடுத்தேன் என்பதையும் நீ அறியின் என் மீது இவ்வளவு கோபப்பட மாட்டாய்" என்று சமாதானம் கூறினன்.

நீ அந்த மோதிரத்தின் தன்மையை உணர்ந்திருப்பின் அல்லது அந்த மோதிரத்தை உனக்களித்தவளின் உண்மை மதிப்பில் பாதியளவேனும் அறிந்திருப்பின், அல்லது நீ அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பைத் தெரிந்திருப் பின், அந்த மோதிரத்தை யார்க்கும் எக்காரணத்தை முன் னிட்டும் அளித்திருக்க மாட்டாய். நீ ஒரு பொருளை உண் மையாகக் காப்பாற்றி வைத்திருக்க வேண்டிய பொறுப்பிலி ருப்பின், அப்பொருளின் புனிதத் தன்மையையும், முக்கியத் துவத்தையும் விளக்கிக் கூறியிருக்க வேண்டும். அப்படிப் பட்ட உன் விளக்கத்தின் பிறகும் அந்தப் பொருளையாசிக்கக் கூடிய மனிதன் எவனும் இந்த உலகத்திலிருக்க மாட்டான். இதைப் பற்றி நான் என்ன நினைக்க வேண்டும் என்பதை

தனக்கு நெரிஸ்ஸா கற்றுக் கொடுத்திருக்கிறாள். என் மோதிரத்தை நீ யாரோ ஒருத்திக்குப் பரிசாகத் தந்துள்ளாய் என்ற சந்தேகத்திற்கு இடந்தரா திருப்பதைக் காட்டிலும் நான் மரணமடைவதே மேல்" என்று பஸ்ஸானியோவிடம் கடுகடுப்புடன் போர்ஷியா கூறினாள்.

போர்ஷியாவின் சந்தேகத்தை அறிந்த பஸ்ஸானியோ, 'போர்ஷியா, சத்தியமாகச் சொல்கின்றேன்: நான் எந்தப் பெண்ணுக்கும் உன் மோதிரத்தைக் கொடுக்க வில்லை. என் உண்மையான காதல் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன் நான் உன் மோதிரத்தை ஒரு சட்ட நிபுணர்க்குத் தான் பரிசாகத் தான் தந்தேன். என் இதயராணி, மூன்றாயிரப் பொன் நாணயங்களை நான் அவர்க்குக் கொடுத்தேன. ஆனால், அவர் மறுத்து உன் மோதிரத்தையே யாசித்தார் நான் கொடுக்கப் பின் வாங்கி, அவர் மனம் வருந்திச் செல்ல விட்டேன். அவர் யார் தெரியுமா? அவர் தான் என அருமையான நண்பரின் உயிரைக் காப்பாற்றியவர்! அவர்க்குக் கூட நான் உன் மோதிரத்தை முதலில் இனமாகத்தர மறுத்தேன். போர்ஷியா, நான் அந்த மோதிரத்தை அவருக்குக் கொடுத்தனுப்ப கட்டாயப் படுத்தப் பட்டேன், பேருதவி செய்தவர் விரும்பியதைத் தர மறுக்கும் என் நன்றி கெட்ட தனத்தையும். என்னுடைய நேர்மைக்குக் களங்க மேற்பட்டதையும் நான் அறியச் செய்து, உன் மோதிரத்தை என் நண்பன் உயிரை மீட்டவர்க்குப் பரிசா அளிக்கக் கட்டாயப் படுத்தப் பட்டேன், ஆரணங்கே சூழ்நிலையை எண்ணி, என்னை மன்னித்து விடு.ஏன், நீ கூட என்னுடன் அச்சமயம் இருந்திருப்பாயாயின்,என் மோதிரத்தை அந்தப் பேருபகாரம் புரிந்த சட்ட நிபுணர்க்குத் தந்திட என்னைக் கட்டாயப் படுத்தியிருப்பாய் என்று விண்ணிலே

உள்ள நட்சத்திரங்களின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்" என்று பரிதாபத்துடன், விளக்கமாகக் கூறினன்.

"என் மோதிரத்தைப் பெற்ற அந்தச் சட்ட நிபுணர் இங்கு எப்போதும் வராதபடி பார்த்துக் கொள். நீ என் மோதிரத்தை அவர்க்குக் கொடுப்பதில் எவ்வளவு உண்மையற்ற வராக மாறினயோ, அவ்வளவு தாராளமாக நானும் இனி மாறியிருப்பேன். அவர் விரும்புவதெதையும் நானும் மறுக்காமல் தாராளமாகத் தந்திடுவேன். இனி இவ்விடத்தை விட்டு அகலாது என்னையே கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படியின்றி, என்னைத் தனியாக விட்டுச் செல்லின் அந்தச் சட்ட நிபுணர் இங்கு வர நேரிட்டால், நான் அவரை என் படுக்கையறைத் தோழனக ஏற்றுக் கொள்வேன் என்று உண்மையாகக் கூறுகின்றேன்" என்று கேலியாக, பஸ்ஸானியோவின் மனதை வருத்தும் நோக்கத்தால், மொழிந்தாள், போர்ஷியா.

நெரிஸ்ஸாவும், போர்ஷியாவைப் போன்றே, அந்தச் சட்ட நிபுணரின் குமாஸ்தா அவள் தனியாக இருக்கும் போது வந்து சந்தித்தால் அவனை, அவள் கணவனக அங்கீகரித்துக் கொள்வதாகக் கூறினள்.

கணவன் மனைவிமார்கள் சச்சரவைக் கண்ட அண்டோனியோ உள்ளத்தில் வேதனையுடன் "என்னலன்ருே இவ்வளவு விபரீத விளைவுகளும்!" என்று தனக்குத்தானே, எல்லோர் காதுகளிலும் விழும்படி கூறிக்கொண்டான்.

அண்டோனியோவின் வார்த்தையைக் கேட்ட போர்ஷியா, "நீர் உம்மை வருத்திக் கொள்ள வேண்டாம். உம்மை நாங்கள் முழுமனதுடன் வரவேற்கின்ருேம்" என்று கூறித்தேற்றினள்.

பஸ்ஸானியோவும் போர்ஷியாவை நோக்கி, "போர் ஷியா, கட்டாயத்தின் பேரில் நிகழ்ந்த இந்தத் தவறை மன் னித்து விடு. என் நண்பர்களின் முன்னே, என் உருவத்தை உள்ளடக்கியுள்ள உன் கண்களின் மீது ஆணையிட்டுக் கூறு கின்றேன்; இனி இத்தகைய தவறுக்கு இடமிருக்காது" என்று உறுதி மொழி தந்தான்.

பஸ்ஸானியோவின் உறுதி மொழியைக் கேலி செய்ய எண்ணிய போர்ஷியா, "நீ என் இரு கண்களிலும் உன்னைப் போன்று இரண்டு உருவங்களைப் பார்க்கின்றாய். இரட்டை உருவத்தைக் காட்டி நீ இடும் ஆணையும் இரட்டைத்தன்மை பொருந்தியதாகும்" என்று கூறினான்.

ஆனால் பஸ்ஸானியோ "இல்லை போர்ஷியா. என்னை நம்பு. என் உயிர் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இந் தத் தவறை மன்னித்து விடு. இனி உன் உறுதி மொழி தவறாது நடந்து கொள்கின்றேன்" என்று தெளிவாகக் கூறி னான்.

பஸ்ஸானியோவைத் தொடர்ந்து அண்டோனியோ வும் போர்ஷியாவை நோக்கி "முன்னொரு தடவை பஸ்ஸா னியோவின் நன்மையின் பொருட்டு என் உடலை அடகு வைத்தேன். அதை மீட்கும் பணியில், உன் கணவனின் மோதிரம் தவறி விட்டது. மீண்டும் நான் அவனுக்காக என் உயிரை உன்னிடம் அடகு வைத்துக் கூறுகின்றேன்: இனியொரு தடவை உன் கணவன் உனக்களிக்கும் உறுதி மொழியிலிருந்து தவறமாட்டான்" என்று கூறினான்.

"நீர் பொறுப்பாக இருப்பதாகக் கூறுவதால், இந்த மோதிரத்தைக் கொடுத்து அணிந்து கொள்ளச் செய்யுங் கள். இதை முன்னொன்று இழந்ததைப் போன்று இழ

காது கவனமுடன் காப்பாற்றச் சொல்லுங்கள்" என்று போர்ஷியா ஒரு மோதிரத்தை அண்டோனியோவிடம் கொடுத்தாள். அண்டோனியோ அந்த மோதிரத்தைப் பஸ்ஸானியோவிடம் கொடுத்து, "இதை இனி இழப்ப தில்லை என்ற உறுதியுடன் அணிந்து கொள்" என்று கூறி ஞன். போர்ஷியாவின் மோதிரத்தைப் பார்த்த பஸ்ஸானி யோ ஆச்சரியமுடன் "நான் சட்ட நிபுணருக்குக் கொடுத்த அதே மோதிரம்தான் இந்த மோதிரம்!" என்று கூறிப்போர் ஷியாவின் முகத்தை நோக்கினன்.

"ஆம் இந்த மோதிரம் நான் பஸ்ஸானியோவுக்கு முதன் முதலில் கொடுத்த மோதிரமேதான்! இதைக் கேட் கும் நீங்கள் ஆச்சரியப் படுவதில் வியப்பொன்றுமில்லை. இதோ படுபாவிலிருந்து பெல்லாரியோ எழுதிய கடிதம். இதை நீங்கள் ஓய்வாகப்படித்துப் பார்த்தால் சட்ட நிபுண ராகத் தோன்றியவர் போர்ஷியாவென்றும் அவருக்குக் குமாஸ்தாவாகத்தோன்றியவர் நெரிஸ்ஸா வென்றும் அறிந் திடுவீர். நீங்கள் இங்கிருந்து சென்றவுடனே நானும் நெரிஸ்ஸா வும் இவ்விடம் விட்டுச் சென்றேம். நீங்கள் வருவதற்குசற்று முன்னர்த்தான் நாங்கள் இவ்விடம் திரும்பினேம். லோரென் சோவைக் கேட்பின் நாங்கள் இவ்விடத்தில் இல்லாதது உண்மை என்று அறிய முடியும். நாங்கள் இன்னும் மாளி கையினுள் செல்லவில்லை" என்று போர்ஷியா எல்லோரை யும் நோக்கிக் கூறி விட்டு அண்டோனியோவை மாத்திரம் தனியாகப் பார்த்து "அண்டோனியோ உம் வருகை எம் மால் பெரிதும் வரவேற்கப் படுகின்றது. என்னிடத்திலி ருந்து ஓர் நற்செய்தி பெறப் போகின்றீர். எங்களைப்பற்றி நீர் அறிந்து ஆச்சரியப் படுவதைவிட நான் உமக்குத்தெரி விக்கும் செய்தியால் நீர் மேலும் ஆச்சரியமடைவீர். இதோ

இந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தால் உம்முடைய பெருங் கப்பல்களில் மூன்று பெருத்த செல்வமுடன் எதிர் பாராத விதமாக துறைமுகம் வந்து சேர்ந்துள்ளன" என்று சொல்லி ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்தாள்.

போர்ஷியாதான் சட்ட நிபுணர் என்று தெரிந்த பஸ்ஸானியோ "போர்ஷியா நீ சட்ட நிபுணராக என் முன்னிருந்து வாதாடியபோது உன்னை நான் அடையாளம் கண்டு கொள்ள முடியாது போயிற்றே! பேரன்பு மிக்க சட்ட நிபுணரே, நீர் என்படுக்கையறைத்தோழனுக இருக்க வேண்டும் நான் இல்லாத நேரத்தில் என் மனைவியுடன் நீர் படுத் துறங்குங்கள்" என்று போர்ஷியா முன்பு அவனைக் கேலி செய்த அதே வார்த்தைகளால் அவளை இப்போது கேலி செய்தான்.

போர்ஷியாவால் கொடுக்கப் பட்ட கடிதத்தைப்படித்த அண்டோனியோ, "பேரன்புமிக்க அம்மையே நீ எனக்கு உயிரையும் வாழ்வையும் அளித்துள்ளாய். என் கப்பல்கள் பத்திரமாக துறைமுகம் வந்துள்ளன என்ற செய்தி உண்மையே" என்று மகிழ்ச்சியுடன் நன்றி கலந்த முறையில் கூறினுன்.

பின்பு போர்ஷியா அங்கு நின்றிருந்த லோரென்சோவை நோக்கி, "என் குமாஸ்தா உனக்கும் மகிழ்ச்சி தரக் கூடிய ஒரு நல்ல பரிசு கொண்டுவந்துள்ளான்" என்ருள். அதற்குள் நெரிஸ்ஸா "அந்த வெகுமதியை நான் உனக்கு விலை எதும் பெருது கொடுக்கின்றேன். அது உனக்கும் ஜெஸ்ஸிக்காவுக்குமாக, இருவர்க்கும் உரியது. யூத ஷைலக் சொத்துக்கள் அனைத்தும் அவருடைய மரணத்திற்குப் பின்பு உங்கட்குச் சேர அவரால் எழுதித் தரப்பட்ட வெகுமதிப் பத்திரம் இதோ பெற்றுக் கொள்"

என்று லோரன்சோவிடம் பத்திரத்தைக் கொடுத்தாள். லோரென்சோ நன்றி தெரிவித்து அந்தப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டான்.

பின்பு போர்ஷியா எல்லோரையும் நோக்கி "இப்போது ஏறத்தாழ விடியற்காலையாகின்றது. நீங்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சிகளால் பூரண திருப்தி யடையவில்லை என்பதை நான் அறிகிறேன். எல்லோரும் உள்ளே சென்று அமர்வோம். பின்பு நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையாகவும் விளக்கமாகவும் பதில் சொல்கிறேன்!" என்றாள்.

போர்ஷியாவின் வார்த்தைகளைக் கேட்ட கிரேஷியானோ "ஆம் அப்படியே செய்வோம். அதற்கு முன் நான் நெரிஸ்ஸா எனக்களித்த மோதிரத்தை இனித் தவறாது காப்பாற்றுவேன் என்று உறுதிமொழி அளிக்கின்றேன்" என்றான்.

எல்லோரும் சிரித்துக்கொண்டே மகிழ்ச்சியுடன் மாளிகையினுள் நுழைந்தார்கள்.

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

Univ. Grants Commission

UNIVERSITY EXTENSION LIBRARY
18 DEC 1957
MADURAI

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

1269

உங்கள் நண்பர்களுக்குத்

திருமணமா?

இதோ,

பரிசுக்கேற்ற புத்தகம்!

பெண்ணின் பெருமை, கற்பின் உயர்வு அத்தனையும் சித்தரிக்கும் ஓர் அற்புத நாவல்!

# ★ நல்ல பெண்மணி ★

எழுதியவர்: கவிஞர். சுப்பு-ஆறுமுகம்

அழகிய மூவர்ண முகப்பு

விலை ரூ. 2—4—0

★

## கலைமன்றம்

த. பெ. எண். 275 : சென்னை-1.